# பொருளியல் நோக்கு


ஜனவரி
1978

உழவர் விவசாயம்

மக்கள் வங்கி வெளியீடு

Digitized By Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிப் பாதையில் உழவர் விவசாயம்







இன்றும் கூட ஸ்ரீலங்காவின் விவசாயம் பெருந்தோட்டத் துறை, பாரம்பரிய உழவர் துறை என இரு வேறு பிரிவுகளாக வகுத்தே நோக்கப்படுகின்றது. இத்தகைய வேறுபாட்டுக்குத் தெளிவான காரணங்களுண்டு. இவ்விரு துறைகளிலும் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம், இயக்க முறை உற்பத்தி நோக்கம் போன்றவையே இவையாகும். நாட்டின் முற்று முழுதான பொருளாதார அபிவிருத்தி, உள்நாட்டு விவசாயத் துறையின் துரித வளர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது என்ற உண்மை அண்மைக் காலங்களில் உணரப்படலாயிற்று.

வளர்முக உலகின் பல்வேறு நாடுகளைப் போன்றே ஸ்ரீலங்காவும் அதிகரித்துவரும் அதன் சனத்தொகையினருக்கு போதியளவு உணவு வழங்க வேண்டிய பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கின்றது. இத்தகைய பின்னணியில் நோக்கும்போது விவசாயத் துறையின் முன்னேற்றமும், உற்பத்தி அதிகரிப்பும் இன்றியமையாதனவாயிருக்கின்றன. எனவே கடந்த கால் நூற்றுண்டு காலத்தில் பாரம்பரிய விவசாயத் துறையை நவீனமயமாக்கல் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது.

ஆயினும் புதிய தொழில் நுட்பங்களின் பிரயோகம் சில பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக விவசாயியின் மூலதனத் தேவைகளை அது அதிகரித்திருப்பதுடன், நீர் வளமாக்கிகள், இரசாயனப் பொருட்கள் போன்ற உள்ளீடுகளில் தங்கியிருக்கும் நிலையைத் தீவிரமாக்கியுள்ளது. நாட்டின் உழவர் விவசாயத்துறை உள்ளாகி வரும் மாறுதல்களை இப்பக்கங்களிலுள்ள படங்கள் சித்தரிக்கின்றன. இடது மேல் மூலையிலிருக்கும் படம் நவீன நீர்ப்பாசன முறையினடிப்படையில் வயல்களுக்கு நீர் திசைதிருப்பப்படுவதைக் காட்டுகின்றது. காற்றினால் இயங்கும் குழாய்கள் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளும் மிக நவீன நீர்ப்பாசன உத்தியொன்றை வலது பக்கத்திலிருக்கும் படம் காட்டுகின்றது.









பாரம்பரியமாக உழவுக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் எருமைகளுக்குப் பதிலாக டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. (வலது—மத்தி)

நெல் தூற்றும் முறையும் இயந்திரமயமாக்கப்படுகின்றது. (வலது-கீழே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 3 இதழ் 10 ஜனவரி 1978

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## பொருளடக்கம்

### நிரல்கள்

2 நிகழ்ச்சிக்குறிப்பேடு
14 வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு
15 முகாமை
18 வியாபாரப் பொருள்கள்

### விசேஷ அறிக்கை

3 உழவர் விவசாயம்

### சிறப்புக் கட்டுரைகள்

இயன் வெஷேயர் 20 மணிலா—காலி அறைகளும் கூடிச்செல்லும் கடன்களும்
ஜீ. எம். பீ. டீ சில்வா 23 ஸ்ரீலங்காவின் ஹோட்டல் துறை—அதன் பரிமாணமும், பயன்படுத்தும் அளவும், அதைத் தேவையும்
கிரிஸ்டியன் ஸயன்ஸ் மொனிடர் 27 சீனாவின் பசுமைப்புரட்சி—கலாநிதி நோர்மன் போலாங்குடன் ஒரு பேட்டி
எம். ஏ. ஹுஸைன் மாலிக் 29 பணித்துறையாட்சியே பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்!

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்:

- ★ காட்டு வளம்—சூழல், மனித நலன் தொடர்பான அதன் பங்கும், பொருளாதார முக்கியத்துவமும்
- ★ வரிச் சலுகைகள் பற்றி உலக வங்கியிலிருந்து ஒரு குரல்
- ★ உலக உணவு வழங்கல்—எவ்வாறு தட்டுப்பாடு இருக்க முடியும்?

அட்டைப்படம்: உருவமைப்பு—பாலித்த கன்னங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக்குறிப்பேடு

டிசம்பர்

1 ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களம் தானியங்கள் கொள்வனவு செய்வதற்காக போலந்துக்கு 30 கோடி டொலர் கடன் வழங்கியுள்ளது.

2 சீனவிலிருந்து 300,000 தொன்களேயும், கொரியக் குடியரசிலிருந்து 100,000 தொன்களேயும் உள்ளடக்கியதாக இந்தோனேசியா 10 லட்சம் தொன் அரிசியைச் சமீபத்தில் கொள்வனவு செய்திருக்கின்றதென ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களம் அறிவித்தது.

3 அடுத்து வரும் ஆறு வருடங்களில் 12 லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் 23வது வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் கூறினர். மகாவலித் திட்டம், கொழும்பு அபிவிருத்தித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் போன்றன இத்தொழில்களை வழங்கும் பிரதான மூலங்களாக இருக்குமென அவர் சொன்னர்.

முதல்தர உற்பத்திப் பொருட்களினதும், மூலப் பொருட்களினதும் பாரிய கையிருப்புக்களை உருவாக்கிக்கொள்வதற்கான அரசியல், ராஜதந்திர முயற்சிகளை மேலும் தீவிரமாக்க வேண்டுமென ஜெனீவாவில் முடிவுற்ற வளர்முக நாடுகளின் குழு '77—மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

6 மொரிசஸ் நாட்டுக்காக 3.7 கோடி டொலர் கடன் வழங்குவதற்கு சர்வதேச லொயிட்ஸ் வங்கியுடன் இணைந்திருக்கும் 13 வங்கிகளுடன் பரோடா வங்கியும் சேர்ந்திருக்கின்றதென பம்பாயில் அறிவிக்கப்பட்டது. ஐரோப்பிய டொலர் சந்தையினுல் வெளிநாடொன்றுக்குக் கடன் வழங்கும் முயற்சியில் இந்திய வங்கியொன்று பங்கெடுத்த முதற்றடவை இதுவாகும்.

7 பெரு அரசாங்கம் அதன் நாணயத்தைப் பெறுமதியிறக்கம் செய்தது.

இயற்கை இறப்பர் உற்பத்தி நாடுகளின் ஒன்றியத்துடன் வியட்நாமும் சேர்ந்துகொள்ளுமென பிரதி வெளி நாட்டமைச்சர் வோ டொன் கியாங் தெரிவித்தார்.

9 நாடெங்கணுமிருக்கும் விவசாயக் காணிகளின் அபிவிருத்திக்குதவும் வகையில் விவசாய அபிவிருத்தி அதிகார சபையொன்றைத் தாபிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்தது.

10 லண்டன், ஸ்கொட்லாந்து திர்வை வங்கிகளின் சார்பில் மோர்கன் கிரேப்பெக் தாபனம் ஹங்கேரிய தேசிய வங்கிக்கு வழங்கிய 50 இலட்சம் ஸ்டேர்லிங் பவுண் கடனை பிரித்தானிய ஏற்றுமதிக்கடன் உத்தரவாதத் திணைக்களம் உத்தரவாதப்படுத்தியது. ஐக்கிய இராச்சிய மூலதனப் பொருள் சேவை ஏற்றுமதியாளருக்கும் ஹங்கேரிய கொள்வனவாளருக்கு மிடையேயிருக்கும் உடன்படிக்கைகளை நிதிப்படுத்த இது உதவுமென பினன்சியல் டைம்ஸ் தெரிவித்தது.

12 பத்து இலட்சம் டொலர் பெறுமதியான 4000 தொன் கோதுமையையும், விவசாய உபகரணங்களையும் சோவியத் ருஷ்யா கானவுக்கு வழங்கியிருக்கின்றதென 'வெஸ்ட் ஆபிரிக்கன் ஜர்னல்' தெரிவித்தது.

14 ஐரோப்பியச் சந்தையின் தளம்பல்களையடுத்து நிவ்யோர்க் நகரில் நடைபெற்ற தீவிரவர்த்தக நடவடிக்கைகளின் பின்னர் அமெரிக்க டொலர் இதுவரை கால மிகக் குறைந்த மட்டத்தையடைந்தது.

22 வரவு செலவுத்திட்டம் தேசிய அரசுப் பேரவையினுல் நிறைவேற்றப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்டத்தின் மிக முக்கிய அம்சம் அதனை அமுலாக்கம் செய்வதாகும் என நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனீ டீ மெல் கூறினர். 1978ம் ஆண்டை அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்றும் அவர் சொன்னர்.

ஐக்கிய அமெரிக்க நாணயம் பாதுகாக்கப்படுமென ஜனதிபதி கார்ட்டர் உறுதியளித்ததையடுத்து நிவ்யோர்க் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தையில் டொலரின் நிலை ஓரளவு ஸ்திரமடைந்தது.

23 'விசால கொழும்பு பொருளாதாரக் கமிஷன்' பற்றிய மசோதா நிதி, திட்டமிடல் அமைச்சரினுல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

28 பாரிசில் அமைந்திருக்கும் பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்தி நிலையத்தின் கூற்றுப்படி 1978ம் ஆண்டின் பிரித்தானியப் பொருளாதாரம் கடந்த ஆண்டை விடவும் சாதகமானதாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உழவர் விவசாயம்

1977ம் ஆண்டின் நெல் உற்பத்தி 8.4 கோடி புசல்களாக இருக்குமென கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நம் நாட்டு வரலாற்றில் நெல் உற்பத்தி 8 கோடி புசல் இலக்கினைத் தாண்டிச் செல்லும் முதற்றடவை இதுவாகும். 1978ன் உற்பத்தி 9 கோடி புசல்களை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விலக்குகள் நிறைவேறுமாயின் எம்மை நீண்ட காலம் ஏமாற்றிச் சென்ற சுயதேவைப்பூர்த்தி என்ற இலட்சியத்தை நாம் எய்திவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை. பொருளாதாரத் திட்டமிடலின் வெற்றியும், நாட்டின் முற்று முழுதான பொருளாதார வளர்ச்சியும் உள்நாட்டு விவசாயத் துறையின் உற்பத்தி அதிகரிப்பிலேயே தங்கியிருக்கின்றது. நீண்ட நெடுங் காலமாக நாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விவசாய அபிவிருத்தி இங்கு நிகழ்ந்துவிட்டதா என்ற வினாவுக்கான விடையைக் கண்டுபிடிக்க கடந்த 150 வருட காலமாக ஸ்ரீலங்கா பின்பற்றி வந்த விவசாய, நாணயக் கொள்கைகளையும், அவற்றினை அமுலாக்கம் செய்வதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பரிசீலனை செய்தல் பொருத்தமானதாகவிருக்கும்.

ஸ்ரீலங்காவின் உள்நாட்டு விவசாயம் பன்னூற்றாண்டு கால வரலாற்றுப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டதாயிருக்கின்றது; சனத்தொகையில் பெரும்பான்மை யோரின் சீவனோபாயமும் அதுவாகும். 19ம் நூற்றாண்டில் வளர்ச்சியடையத் தொடங்கிய பெருந் தோட்டங்கள் உள்நாட்டு விவசாயத்தில் ஏற்படுத்திய தாக்கம் பாரதூரமானதாகும். இதுவரை காலமும் பிழைப்பூதிய விவசாயத்தில் வேரூன்றியிருந்த பொருளாதாரம் படிப்படியாக நவீன ஏற்றுமதிப் பொருளாதாரமாக உருமாறத் தொடங்கிற்று. பாரம்பரியக் கிராமப் பொருளாதாரத்தில் பெருந் தோட்டத்துறை பூரணமாக ஊடுருவியதுடன் இவ்வுரு மாற்றம் முற்றுப் பெற்றது. பின்னர், கிராமீயப் பொருளாதாரம் சமுதாயத்தின் நாளாந்த தேவைகளை மிகக் குறைவாக நிறைவு செய்யும் நிலைக்கு மாறலாயிற்று. எனவே இவ்வாறாக எம் அடிப்படைத் தேவையான உணவுக்குக் கூட வெளிநாடுகளில் தங்கியிருக்கவேண்டிய நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டது. உழைப்புக்கூலி, தொழிற்சாலைகளை மையமாகக் கொண்ட தோட்டம், ஏற்றுமதிச் சந்தைக்கான உற்பத்தி போன்றவற்றைக் கொண்டிருந்த பெருந்தோட்டத் துறையானது கிராமிய உழவர்களுக்கு வழங்கிய உடனடி நன்மைகள் மிகச் சொற்பமே. இத்துறையிலிருந்து பெறப்பட்ட மிகை ஒன்றில் அத்துறையில் மீள் முதலீடு செய்யப்பட்டது; அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பங்குலாபமாகச் செலுத்தப்பட்டது. இதன் விளைவாக எமது உள்நாட்டு நெல்லுற்பத்திப் பொருளாதாரம் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாக தேக்கமுற்றிருந்தது.

பெருந்தோட்டத் தொழிற்றுறை நவீனமயமாக்கப்பட்டு, முதலாளித்துவக் கட்டுக்கோப்பில் வளர்ச்சி பெற்றது; மாறாக விவசாயத் துறை பிழைப்பூதியத் தொழிலாக மரபு ரீதியான தொழில் நுட்பத்தைக் கொண்டதாக இருந்தது. தனிப்பட்ட விவசாயியின் இலட்சியம் சுய தேவைப் பூர்த்தியாகவிருந்ததுடன், நெல்லுடன் உப உணவுப் பயிர்களையும் அவன் பயிரிட்டு வந்தான். சிறியளவு நிலம், பொருளியல் ரீதியாகப் பயனற்றவகையில் நிலத்தை மென்மேலும் துண்டாடல், மரபு ரீதியான தொழில்நுட்பம், விவசாயி நிலத்தை விருத்தி செய்து உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதனைத் தடுக்கும் குத்தகை ஒப்பந்தம், கிராமீய நிலவுடைமையாளர்களின் பிடியில் விவசாயியை சிக்கவைத்த கடன் பளு என்பன இத்துறையின் பிரதான அம்சங்களாகவிருந்தன. இரண்டாவது உலகப் போரையடுத்து வந்த சில வருடங்களில் ஸ்ரீலங்காவின் பொருளாதார அமைப்பினைப் புதிய பரிமாணங்களுக்கு இட்டுச் செல்லும் ஆக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமான ஒரு துறையாக இது வளர்ச்சி பெறும் வரையில் சிறு சிறு மாற்றங்களுடனான பழைய அமைப்பே தொடர்ந்து நிலவி வந்தது. இன்று நம் நாட்டின் அபிவிருத்தி உத்திகளின் பிரதான மையமாக உணவு உற்பத்தித் துறை இருந்து வருகின்றது.

## பொருளாதாரத்தில் உணவுற்பத்தித் துறையின் பங்கு

உணவுற்பத்தித் துறையின் முக்கியத்துவத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் நோக்கலாம்.

மொத்த தேசிய உற்பத்தியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் அதன் பங்கு முக்கியமானதாகும். ஒப்பீட்டு ரீதியிலான தேசிய கணக்கீட்டுத் தரவுகள் 1959ம் ஆண்டிலிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. பின்வரும் அட்டவணை 1960ம் ஆண்டிலிருந்து உணவு உற்பத்தித் துறையின் பங்கினை எடுத்துக்காட்டுகின்றது.

மொ. தே. உற்பத்தியும், விவசாயத் துறையும்
(1959 நிலையான விலைகளில்)
மூன்று வருட அசைவுச் சராசரியில் (ரூ. மில்.)

| | 1960 | 1965 | 1970 | 1975 |
|---|---|---|---|---|
| 1. நெல் | 350.0 | 377.4 | 597.13 | 549.6 |
| 2. உப உணவுப் பொருட்கள் | 105.1 | 116.5 | 240.8 | 501.3 |
| 3. பிரதான ஏற்றுமதிப் பயிர்கள் | 1337.0 | 1547.4 | 1524.7 | 1449.1 |
| 4. ஏற்றுமதிப் பயிர்கள் | 21.33 | 22.0 | 24.9 | 59.4 |
| மொத்த விவசாயமும், மீன்பிடியும் | 2450.5 | 2846.6 | 3332.8 | 3576.2 |
| மொ. தே. உ. | 6202.2 | 7577.4 | 9570.8 | 11096.0 |

மூலம்: ஸ்ரீ லங்கா மத்திய வங்கி.

மேற்காணும் தரவுகள் உப உணவுப் பயிர்த்துறை பெற்றுவருகின்ற முக்கியத்துவத்தினையும் காட்டுகின்றன. 1976ம் ஆண்டளவில் உப உணவுத் துறையின் பங்கு ஏறத்தாழ நெல்லின் அளவை அண்மித்தது. இறக்குமதிக் கட்டுப்பாட்டின் விளைவாக ஏற்பட்ட சாதகமான விலை நிலைமை கடந்த ஆறு, ஏழு வருடங்களாக நடைபெற்ற இவ்வபிவிருத்திக்குக் காரணமாக அமைந்தது. குறிப்பிட்ட ஒரு பயிரின் மீது கூடிய கவனம் செலுத்துவதனால் எமது நிலம், நீர் ஆகிய மூல வளங்களிலிருந்து உச்ச மட்டப் பயனைப் பெறவியலாது என்பதனை ஆட்சியாளரும் உணர்ந்திருந்தனர். வயல், நெல் மட்டும் பயிரிடப்படும் ஓரிடமன்று; நீர், நெல்லுக்காக மட்டும் பயன்படுத்தப்படும் ஒரு வளமுமன்று." விவசாயத்திட்டம் 1971—77 தொகுப்பு-1 இவ்வாறு கூறுகின்றது.

மேற்காணும் அட்டவணை சென்ற வருடங்களில் உணவுப் பயிர்த் துறையின் மாறிவரும் முக்கியத்துவத்தையும் காட்டி நிற்கின்றது. ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம் உணவு உற்பத்தித்துறையை மிஞ்சிய பொழுதிலும், ஏற்றுமதித் துறையின் ஒப்பீட்டு ரீதியான பங்கு கடந்த சில வருடங்களில் குறைந்தே வந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் உணவுப் பயிர்களின் விகிதாசாரம் 1960ல் 18.5% இலிருந்து 1975ல் 29.3% ஆக அதிகரித்துள்ளது. (விவசாயம் கால நிலையினால் எளிதாகப் பாதிக்கப்படுவதால், மூன்று வருட அசைவுச் சராசரி கணிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.)

தொழில் வாய்ப்புக்களை வழங்கும் ஒரு மூலம் என்ற வகையிலும்,உணவுப் பயிர்ச் செய்கைத் துறையின் முக்கியத்துவத்தினை நோக்கலாம். கீழ்க்காணும் அட்டவணை நிலைமையை விளக்குகின்றது.

ஊதியம் உழைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுள் 52%தினர் விவசாயத் துறையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். ஒப்பீட்டு ரீதியில் மிகக் கூடிய வேலை வாய்ப்பினை வழங்கும் தனிப்பயிர் நெல்லாகும்.

அடுத்து குடும்ப வரவு செலவுப் பட்டியலில் அரிசியும், உணவுப் பயிர்களும் வகிக்கும் பங்கு இத்துறையின் முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது. 1973ம் ஆண்டு நுகர்வோர் ஆய்வின்படி மொத்த உணவுச் செலவில் அரிசியின் பங்கு 27%ஆகவும் மாப் பொருள், பருப்பு வகை, ஏனைய தானியங்கள் (கோதுமை மா தவிர) என்பவற்றின் விகிதாசாரம் மொத்த செலவில் 5% ஆகவுமிருந்தது.

### விவசாய வளர்ச்சி

நெல், மேட்டு நிலப்பயிர் என்பவற்றின் ஒப்பீட்டு ரீதியான வளர்ச்சி, விவசாய உற்பத்திப் போக்கு தொடர்பான சுட்டெண்களின் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

### நெல் விவசாயத் துறை

புராதன காலம் முதலாகவே நெல், விவசாயத் துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்ததோடு, கிராமீயப் பொருளாதாரத்தின் மூலாதாரமாகவும் விளங்கியது. கிராமீயப் பொருளாதாரம், கலாச்சார வாழ்க்கை என்பவற்றின் ஆதார சுருதியாக இது விளங்கியது எனலாம். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் விவசாயக் கொள்கை பிரதானமாக நெல் விவசாயத் துறையின்பாற் பட்டமைந்ததிலிருந்து இது புலனாகின்றது.

1948ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சகல திட்டமிடல்களினதும் பிரதான நோக்கம் அரிசியில் தன்னிறைவு காண்பதாக அமைந்தது. அடுத்தடுத்து அமுலுக்கு வந்த ஒவ்வொரு திட்டங்களிலும், இக்குறிக்கோளை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வேறுபட்டனவாகவிருந்தன. உற்பத்தியதிகரிப்பினை இரு வேறு வழிகளில் அடையலாம்.

விவசாயத் துறையில் தொ ழில் வாய்ப்பு—1971

| | (1000) |
|---|---|
| விவசாயம், காட்டுத்துறை மீன்பிடி | 1828.98 |
| நெற் (அரிசி) பயிர்ச் செய்கை | 802.8 |
| ஏனைய நிலத் தானியங்கள் | 1.8 |
| காய்கறியும், பழச் செய்கையும் | 62.2 |
| தேயிலை, இறப்பர் தென்னை | 740.3 |
| ஏனைய பயிர்ச் செய்கைகள் (சிறு ஏற்றுமதிப் பயிர் தவிர) | 132.4 |
| கால்நடை | 4.7 |

மூலம்: சனத்தொகை மதிப்பீடு 1977 — பொருளியல் ரீதியில் உழைக்கும் சனத்தொகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய உற்பத்தி

1962—100

| | நெல் | மேட்டுநிலப் பயிர் | மிருக வளர்ப்பு | மொத்தச் சுட்டெண் (எல்லா விவசாய உற்பத்தியும்) |
|---|---|---|---|---|
| 1962 | 100 | 100 | 100 | 100 |
| 1976 | 105.2 | 130.3 | 121.0 | 109.8 |
| 1974 | 134.4 | 132.4 | 125.9 | 117.2 |
| 1972 | 161.3 | 157.2 | 177.7 | 129.2 |
| 1970 | 131.0 | 174.0 | 166.4 | 124.3 |
| 1968 | 160.0 | 269.4 | 140.5 | 122.9 |
| 1964 | 125.1 | 286.99 | 155.1 | 120.3 |

மூலம்: குடி விவரப் புள்ளி விவரயியல் திணைக்களம்.

(அ) புதிய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்தல், செறிவுப் பயிர்ச் செய்கையை அதிகரித்தல் என்பன மூலம் விளை நிலப் பரப்பினை விரிவுபடுத்தல்.

(ஆ) பசளை, கிருமிநாசினிகள், கூடிய விளைச்சல் தரும் தானியங்கள் என்பன மூலம் ஏற்கனவே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விளைநிலங்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

இவ்விரு நடவடிக்கைகளுக்கும் கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவம் வேறுபட்டதாக அமைந்துள்ளது. ஐம்பதுக்களின் ஆரம்பத்தில் உலர் வலயத்தில் பெருமளவில் காணப்பட்ட பயிர் செய்யப்படாத நிலமும், வளர்ச்சி பெற்று வந்த குடியேற்றத் திட்டங்களும் முதலாவது நடவடிக்கைக்குச் சாதகமாயமைந்தன. “எமது திறமைக்கு ஏற்ற வகையில் எமது அத்தியாவசிய உணவையும், ஏனைய தேவைகளையும் உள்நாட்டு உற்பத்தியின் மூலம் பூர்த்தி செய்து கொள்வதே எம் முதல் நோக்கமாகும்.” போரின் பின்னர் 1946ல் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் இவ்வாறு கூறின. இத்திட்டமும், இதனையடுத்து வந்த ஆறுண்டுத் திட்டமும் அமுலாக்கப்படவில்லை.

1958ம் ஆண்டின் பத்து வருடத் திட்டம், தேசிய திட்டமிடல் முயற்சிகளுள் மிகக் கூடிய இலட்சியங்களை தன்னகத்தே கொண்டதாகவிருந்தது. “குறிப்பிடத்தக்களவு அரிசி உற்பத்தியதிகரிப்பு மிகப் பிரதான நோக்கமாகும். தற்போதைய அரிசி உற்பத்தியை 1968ம் ஆண்டில் இருமடங்கிற்கும் கூடுதலாக அதிகரிப்பதனை இது நோக்கமாகக் கொள்கின்றது. ஏக்கருக்கான விளைச்சலை அதிகரிப்பதில் கூடிய கவனஞ் செலுத்தப்படும்.”

சுயதேவைப் பூர்த்திக்கான பிரதான வழிகளிலொன்றாக செறிவுப் பயிர்ச் செய்கையைக் கோடிட்டுக் காட்டியதன் மூலம் இத்திட்டம் முன்னைய திட்டங்களிலிருந்தும் வேறுபட்டு நிற்கின்றது. முன்னைய திட்டங்களைப் போன்றே இப்பத்தாண்டுத் திட்டமும் அமுல் நடத்தப்படவில்லை. இதற்கான முதலீடு தேவையையிடக் குறைவானதாகவிருந்தது. உற்பத்தியை அதிகரிப்பதற்கு குறைந்த மூலதனச் செலவினை வலியுறுத்திய 1962ம் ஆண்டின் குறுங்கால அமுலாக்கல் திட்டத்துக்கும் இதே கதி நேர்ந்தது.

அறுபதுக்களின் இறுதிப் பகுதியில், விவசாயத் திட்டமிடல், அமுலாக்கம் என்பன தொடர்பாக மிகக் கூடிய கவனமெடுக்கப்பட்டது. 1966ம் ஆண்டின் விவசாய அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகள், நெல் விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக ஐந்து வருடகாலச் செயற்றிட்டமொன்றினை முன்வைத்தது. குறித்த ஒரு செயல்திட்ட நடவடிக்கைகளின் மூலம் மாத்திரமே அரிசி உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம் என்ற நோக்கினை அடிப்படையாக வைத்தே இவ்வணுகு முறை மேற்கொள்ளப்பட்டது. உள்ளீடுகள், கடன், நிறுவன அமைப்புக்கள் போன்ற சேவைகள் தொடர்பான விவரங்களைத் திட்டம் கொண்டிருந்தது. “விரிவான சிறந்த திட்ட அமுலாக்கத்துடனும், தூரநோக்குடனும் செயற்படுத்தப்படாத ஒரு சிறந்த திட்டம் பலவீனமடையலாம்” என இத் திட்டம் கூறியது. இந் நோக்கங்களுக்கமைய, பிராந்திய மாவட்ட நடவடிக்கைகளை தேசிய செயற்திட்டத்துடன் ஒன்றிணைக்கும் பொருட்டு நிறுவன அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இம் முன்மொழிவுகள் வருடாந்த செயற்றிட்டங்கள் என்ற வகையில் அமுலாக்கப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் 1970ம் ஆண்டளவில் ஓரளவு எய்தப்பட்டன.

பிரதேச ரீதியில் செறிவான பயிர்ச் செய்கை என்ற இலட்சியமே இக்காலத் திட்டங்களின் மையக்கருவாக இருந்தது. நாட்டில் காணப்பட்ட விவசாய பிராந்திய உற்பத்தி வளங்களின் தன்மைக்கேற்ப கொள்கை ஆக்கம், ஆராய்ச்சி என்பன மேற்கொள்ளப்பட்டன.

1972—1976ம் வருடங்களை உள்ளடக்கிய ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் அடுத்த கட்டத்திற்கான அத்திவாரமிடப்பட்டது. ஏற்கனவே பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட்ட நிலங்களின் உற்பத்தியதிகரிப்பு இத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மொத்த உற்பத்தியதிகரிப்பில் இது 80% பங்களிப்பினைச் செய்யுமென எதிர்பார்க்கப்பட்டது. 1976ம் ஆண்டின் நெல்லுற்பத்தி 11.6 கோடி புசலாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது; இது 97 சத வீத சுயதேவைப் பூர்த்தியாகும். சட்டச் சீர்திருத்தங்களின் மூலம் விவசாய நிறுவன ஒழுங்குகள் மாற்றியமைக்கப்பட்டன. உற்பத்திக் குழுக்களின் நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்தும் வகையில் பிரதேச ரீதியாக விவசாய உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. தம் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் நிலங்களின் உச்சப்பயன்பாட்டை அடைவதற்கான சகல அதிகாரங்களும் இச்சபைகளுக்கு வழங்கப்பட்டன. விவசாயக் கடன், காப்புறுதித் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. குறிப்பாக 1974/75, 1975/76 காலங்களில் ஏற்பட்ட வரட்சி காரணமாக இத்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

### வளர்ச்சி

“பல்லாயிரக் கணக்கான சிறுநில விவசாயிகளைக்கொண்ட நெல்லுற்பத்தித்துறை சிக்கலான ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். தொழில்நுட்பம்,அறிவு,சம்பிரதாயம், பொருளாதார ஊக்கி, கூட்டுறவு நடவடிக்கை, குத்தகை, சட்டம், அரசாங்க நிர்வாகம் போன்ற இன்னோரன்ன பல சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை உள்ளடக்கிய ஓரமைப்பாக அது இருக்கின்றது.” நெல்லுற்பத்தித் துறையில் இலக்குகளை எய்த முடியாமலிருப்பதற்கான காரணங்களைப் பரிசீலனை செய்யும் டீ. ஆர். ஸ்நொட்கிராஸ் “சிலோன்” என்ற தன் நூலில் இவ்வாறு கூறுகின்றார்.

கடந்த இரு தசாப்தங்களிலும் நெல் விவசாயத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. 1959/60 ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவான 43.0 மில். புசல்களிலிருந்து,1969/70 ஆண்டுகளில் 77.4 மில். புசல்களாக உற்பத்தி அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு 65 சதவீதத்துக்கும் கூடுதலானதாகும். 1959/60 ஆண்டுகளில் ஏக்கருக்கான விளைச்சல் 36.38 புசல்களிலிருந்து 1971/72 ஆண்டுகளில் 46.87 புசல்களாக அதிகரித்தமையே பிற்பட்ட வருடங்களில் உற்பத்தியதிகரிப்பிற்கான பிரதான காரணமாயமைந்தது. 1959/60—1971/72 காலக்கட்டத்தில் நெல் விளைநிலமும் 1578929 ஏக்கர்களாக அதிகரித்தது. 1975/76 ஆண்டுகளில் 60 மில். புசல்களாக விருந்த உற்பத்தி, 1976/77 ஆண்டுகளில் 80 மில். புசல்களுக்கும் கூடுதலாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது; இது இதுவரைகால மிகக் கூடிய தொகையாகும்.

இவ்வளர்ச்சி சீரானதாக அமையவில்லை; அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்தவுமில்லை. மேலும் இக்காலப் பகுதியில் பல ஆண்டுகளில் மோசமான விளைச்சல் காணப்பட்டது. 1955/56, 1958/59, 1964/65, 1974/75 என்பன இங்ஙனம் விளைச்சல் பாதிப்புற்ற ஆண்டுகளாகும். இதே வேளை, 1963/64, 1969/70, 1973/74, 1976/77 என்பன பெரு விளைச்சல் கிட்டிய ஆண்டுகளாகும். புள்ளி விவரங்கள் உயர்ந்து செல்லும் ஒரு போக்கைக் காட்டுவதே இங்கு முக்கியமாக அவதானிக்கத்தக்கதாகும். அட்டவணை 1-ல் இது தெளிவாகக் காட்டப்படுகிறது.

வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இக்காலப் பகுதியை நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

(1) 1950—59—4 கோடிப் புசலுக்குக் குறைந்த உற்பத்தி

(2) 1959—65 — 4 கோடி முதல் 5 கோடி வரையான உற்பத்தி

(3) 1966—70 — 5 கோடி முதல் 7 கோடி 80 இலட்சம் புசல் வரையான உற்பத்தி

(4) 1971—77 — 6 கோடி முதல் 8 கோடி புசல் வரையான உற்பத்தி

(இக்காலப் பிரிவில் நிலவிய மோசமான கால நிலை, உற்பத்தியை வெகுவாகப் பாதித்தது)

பங்கை வகிக்கின்றன என்பது ஆராயப்பட வேண்டும்.

நிலப்பரப்பளவு அதிகரிப்பு இது இரு விதங்களில் நிகழலாம்:

(1) பண்படுத்தப்பட்ட நிலத்தில் ஏற்படக் கூடிய அதிகரிப்பு.

(2) போகங்களில் ஏற்படக் கூடிய அதிகரிப்பு (அதாவது ஒரே நிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போகங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படல்)

முதலாவதாகக் கூறப்பட்ட பண்படுத்தப்பட்ட நிலத்தின் அதிகரிப்பானது, அரசாங்க நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது விவசாயிகளின் சொந்த முயற்சி என்ற இரு விதங்களில் ஏற்படலாம். கடந்த 25

அட்டவணை—1

நெல் உற்பத்தி—உற்பத்தி இலக்குகளும் சாதனைகளும்

1966—70 — 1972—76

| ஆண்டு | இலக்கு (10 இலட். புசலில்) | உண்மை விளைச்சல் | உண்மை வீதம் விளைச்சல் | ஆண்டு | இலக்கு (10 இலட். புசலில்) | உண்மை விளைச்சல் | உண்மை விளைச்சல் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1966 | 51.97 | 45.79 | 88.1 | 1972 | 78 | 62.9 | 80.6 |
| 1967 | 53.95 | 54.96 | 101.9 | 1973 | 94 | 62.9 | 66.9 |
| 1968 | 61.45 | 64.59 | 105.1 | 1974 | 100 | 76.8 | 76.8 |
| 1969 | 71.34 | 65.86 | 92.3 | 1975 | 107 | 55.3 | 51.7 |
| 1970 | 74.97 | 77.4 | 103.2 | 1976 | 115 | 60.0 | 51.7 |

நெல்லுற்பத்தியானது, 1958 முதல் வருடாந்தம் 3.8% என்ற வளர்ச்சி வீதத்தில் பெருகி வந்துள்ளது. அண்மைய வருடங்களில் கால நிலை சிறப்பாகக் காணப்பட்டிருப்பின் இவ் வீதம் மேலும் உயர்ந்து காணப்பட்டிருக்கும். உற்பத்தியிலேற்பட்ட இவ்வதிகரிப்பானது, பயிர்ச் செய்கை இடப்பரப்பிலும், ஏக்கருக்கான சராசரி விளைச்சலிலும் ஏற்பட்டதாகும். உப காலப் பிரிவுகளை அவதானிக்கையில், இவ்விரு அதிகரிப்பு வீதங்களும் ஏறத்தாழ ஒரே போக்கையே காட்டுவதைக் காணலாம். எனினும், 1966/70 உப காலப் பிரிவு இதற்கு விதிவிலக்காகவுள்ளது. 1966ம் ஆண்டின் சாதகமற்ற விளைச்சல் காரணமாக, இக் காலப் பகுதியின் புள்ளி விவரங்கள் உண்மை நிலையைக் காட்டாது விடலாம். உயர் இன நெல் வர்க்கங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டு, அவை பெருமளவில் விவசாயிகளிடையே பரப்பப்பட்ட போதிலும், மொத்த உற்பத்திக்கு, ஏக்கருக்கான விளைச்சல் அதிகரிப்பானது கடந்த காலங்களில் மிகக் குறைந்த பங்கையே அளித்துள்ளது. உண்மையில், பெருகிச் செல்லும் மொத்த உற்பத்தியில் இவ் ஏக்கருக்கான விளைச்சல் அதிகரிப்பும், பயிர் செய்யப்படும் இடப்பரப்பு அதிகரிப்பும் எத்தகைய

ஆண்டு காலப் பகுதியுள் பண்படுத்தப்பட்ட நிலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பின்வருமாறு: (1952-ம் ஆண்டின் உற்பத்திக் குறியீடு 100 எனக் கொள்ளப்பட்டுள்ளது)

| ஆண்டு | ஏக்கர் | குறியீடு |
|---|---|---|
| 1952 | 15,49,857 | 100 |
| 1960 | 14,08,922 | 120 |
| 1965 | 9,64,484 | 132 |
| 1970 | 11,60,097 | 146 |
| 1976 | 12,72,664 | 161 |

இவ் வகையில், இக் காலப் பகுதியில், 5 இலட்சம் ஏக்கருக்கும் சற்றுக் கூடுதலான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பல தொடங்கப்பட்டமையே இவ்வதிகரிப்புக்கான அடிப்படைக் காரணமாகும்; அத்துடன், நெல்லுக்குக் கிடைத்த உயர் விலைகளும் இதற்கு ஓரளவு காரணமாயிற்று.

செறிவான (அதாவது ஒரு போகத்துக்குக் கூடிய) நெற்பயிர்ச் செய்கைக்கும் நீர்ப்பாசனம், நெல்லுக்குக் கிடைத்த உயர் விலைகள், பல்வேறு மானியங்கள் என்பன காரணங்களாகக் காணப்பட்டன. எனினும் இச் செறிவான பயிர்ச் செய்கைக் குறியீடு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதையும் காட்டவில்லை. காலநிலை நிலைமைகளைப் பொறுத்து இவ்விகிதாசாரம் மாறிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது. சீரான காலநிலை காணப்பட்ட ஓர் ஆண்டில் இரு போகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலத்தின் விஸ்தீரணத்தை அறிந்துகொள்ளலாம்.

**நெற் பயிர்ச் செறிவு**

| 1952 | 120.5% |
|---|---|
| நல்ல விளைச்சல் கிடைத்த ஆண்டுகள் | |
| 1964 | 126.9% |
| 1970 | 133.1% |
| 1974 | 136.1% |

மகாவலித் திட்டம் அமுலுக்கு வந்தவுடன் இந்நிலைமையில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், இவ் விஷயத்தில் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காணப்படவில்லையென்பது கவனிக்கத்தக்கதாகும். அதிக விளைச்சலைத் தரும் புதிய உயர் இன நெல் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டமை, புதிய பல நீர்ப்பாசனத் திட்டங்கள், அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்கிய ஏனைய ஊக்குவிப்புத் திட்டங்கள் போன்ற பல காரணங்களின் நிமித்தம் செறிவான பயிர்ச் செய்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்க வேண்டுமெனினும் பல வேறு காரணங்களால் இது நிகழவில்லை.

உற்பத்தி நிலைமைகளை அவதானிக்கையில், தேசிய அறுவடை நிலப்பரப்பின் போக்குகள் முக்கிய இடம் பெறுகின்றன. குறித்த இக் காலத்தைப் பொறுத்தளவில், தேசிய அறுவடை நிலப்பரப்பின் அதிகரிப்பு வீதம் (வருடாந்த மொத்தம்) 1.9% மாத்திரமே என்பது கவனிக்கத்தக்கது. உப காலப் பிரிவுகள் ரீதியான வளர்ச்சி பின்வரும் நிலைமையைக் காட்டி நிற்கிறது:

| ஆண்டு | அதிகரிப்பு வீதம் |
|---|---|
| 1952—59 | 1.4% |
| 1960—64 | 2.0% |
| 1966—70 | 1.4% |
| 1971—76 | 3.3% |

1971—76ம் ஆண்டுகட்கிடையேயான காலப் பகுதியில் தொடர்ந்து ஏற்பட்ட வரட்சிகள் நெற்செய்கை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்படுத்திய தாக்கம் தெளிவாகத் தெரிகிறது. சுமார் 70,000 ஏக்கர் முதல் 2,44,000 ஏக்கர் வரையான நிலப்பரப்பு இதனாற் பாதிப்புக்குட்பட்டது: சுமார் ஒரு கோடி புசல் அளவு உற்பத்திக் குறைவு காணப்பட்டது.

**விளைச்சல் அம்சங்கள்**

மொத்த உற்பத்தியை அதிகரிப்பதில், ஏக்கருக்கான விளைச்சலில் ஏற்படும் அதிகரிப்பும் முக்கிய ஓர் அம்சமாகிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, உயர் விளைச்சல் தரும் நெல் இனங்களைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றை விவசாயிகளிடையே பரப்புவதிலும் பெரு முன்னேற்றங்கள் ஏற்பட்டபோதும், ஸ்ரீலங்காவின் ஏக்கருக்கான சராசரி விளைச்சல் ஆசியாவின் மிகக் குறைந்த விளைச்சல் ஒன்றாகவே இருக்கின்றது. ஏக்கருக்கான வருடாந்தச் சராசரி விளைச்சல் இன்னும் 45க்கும் 50 புசலுக்கும் இடைப்பட்டதாகவே காணப்படுகிறது. 1950ம் ஆண்டு காலப் பகுதிகளிலும் காணப்பட்டதைவிட, இது 50 சதவீத அதிகரிப்பாகும். இது சராசரி விளைச்சலே என்பதும், உண்மையான விளைச்சல் இடத்துக்கிடம் கூடிக் குறைகிறதென்பதும் நினைவிற் கொள்ளத் தக்கது; உயர் ரக நெல் இனங்கள் பரவலாக்கப்பட்டும் விளைச்சல் குறைவாக இருப்பது இங்கு அவதானிக்கத்தக்கதாகும்.

**தன்னிறைவு—பிரச்சினைகளும் எதிர்காலமும்**

“தன்னிறைவு என்பதற்குப் பல வித விளக்கங்களைக் கொடுக்கலாம்; ஆனால், பொதுவாகப் பொதுமக்கள் கருதுவது உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கி இறக்குமதிகளை முற்றாக நிறுத்துவதாகும். அரிசியில் தன்னிறைவு எய்த வேண்டுமென்பது பொது மக்களின் கவனத்தை எப்போதும் அனுதாபத்துடன் ஈர்த்து வந்துள்ளது. இதன் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகள் மாத்திரமின்றி, அது ஒரு தேசியப் பெருமைக்குரிய அம்சமாகவும் கருதப்படுவதே இதற்குக் காரணமாகும்.” 1971—77ம் ஆண்டுக்கான விவசாய அபிவிருத்தித் திட்ட முற்பிரதி இங்ஙனம் கூறுகிறது.

1970களின் ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா அரிசித் தேவையில் தன்னிறைவெய்துமென பல சர்வதேச அறிக்கைகள் ஹேஷ்யம் கூறியிருந்தன. கடந்த காலத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், தன்னிறைவு எய்தல் தொடர்பான சகல முற்கூற்றுக்களும், ஹேஷ்யங்களும், முடிவுகள் சரியாக அமையும் என்ற அளவுக்கு மீறிய நம்பிக்கையின் அடிப்படையிற் பிறந்தனவாகவே காணப்பட்டன. திட்ட இலக்குகளையும், உற்பத்திச் சாதனைகளையும் பார்க்கையில், 1966—78ன் விவசாய அபிவிருத்தி முன்மொழிவுகள் நல்ல உற்பத்திச் சாதனைகளை அளித்தன. இத்திட்டத்தின் இலக்குகள் யாவும் 1970 அளவில் பரவலாக எய்தப் பெற்றன. 1972—76ன் ஐந்தாட்டுத் திட்டம், 1976 அளவில், 11 கோடி 60 இலட்சம் புசல் உற்பத்தி இலக்கை நிச்சயித்திருந்தது. ஆனால், இக் காலப் பகுதியில் அடையப் பெற்ற உற்பத்திச் சாதனைகளுக்கும், இலக்குகளுக்குமிடையே மிகப் பெரிய வேறுபாடு காணப்பட்டது. 1972, 1973, 1975, 1976ம் ஆண்டுகளில் குறிப்பாகப் பயிர் விளைச்சல் மோசமாகக் காணப்பட்டது. 1976ல், இலக்கில் 52%தான் அடையப்பட்டது. 1971க்கும் 1976க்கும் இடையேயான வருடாந்த உற்பத்தி மொத்த வளர்ச்சி வீதம் எதிர்மாறான ஒன்றாகவே காணப்பட்டது. எனினும், 1976/77ன் பெரும் போகத்துடன் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது போற் தோன்றியது. இக் காலப் பகுதியில் மொத்தம் 5 கோடி 48 இலட்சம் புசல் நெல் விளைச்சல் கிட்டிற்று; அத்துடன் 1977ல், வருடாந்த உற்பத்தி 8 கோடி புசலைத் தாண்டியது என்பதையும் இது காட்டியது.

தன்னிறைவு தொடர்பான எதிர்கால மதிப்பீடுகளை விரிவான அடிப்படையில் நிர்ணயித்தல் கடினம்; எனினும், இவ்விஷயம் தொடர்பாக சில பூர்த்தியற்ற எடுகோள்களின் அடிப்படையில் மேலோட்டமான சில அம்சங்களைக் கவனிக்கலாம்.

அரிசிக்கான மொத்தக் கேள்வியைப் பொறுத்தளவில், இரு கோட்பாடுகளை இனங் காண வேண்டும்.

(1) போஷாக்கு அல்லது ஏனைய காரணிகளின் அப்படையில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச தலா நுகர்வின் அடிப்படையில் அமைந்த மதிப்பீடுகள்,

(2) கழிவுகள், விதை நெல் முதலியனவற்றைக் கழித்து, உற்பத்தி இறக்குமதி என்பனவற்றின் கூட்டுத் தொகை காட்டும் உண்மையான நுகர்ச்சி மதிப்பீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிறைவு என்பது ஒருவகையில் ஒரு சார்பு ரீதியான கோட்பாடாகும்.

நுகர்வோர் நிதி ஆய்வுகள், உணவு சமநிலை அறிக்கைகள் முதலியவற்றின் அடிப்படையில், தலா நுகர்ச்சிப் போக்குகளை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒருவரது தலா அரிசி நுகர்வு 100 கிலோ கிராம் எனக் கொள்வது பொருத்தமெனத் தோன்றுகின்றது. கோதுமை மாவையும் உள்ளடக்கும் எமது தானிய நுகர்ச்சியானது, சராசரியளவில் பார்க்கையில் போஷாக்கு மட்டத்தை ஏறத்தாழ அடைந்துள்ளதென்பதை பல்வேறு ஆய்வுகளும் காட்டி நிற்கின்றன.

எதிர்கால ஜனத்தொகை அதிகரிப்புக் கணிப்புத் தரவுகளையும், எடுகோளடிப்படையிலமைந்த 100 கிலோ கிராம் தலா நுகர்வையும் அடிப்படையாகக் கொண்டு, கேள்விக்கான சில பூர்த்தியற்ற மதிப்பீடுகளைக் கணிக்கலாம். உயர்ந்த ஜனத்தொகை வளர்ச்சிக் கணிப்பைக் கருத்திற் கொண்டு பார்ப்பதாயின், (1981ல் 1 கோடி 59 இலட்சத்து 60 ஆயிரம் பேர்) 1981ல் சுமார் 12½ கோடி புசல் நெல் தேவைப்படும். இது தேவைப்படும் மொத்த நுகர்ச்சியளவில் 10% விதை நெல், மற்றும் கழிவு விகிதாசாரத்தையும் கருத்திற்கொண்டே கணிக்கப்பட்டது. குறைந்த ஜனத்தொகைக் கணிப்பீட்டின்படி 12 கோடி புசல் நெல் தேவைப்படும். வருமான அதிகரிப்பின் விளைவாக தலா நுகர்வு 105 கிலோ கிராமாக அதிகரித்தால், மொத்தத் தேவை, சுமார் 13 கோடி புசலாக இருக்கும்.

அடுத்த 5 ஆண்டுகளின் உற்பத்தி மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், இப்புள்ளி விவரங்கள் அவற்றுடன் ஒத்துப் போகாது காணப்படலாம். கடந்த காலப் போக்குகளின் அடிப்படையில், இதனைக் கணிப்பதின் அபாயத்தை அண்மைக் கால அனுபவங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. எனினும், இக் காலப் பகுதியில் பண்படுத்தப்படவுள்ள புதிய நிலப் பரப்பு பற்றிய விவரங்களை நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்கள் மூலம் தெரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. 1981 அளவில் பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 1,20,000 ஏக்கர் நிலம் கொண்டுவரப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஏக்கருக்கான 60 புசல் சராசரி விளைச்சலுடன், 12 கோடி 30 இலட்சம் புசல் நெல் உற்பத்தி செய்யப்படுமென உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சீரான கால நிலை, விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல், உரம், உபகரணங்கள், நிலம், கடன் வசதிகள் முதலியன யாவும் தடையின்றிக் கிட்டும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே இது நிர்ணயிக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. உத்தேச தேவைகளையும், உற்பத்தி இலக்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 1980ம் ஆண்டளவில் தன்னிறைவு காணக்கூடிய சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

உணவில் அல்லது மொத்த தானிய நுகர்ச்சியில் தன்னிறைவு என்பது வேறுபட்ட ஒரு விஷயமாகும். நாட்டின் தானிய நுகர்ச்சியில் கோதுமை மா ஏறத்தாழ நிரந்தரமான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டதால், இறக்குமதி செய்யப்படும் இக்கோதுமை மா நிலைமைகளுக்கேற்பவே இத்தன்னிறைவு விகிதாசாரம் அமைந்து காணப்படும். இலங்கை பெருமளவு தானியங்களை உற்பத்தி செய்துள்ளதென்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. இருந்தும் இவ்விகிதாசாரம் 60 %க்கும் குறைவாகவே—ஆசிய நாடுகளுக்கிடையே ஆகக் குறைந்த விகிதாசாரம்—உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

முழுத்தானிய நுகர்ச்சியுடனுன உள்ளூர் உற்பத்தி விகிதாசாரம்

(தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆசிய நாடுகளில்)

| | 1963—1967 | 1970—1974 |
|---|---|---|
| இந்தியா | 93.8 | 89.2 |
| பாகிஸ்தான் | 91.4 | 97.1 |
| வங்காளதேசம் | 93.3 | 99.6 |
| மலேசியா (மேற்கு) | 56.2 | 66.5 |
| பிலிப்பைன்ஸ் | 85.1 | 87.2 |
| இந்தோனேசியா | 94.3 | 92.5 |
| ஸ்ரீ லங்கா. | 45.4 | 56.7 |

(மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கிச் சஞ்சிகை)

## புதிய தொழில் நுட்பங்களின் பரவல்

உணவுற்பத்தி தொடர்பான "பசுமைப் புரட்சியும்," அதன் சாத்திய பூர்வமான தாக்கங்களும் அண்மைக் காலத்தில் பெரும் கருத்து வேறுபாடுகளைக் கிளப்பிவிட்டுள்ளன. புதிய விவசாயத் தொழில் நுட்பங்கள் யாவும் உயர் விளைச்சல் தரும் விதை நெல் இனங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதும், அவை உரத்தில் அதிகம் தங்கியிருக்கிறதென்பதும் குறிப்பிடத்தக்கது. நவீன பயிர்ச்செய்கை முறைகள், எத்துணை தூரம் ஸ்ரீலங்கா நெற் பயிர்ச் செய்கையிற் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதை அறிந்துகொள்ள, பின்வரும் அம்சங்கள் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளல் அவசியமாகும்.

(1) உயர் விளைச்சல் தரும் நெல்லினங்களின் பாவனை

(2) உரப் பாவனை

(3) பயிர் நோய்க் கட்டுப்பாடு

(4) பயிர் நாற்று நடல்

(5) எருமை, இயந்திரம் என்பனவற்றை உபயோகித்து உழவு செய்தல்

(6) களை பிடுங்கல்

உயர் விளைச்சல் தரும் நெல்லினங்களைக் கண்டுபிடித்தல், அவற்றை விவசாயிகளிடையே பரவலாக்கல் ஆகிய இரு விஷயங்களிலும் ஸ்ரீலங்கா மிகப் பெரும் முன்னேற்றத்தை எய்தியுள்ளது. இத் திட்டத்தில் இரு படிகளை நாம் அவதானிக்கலாம்:

(அ) 1950களின் பிற்பகுதியிலிருந்து 1970 வரை.

(ஆ) 1970 தொட்டு இன்று வரை.

முதற் காலப் பகுதியில் 'எச்' இன நெல் இனம் பற்றியே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எச் 4, எச் 7, எச் 8 என்பன இதில் முக்கிய இனங்களாகக் காணப்பட்டன. 1960 தொட்டு இவ்வினம் விவசாயிகள் மத்தியில் பிரபல்யமாகத் தொடங்கிற்று. 1970 அளவில் நாட்டில் நெற் பயிர் செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த நிலப்பரப்பில் 70 சத வீதத்தில் 'எச்' இன நெல் பயிரிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் கூறப்பட்ட காலப் பகுதியில் மேலும் கூடிய விளைச்சலைத் தருவனவும், வேறுபட்ட கால நிலை நிலைமைகளுக்கேற்ப குறுகிய காலத்தில் விளைச்சல் தரக் கூடியனவுமான நெல்லினங்கள் பற்றிய ஆராய்ச்சி அதிகரித்தது. இந் நெல் இனங்கள் விவசாயிகள் மத்தியில் எத்துணை பிரபலம் பெற்றிருந்தன என்பது பின்வரும் அட்டவணையிலிருந்து தெளிவாகும்:

| விதைக்கப்பட்ட நெல்லினம் | —1973/74 பெரும் போகம் விதைத்த விவசாயிகள் வீதம் |
|---|---|
| புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட இனங்கள்— | 42.0 |
| முன்னர் கண்டு பிடிக்கப்பட்ட இனங்கள்— | 24.7 |
| பாரம்பரிய இனங்கள்— | 33.3 |

100 முதல் 140 புசல் வரையான விளைச்சலைத் தரக் கூடிய இப்புதிய நெல்லினங்கள் விவசாயிகள் மத்தியில் பாவலாகப் பிரபல்யம் பெற்றிருந்தும் முழு நாட்டினதும் சராசரி ஏக்கர் விளைச்சல் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இப் புதிய நெல் இனங்களை விதைத்தாலும், அதன் பயிர்ச் செய்கை முற்று முழுதாக உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையே இதற்குக் காரணமாகும். குறிப்பாக, பசளை, கிருமி நாசினிகள், களை கொல்லிகள், போன்றன சிபார்சு செய்யப்படும் முறைகளில் மேற்

(26-ம் பக்கம் பார்க்க)

## உப உணவுப் பயிர்கள்

1960க்களில் நாட்டின் உணவு இறக்குமதியில், அரிசி, மீன் உற்பத்திகள், சீனி, கால்நடை, கால்நடை உற்பத்திகள் போன்றவை தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்கள் 40 சத வீதமாக இருந்தன. 1976ம் ஆண்டளவில் அவை 5 சத வீதத்துக்கும் குறைவாகக் காணப்பட்டன. இறக்குமதிச் செலவுகள் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்றமையால் இவ்வுணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தாவரங்களை உள்நாட்டிலேயே வளர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இறக்குமதிப் பிரதியீடாக இப்பயிர்களை இங்கு உற்பத்தி செய்து சுய தேவைப் பூர்த்தியடைவதற்கான திட்டமொன்று வரையப்பட்டது. ஸ்ரீலங்காவில் வாழும் உழவனின் பிரதான ஜீவனோபாயம் நெல் உற்பத்தியாக இருந்து வந்துள்ளது; ஆயினும் அவன் நெல்லில் மட்டுமே தங்கியிருக்கவில்லை. உப உணவுப் பயிர்த் துறையும் உழவர் விவசாயத்தில் பிரதான பங்கு வகித்து வந்துள்ளது. அரிசி, கோதுமை போன்றவற்றுக்குப் பிரதியீடு தேடவேண்டிய அவசியமும், தானியங்கள், விதைகள், மிளகாய், வெங்காயம் உருளைக்கிழங்கு போன்றவற்றின் இறக்குமதியைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இத்துறையின் வளர்ச்சிக்கு உந்துதல் அளித்தன. தாராளமாக அரிசி கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும், கோதுமை மா போதியளவு இறக்குமதி செய்யப்படும் காலங்களிலும் உப உணவுப் பொருட்களுக்கான கேள்வி மந்தமடைந்துள்ளது. சமீப காலங்களில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இத்துறையின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்து வந்துள்ளன. உணவுப் பொட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள், உற்பத்தியாளர்களுக்குச் சந்தையில் கிடைத்த சாதகமான விலைகள், குறைந்த பட்ச உத்தரவாத விலை போன்ற காரணங்கள் இத்துறையின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளித்தன. மேலும் காலத்துக்குக் காலம் அரிசி மா என்பன வற்றுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடும், முடிக்குரிய காணிகளில் பயிர் செய்வதில் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையும் உப உணவுத் துறையின் வளர்ச்சிக்குச் சாதகமாயமைந்தன. பிரதான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலப் பரப்பளவில் ஏற்பட்ட உயர்ச்சிப் போக்கிலான மாற்றங்களை அட்டவணை காட்டுகின்றது.

கடந்த இரு தசாப்த காலப் புள்ளி விவரங்களை நோக்கும் போது நெற் செய்கை செய்யப்பட்ட தீவிர அதிகரிப்புக்கீடாக பட்ட நிலப்பரப்பளவில் ஏற்ற உப உணவுப்பயிர் நிலப்பரப்பளவு அதிகரித்துச் செல்லவில்லையென்பது புலனுகின்றது. 1953—1970 காலப் பிரிவில் உப உணவுப் பயிர்களின் கீழிருந்த நிலப்பரப்பளவு மிகச்சிறிய அளவிலேயே அதிகரித்துள்ளதென ஆரம்ப கால விவசாயக்கணிப்பீடுகள் தெரிவித்தன. இதன் அபிவிருத்தி குறித்து சிறிதளவு கவனமே செலுத்தப்பட்டு வந்தது இதற்குக் காரணமாகும். மேலும் பொருத்தமான பயிர்ச் செய்கை நுணுக்கங்கள் பிரயோகிக்கப்படாததுடன், சிறந்த ரக தானிய விதைகளும் பயன்படுத்தப்படவில்லை. உருளைக்கிழக்கு, மரவள்ளி, வற்ருளை, மிளகாய், வெங்காயம் போன்றன குறித்த நுணுக்கமான பல ஆய்வுகள் வளர்முக உலகின் பல்வேறு மையங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளிலிருந்து மிகக் கூடிய பயனைப் பெற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா தவறிவிட்டதென்றே கூற வேண்டும்.

பிரதான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட ஏக்கர் அளவு

| பயிர் | 1965 | 1970 | 1976 |
|---|---|---|---|
| நெல் | 1,323,317 | 1,775,897 | 1,788,891 |
| குரக்கன் | 64,635 | 52,078 | 97,630 |
| சோளம் | 29,408 | 50,730 | 94,992 |
| மிளகாய் | 48,603 | 58,990 | 134,873 |
| வெங்காயம் | 14,559 | 16,660 | 7,693 |
| உருளைக்கிழங்கு | 1,662 | 8,188 | 373,575 |
| மரவள்ளி | 130,492 | 147,036 | 23,892 |
| வற்ருளை | 34,418 | 39,150 | 112,548 |

ஆதாரம்: குடிசனக் கணிப்பீட்டுப் புள்ளி விவரத்திணைக்களம்.

# நெல் விவசாயத்துறை—பிரச்சினைகளும் எதிர்காலமும்

விவசாயக் கடன் —

விவசாயக் கடன் வழங்கும் துறையில் அரசாங்கம் 1974ஆம் ஆண்டளவிலேயே அக்கறை காட்டத் தொடங்கியதெனினும், விவசாயிகள் தமக்குத் தேவையான கடனைப் பெறுவதில் நிறுவன ரீதியற்ற மூலங்களில் தங்கியிருக்கும் நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருகின்றது. 1967ஆம் ஆண்டில் புதிய விவசாயக் கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு கடன் வழங்கும் கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அந்தத் திட்டத்தின் கீழ், மக்கள் வங்கி, விவசாயிகளுக்கான கடன்களை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து 1973ஆம் ஆண்டில், பரந்த அளவிலான கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரஸ்தாப கடன் திட்டமானது விவசாயிகளுக்குத் தேவையான சகல விதமான கடன்களையும் கூட்டுறவுக் கிராம வங்கிகள் மூலமும் விவசாய உற்பத்திக் கட்டடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை வங்கிக் கிளைகள் மூலமும் வழங்குவதற்கு வகை செய்தது. 1977 — 78 பெரும் போகச் செய்கைக்குக் கடன் வழங்கும்போது, பரந்தளவிலான கடன் வழங்கும் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நெல் உற்பத்திக்கும், உப உணவு உற்பத்திக்கும் இப்போது கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் தொகை அதிகரித்துள்ளது.

கடன் திட்டங்களை விஸ்தரித்து விவசாயிகள் இலகுவில் கடன் பெற வகை செய்வது, அவ்வாறான வசதிகளைப் பயன்படுத்திக் கடன் பெற்றவர்களில் பெரும்பாலானோர் அடுத்தடுத்து வரும் போகங்களில் கடனை மீளச் செலுத்தாது விடல், அதன் காரணமாக வழங்கப்படும் கடன் தொகை குறைக்கப்படுதல், அதன் விளைவாக கடன் பெறத் தகுதியுள்ளோரின் எண்ணிக்கை குறைதல் என்பன இப்போதெல்லாம் ஒரு சுற்றுவட்ட நிகழ்ச்சிகளாக அமைந்துவிட்டன. உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்குடன், இலகு முறைக் கடன்களை வழங்குவது என்ற குறிக்கோளும், மீளச் செலுத்தாதவர்களை அவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்காது விட்டுத் தண்டித்தாக வேண்டும் என்ற குறிக்கோளும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டனவாக மாறிவிடுகின்றன. கீழே காணப்படும் அட்டவணை, அண்மைக் காலத்தில் கடன் வழங்குதல், அதனை மீளப் பெறுதல் என்பன எவ்வாறு அமைகின்றன என்பதைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

நெற்கடனும்

மீளப்பெறுதலும்

(ரூபா — லட்சத்தில்)

| | வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை | திரும்பச் செலுத்தப்பட்ட தொகை | திரும்பச் செலுத்தப்பட்ட வீதம் |
|---|---|---|---|
| 1967/68 — 1969/70 | 1800.9 | 1279.6 | 71.0% |
| 1970/71 — 1976/77 | 4441.8 | 2232.0 | 50.2% |

1977ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கை வரை வழங்கப்பட்ட விவசாயக் கடன் தொகையில் 34 கோடி ரூபா மீளச் செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்தது. கடன் பணத்தை மீளச் செலுத்தாதவர்களுக்கும் பெரும்போகம் செய்வதற்குக் கடன் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. பெரும்போகக் கடன் (1977) 4 கோடி ரூபாவை விட அதிகமானதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. கடன் வழங்கும்போது உண்மையாகவே நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறதா என்பது தக்க முறையில் மேற்பார்வை செய்யப்படாதவிடத்தும், கவனமாக வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படாதவிடத்தும் கடனை மீளச் செலுத்தாதோர் தொகை மேன்மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும்.

கடனை மீளச் செலுத்தாதிருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல வழிமுறைகள் சிபார்சு செய்யப்பட்டு வந்துள்ளன. மீளச் செலுத்தப்படாத கடன்களை எப்போதுமே பெறமுடியாத— தீர்ந்து போன பணமாகக் கருதிக் கைவிடுவதில்லை என்ற கண்டிப்பான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. அத்துடன் கடன் பெறுவதற்கு யார் யார் தகுதியுள்ளவர்கள் என்பதை நிர்ணயிக்கும் சுய பொறுப்பை வங்கிகளிடமே விட்டுவிடுவது அவசியம் எனக் கருதப்படுகிறது. கடன், சந்தைப்படுத்தல், காப்புறுதி என்பன ஒன்றுக்கு ஒன்று இணைந்த விதத்தில் வகுக்கப்படுவதால் மீளப் பெறுதல் பிரச்சினையைப் பெருமளவில் தீர்க்க முடியும் என்பது இன்னொரு கருத்தாகும்.

பயிர்க் காப்புறுதி

பயிர்ச் செய்கையில் ஈடுபட்டால் அது நிச்சயம் பலன் தருமா தராதா என்ற ஐயப்பாடும், நல்ல முறையில் விளைவு கிடைக்காவிடில் கைநட்டம் அடைவதைத் தாங்க முடியாத நிலைமையும் உற்பத்தி முயற்சிக்கான ஆர்வத்தைக் குன்றச் செய்துவிடுகின்றன. அதாவது விவசாயத் துறையில் அதிக பணத்தை முதலீடு செய்வதிலும், புதிய பயிர்ச்செய்கை முறைகளைக் கையாள்வதிலும் மக்களுக்கு உள்ள ஆர்வம் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை. இதனைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் 1958ஆம் ஆண்டில் நெற் காப்புறுதித் திட்டம் ஒன்றை ஆரம்பித்தது. 1970ஆம் ஆண்டளவில், நாட்டின் 16 மாவட்டங்களில் 2,00,000 ஏக்கர் காணி காப்புறுதிக்கு உட்படுத்தப்பட்டது. காப்புறுதிப் பணத்தைச் செலுத்துவதில் உள்ள தாமதம், பூரண காப்புறுதி செய்யாமை என்பவற்றின் காரணமாக நெற் காப்புறுதித் திட்டத்தில் பல குறைபாடுகள் பிரதிபலிக்கலாயின. எனவேதான் 1973ஆம் ஆண்டில் நெற் காப்புறுதித் திட்டத்தைச் சீரமைக்கும் விதத்தில் விவசாயக் காப்புறுதிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அது நெற்செய்கைக் காணிகளைக் காப்புறுதி செய்வதற்குக் கட்டாயப்படுத்தியது. காப்புறுதி வேலைகளை நிர்வகித்துக் கவனிக்கவென விவசாயக் காப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறுதிச் சபை ஒன்றும் நிறுவப்பட்டது. எனினும் விவசாயக் காப்புறுதித் துறையில் செய்யப்பட்ட சீரமைப்புக்குப் பின்னர், அதற்கு முன்னர் இருந்ததைவிட நிலைமை அபிவிருத்தி அடைந்தது என்று சொல்லுமளவுக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. சீரமைப்புச் செய்யப்பட்ட காலத்திலிருந்து 4 அல்லது 5 போகம் முடியும் வரை முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்றே சொல்லலாம். விவசாயிகள் குறைந்தளவு தொகைக்குக் காப்புறுதி செய்தமை, எப்போதும் இல்லாதவாறு ஏற்பட்ட வரட்சி என்பன காரணமாகக் காப்புறுதிச் சபை பெருந்தொகையான பணத்தை மான்யமாக ஒதுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

### நெல்லைச் சந்தைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்

1971ஆம் ஆண்டுக்கு முன்னர் உத்தரவாத விலைத் திட்டம் வெறும் விவசாயி நலன் திட்டமாகவே இருந்தது. ஆனால் 1971ஆம் ஆண்டில் நெற் சந்தைப்படுத்தும் சபை நிறுவப்பட்டு, நெல் சம்பந்தமான அலுவல்களைக் கவனிக்கும் முழுப் பொறுப்பும் அதனிடம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து உத்தரவாத விலைத் திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது. கிராம மட்டத்திலான நெல் கொள்வனவானது இன்னமும் கூட்டுறவு இயக்கத்திடமே உள்ளது. நெற் கொள்வனவில் சந்தைப்படுத்தும் சபைக்கு ஏகபோக உரிமை அளிக்கப்பட்டதன் பின்னர் அடுத்தடுத்துப் பல போகங்களில் நெல் விளைச்சல் குறைந்து வந்ததைத் தொடர்ந்து, 1975ஆம் ஆண்டில் பல கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

1977ஆம் ஆண்டு பெரும் போகத்தில் நெல் விளைச்சல் எப்போதும் இல்லாதவாறு அபரிமிதமாக இருந்தது. அதனால் நாடு முழுவதிலும் நெல்லைக் களஞ்சியப்படுத்தி வைப்பதில் பெரும் பிரச்சினைகளும் சங்கடங்களும் ஏற்பட்டன. இதனால் நெற்சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியங்களுக்கு நெல் அனுப்பப்படுவது வெகுவாகக் குறைந்தது. கொள்வனவு செய்யப்பட்ட நெல்லைக் குற்றி அரிசியாக்குவதற்குப் போதிய ஆலை வசதிகள் சபையிடம் இல்லை.



# மக்கள் வங்கியும் விவசாயக் கடனும்

மக்கள் வங்கி இதுவரை காலமும் ஒரு தனிப் போகத்துக்கு வழங்கிய மிகக்கூடிய விவசாயக் கடன் தொகை 1977/78 மகா போகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. 1977 டிசம்பர் 31ந் திகதி வரை 22.1 கோடி ரூபா கடனாக வழங்கப்பட்டது. 1960க்களின் ஆரம்பத்தில் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி ஸ்ரீலங்காவின் பாரம்பரிய விவசாயியின் அத்தியாவசியத் தேவையை நிறைவேற்றி வைப்பதில் முன்னோடியாக நின்றது. நிதிப்பற்றாக் குறை விவசாயியின் முன்னேற்றப் பாதையில் நின்ற பிரதான தடைக்கல்லாக இருந்தது. கிராமத்தின் கடன் வழங்குவோரிடம் அவன் நிரந்தரக் கடனாளியாக இருந்தான். இப்பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வொன்று காணப்படும் பட்சத்திலேயே விவசாயத் துறையில் வளர்ச்சி ஏற்பட முடியும் என்ற உண்மை உணரப்பட்டது; இதனைத் தொடர்ந்து விவசாயிக்குக் கடன் வழங்கும் மத்திய நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் விவசாயத் துறைக்கான நிறுவனரீதியான கடன்களில் பெரும் பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்கள் வங்கியினால் வழங்கப்படலாயிற்று.

உழவர் விவசாயிகளுக்கு நிறுவன ரீதியான நிதியுதவி பற்றிய கருத்து உத்தரவாத விலைத் திட்டம் பயிர்க்காப்புறுதித் திட்டம் போன்றவற்றை விடவும் காலத்தால் முந்தியதாகும். உற்பத்தி நோக்கத்துக்கான விவசாயக் கடன் மூன்று அங்கங்களாயிருக்கின்றது. விதைகளையும், உர வகைகளையும் கொள்வனவு செய்வதற்கான குறுங்காலக் கடன்கள், இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடுத்தரக் காலக் கடன்கள், மூலதனச் செலவுகள், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், நெல் குற்றும் உபகரணம் போன்றவற்றுக்கான நீண்ட காலக் கடன்கள் என்பவையே இவையாகும். இக்கடன்களைப் பட்டுவாடா செய்வதிலும், மீளப் பெறுவதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் முகவராண்மைகளாக இருந்து வந்துள்ளன.

மக்கள் வங்கியினாலும், இலங்கை வங்கியினாலும் (ஹட்டன் நசனல் வங்கியினால் சிறியளவிலும்) அமுல் நடத்தப்பட்ட புதிய விவசாயக் கடன் திட்டமும் கூட்டுறவு கிராமியக் கடன் திட்டமும் விவசாயிகளுக்குக்கடன் வழங்கும் பிரதான மூலங்களாக இருந்து வந்துள்ளன. வழங்கப்படும் சகல கடன்களினதும் 75 சத வீதத்துக்கு அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கி உத்தரவாதமளிக்கின்றது. விவசாயக் கடன்களை நிதிப்படுத்தும் வசதிகளும் மத்திய வங்கியினால் அளிக்கப்படுகின்றன.

பிணையுடன் வழங்கப்படும் வர்த்தக நோக்கத்துக்கான கடன்களிலிருந்து கூட்டுறவு விவசாயக் கடன் முற்றிலும் வேறுபட்டதாயிருக்கின்றது. முன்னைய கடன்களை மீளச் செலுத்தியமை பற்றிய நிலைமைகளின் அடிப்படையிலேயே இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. மீளச் செலுத்தாதோர் தொகை வருடா வருடம் அதிகரித்து வந்தமையால் கடன்கள் வழங்குதல் சிக்கலடையத் தொடங்கிற்று; இதற்குத் தீர்வு காணும் வகையில் உத்தரவாத விலைத் திட்டத்தின் மூலம் கடன்களை மீள அறவிடும் முறை ஏற்படுத்தப்பட்டது. இதுவும் கூட எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை.

நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியது போன்று கடன் வழங்குவதில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையால் கடன் பெறுவோர் தொகை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லலாயிற்று. இதனையடியொற்றி கடன் மீளச் செலுத்தாதோர் தொகை கூடவே, மீண்டும் கடன் பெறத் தகுதியானோர் குறைந்த தொகை விவசாயிகளாகவே இருந்தனர். விவசாயிகளைக் கிராமக் கடன் வழங்குவோரின் பிடியிலிருந்து காப்பாற்றும் நோக்கத்திலேயே இக்கடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆயினும் இத்தகைய நிலைமைகள் விவசாயிகளை மீண்டும் கடன் வழங்குவோரிடம் தஞ்சம் புக வைத்தன. எவ்வாறிருப்பினும் 1977/78 மகா போகத்தில், கடன் மீளச் செலுத்தாதோரையும் உள்ளடக்கிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் கடன் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

விவசாயக் கடன்கள் நிறுவன ரீதியான மூலங்களிலிருந்து வழங்கப்பட வேண்டுமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இத்தகைய திட்டமொன்றின் இயக்கம்—குறிப்பாக மீள அறவிடுதல்—விவாதத்துக்குரியதொன்றாகும். அரசாங்க மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாமை குறித்து பல்வகைப்பட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன.

"விவசாயி எதிர்நோக்கும் கஷ்ட நஷ்டங்களைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது கூட கடன் மீளச் செலுத்தப்படாமைக்குக் காரணம் விவசாயியின் எதிர்மறை நோக்காகும். பல்வேறுபட்ட சமூக நலத் திட்டங்களிலும் நன்மையடைந்து வரும் விவசாயி, தன் சுக துக்கங்களைக் கவனித்துக் கொள்ளல் அரசாங்கத்தின் கடமையென நினைக்கின்றான். மறு வார்த்தைகளில் கூறுவதாயின் கடன்களும் பிறிதொரு சமூக நல வசதியாகக் கருதப்படுகின்றன; கடன்களை எழுதி அழித்துவிடுவதாக வாக்குறுதிகளையளிக்கும் பொறுப்புமிக்க சில அரசியல்வாதிகளினால் இக்கருத்துக்கள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன."

'ஸ்ரீ லங்கா—ஓர் ஆய்வு' என்ற தன் நூலில் எல். ஏ. விக்கிரமாத்தின இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

நெல்லை விற்பதற்கும் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டனர்; இதனால் நெல்லின் விலை வீழ்ச்சி கண்டது. நெல்லைக் களஞ்சியப்படுத்துவதில் உள்ள கஷ்டங்களைப் பயன்படுத்தி, நெ. ச. சபையின் களஞ்சியப் பொறுப்பாளர்கள், கூட்டுறவுக் கடை முகாமையாளர்கள் போன்ற உத்தியோகஸ்தர்களும், தனிப்பட்ட முதலாளிகளும் கிராம மட்டத்தில் விவசாயிகளைப் பல சந்தர்ப்பங்களில் சுரண்டி உள்ளார்கள்.

பங்கீட்டு அரிசியில் வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளதால், நெல் சம்பந்தமாக நெ. ச. சபைக்கு இப்போதுள்ள பொறுப்புகள் குறையக்கூடும். பாவனையாளர் நல்ல தரமுள்ள அரிசியைப் பெறுவதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில், நெ. ச. சபை இனிமேல் அரிசி குற்றுதல், அதனைப் பதப்படுத்தி வைத்தல், களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல் என்பவற்றில் கூடுதல் கவனம் செலுத்தும் என நம்பப்படுகிறது.

## விவசாயத்தை இயந்திர மயமாக்குதல்

விவசாயக் கொள்கை வகுக்கும் பணியில் சர்ச்சைக்குரிய விஷயங்களில் விவசாயத்தை இயந்திரமயமாக்குதல் என்பதும் ஒன்றாகும். விவசாயத்துக்குத் தேவையான சக்தியைப் பின்வரும் மூன்று முறைகளில் பெறலாம்— (1) மனிதன் (2) கால்நடைகள் (3) இயந்திரங்கள்.

விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு வேண்டிய அளவு கால்நடைகள் (எருமை மாடுகள்) இல்லை என்பதால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விவசாயத்தை இயந்திரமயமாக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. எனினும் நாட்டில் உள்ள உழவு இயந்திரங்களின் எண்ணிக்கை தேவைக்கேற்றபடி போதுமானதாக இல்லை. நாலு சில்லு உழவு இயந்திரங்களின் விலை ஏறிவிட்டது. இரண்டு சில்லு உழவு இயந்திரங்களே எமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமானவை என ஆய்வுகள் தெரிவித்துள்ளன. கடந்த காலத்தில் நிலவிய வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையால் உழவு இயந்திர இறக்குமதி குறைந்திருந்தது. அதன் காரணமாக கிராம மட்டத்தில் உழவு இயந்திரச் சொந்தக்காரர்கள் வாடகைக் கூலியை மிகவும் உயர்த்தி விடுகிறார்கள்.

விவசாயத்துக்குத் தேவையான சக்தியைப் பெறுவது சம்பந்தமான கொள்கை பின்வரும் இரு அம்சங்களில் அக்கறை செலுத்துவதாக அமைய வேண்டும்—

(1) எருமை மாடுகளின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(2) இப்போதுள்ள விவசாயச் சக்திகளை ஒருமுகப்படுத்திக் கொண்டு இயந்திரமயத்தைத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பிரிவுக்கென வகுத்துக் கொடுத்தல்.

மேட்டு நிலச் செய்கைக்கு, பண்ணை மட்டத்தில் பாவிக்கக்கூடிய விதத்தில், பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்ட சாதனங்களும் உபகரணங்களும் இல்லை. மேட்டு நிலத்தில் தொடர்ந்து விவசாயம் செய்தால் களைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பிரச்சினையும், உழுது பண்படுத்துவதில் பல கஷ்டங்களும் ஏற்படும். மழை வீழ்ச்சி உள்ள மேட்டு நிலத்தில் உற்பத்தியைப் பரந்த அளவில் பெருக்க உதவக்கூடிய உபகரணங்களைப் பிரபல்யப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

## விலைக் கொள்கை

விலை வகுப்பது பற்றிய கொள்கையில் பரந்த அளவிலான இரு அம்சங்கள் அடங்கும். (அ) உள்ளீடுகளுக்கான விலைக் கொள்கை (ஆ) வெளியீடுகளுக்கான விலைக் கொள்கை என்பனவே அவையாகும். உள்ளீடு விலை அம்சத்தின் சார்பாக அரசாங்கம் 1950ஆம் ஆண்டு முதல் நெல்லுக்கு மான்யம் வழங்கும் முறையை அமுல் செய்து வருகிறது. நீர்ப்பாசனத்துக்கான தண்ணீர் வழங்குவதிலும் மான்ய வசதி செய்யப்பட்டுள்ளது. விவசாயக் கடனைப் பெற்றவர்கள் அதனை மீளச் செலுத்தாத வகையிலும் பெருமளவு மான்யம் செலவாகியுள்ளது. வெளியீடு சார்பாக அனேகமாக சகல பயிர்களுக்கும் விலை வகையால் ஆதரவளிக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1948ஆம் ஆண்டிலேயே நெல்லுக்கு உத்தரவாத விலைத் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1952ஆம் ஆண்டில் உத்தரவாத விலை 12 ரூபாவாகப் புதுக்கி அமைக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டுவரை அதே விலை தொடர்ந்தும் நிலையாக இருந்து வந்தது. 1966ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரிசியின் இறக்குமதி விலை வீழ்ச்சி கண்டு வந்தபோதிலும் நெல்லின் இப்போதைய விலைக்கு (புசல் 40 ரூபா) வருமளவுக்கு நெல்லின் உத்தரவாத விலை உயர்ந்து வந்திருக்கிறது.

உத்தரவாத விலைத் திட்டம் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எந்த அளவில் ஊக்கமளித்துள்ளது என்பதைத் தனித்தெடுத்து மதிப்பிடுவது சற்றுக் கஷ்டமாகவே உள்ளது. நெல் உற்பத்தித் துறைக்கு ஊக்கமளிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் உத்தரவாத விலைத் திட்டமும் ஒன்றாக அமைந்தமையே அதற்குக் காரணம் ஆகும். உத்தரவாத விலையானது இலாபக் குறிக்கோள் எதையும் மையமாக வைத்து நிர்ணயிக்கப்படுவதில்லை. எனினும் அது எவ்வாறு விவசாயிகளைக் கவர்ந்துள்ளது என்பதனை மதிப்பிடுவதற்கு, உற்பத்திச் செலவுக்கும் வெளிச் சந்தை விலைக்குமிடையே உள்ள உறவைக் கருத்தில் கொள்வது அவசியம். 1967ஆம் ஆண்டில் மத்திய வங்கி எடுத்த கணக்கெடுப்பு ஒன்றின்படி, சில மாவட்டங்களில் மட்டுமே உத்தரவாத விலையைவிட உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கக் காணப்பட்டது. எனினும் உத்தரவாத விலை உயர்த்தப்பட்டு வந்ததால் அந்த வருடத்தின் பின்னர் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும் நிலைமை மாறியது. கமநல ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய மதிப்பீடு ஒன்றின்படி, 1966—77ஆம் ஆண்டுக் காலப் பகுதியில், 5 மாவட்டங்களில், ஒரு புசல் நெல்லின் உற்பத்திச் செலவு 23 ரூபா முதல் 30 ரூபாவாக இருந்தது. அந்தக் காலத்திலிருந்து உற்பத்திச் செலவில் சிறிதளவு மாற்றமே ஏற்பட்டிருக்குமென எடுத்துக்கொண்டால் இப்போதைய உத்தரவாத விலை (புசலுக்கு 40 ரூபா) கவர்ச்சிகரமானதாக— ஊக்கமளிப்பதாகவே— உள்ளது எனக் கொள்ளலாம்.

ஏனைய உற்பத்திப் பொருள்களின் சந்தை விலைகள், அவற்றுக்கு நிர்ணயிக்கப்படும் உத்தரவாத விலைகளைவிட பொதுவாக பன்மடங்கு அதிகமாகவே இருக்கும். அதனால் பிரஸ்தாப உத்தர





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத விலைகள் வெறும் ஆகக் குறைந்த மட்ட விலைகளாகவே விளங்குகின்றன. இது காரணமாக (நெல் தவிர்ந்த) விளைபொருள்களை உத்தரவாதத்விலைத்திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த அளவிலேயே அரசாங்கத்தினால் கொள்வனவு செய்ய முடிந்தது. உப உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து உப உணவுப் பொருள்கள் பலவற்றினதும் சந்தை விலைகள் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்தன. இதன் விளைவாக அண்மைக் காலத்தில் பயறு வகைகள், மிளகாய் மற்றும் தானிய வகைகளை உற்பத்தி செய்து லாபம் தேடுவதில் ஊக்கத்துடன் ஈடுபட்டு வருவதைக் காண முடிந்தது. நெல்லைப் போலன்றி, உப உணவுப் பொருள்களின் விலைகள் பரந்த அளவில் அடிக்கடி ஏறி இறங்கின. உப உணவுப் பொருள்களின் விலைகள் நிலையற்று இருப்பதற்கு உணவு இறக்குமதிக் கொள்கையும் ஒரு முக்கிய காரணியாகும். கோதுமை மாவைத் தாராளமாக இறக்குமதி செய்யத் தொடங்கியதும் மரவள்ளியின் விலை பெருமளவு சரிந்தது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அண்மைக் காலமாக விலை வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து மிளகாய், வெங்காயம், பயறு வகைகள் என்பவற்றின் உற்பத்தி மூலம் கிடைக்கும் லாபம் குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்துள்ளது. இவ்வாறான போக்கினால் சிறிய அளவில் உற்பத்தியில் ஈடுபடுவோரே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக உற்பத்தியாளரின் நலன், பாவனையாளரின் நலனுடன் பின்னிப் பிணைந்து பாதிக்கப்படுவது ஒரு முக்கிய பிரச்சினையாகும். அதாவது உற்பத்தியாளருக்கு நியாயமான லாபம் கிடைக்க உத்தரவாதம் அளிக்கும் அதே வேளையில் பாவனையாளர்களுக்குப் பொருள்கள் நியாயமான விலைகளில் தாராளமாகக் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்பதே இங்குள்ள உண்மையான பிரச்சினையாகும். எது எப்படியிருப்பினும், உத்தரவாத விலைத் திட்டம் நமக்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை சிறு உற்பத்தியாளருக்கு இருக்கவே செய்கிறது.

### பாசன வசதியும் தண்ணீர் கட்டுப்பாடும்

அரிசியில் சுய தேவையைப் பூர்த்தி எய்துவதற்கு இடையூறாக விளங்கும் முக்கிய அம்சங்களில் நீர் விநியோகமும் ஒன்றாகும். அது பின்வரும் இரு பிரதான பிரச்சினைகளுடன் தொடர்புடையதாகும். (1) பாசன வசதி பெறுவதற்கான அதிக செலவு (2) தண்ணீரை உரிய முறையில் பயன்படுத்துவதில் போதிய திறமையின்மையும், அதன் காரணமாக நீர் விரயமாதலும்.

1930ஆம் ஆண்டளவிலேயே பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களில் மக்களைக் குடியேற்றும் வேலை ஆரம்பமாகியது. எனினும் அவை ஏற்படுத்தப்பட்டதின் குறிக்கோள்களை இதுவரை பூரணமாக அடைய முடியவில்லை என்றே சொல்லலாம். குடியேற்ற வாசிகள் 1957ஆம் ஆண்டளவில் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்தார்களோ, எப்படியான சூழ்நிலையில் இருந்தார்களோ அதே கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு அதே போன்ற சூழ்நிலையிலேயே பல குடியேற்றத் திட்ட விவசாயிகள் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பிரஸ்தாப குடியேற்றத் திட்டங்களின் உற்பத்தியை அதிகரிக்கும் குறிக்கோளுடன் காணி அபிவிருத்தித் திணைக்களம் உலக வங்கி அளித்த ஊக்கதோடு விசேஷ திட்டங்களை ஆரம்பித்தது. அப்படியான விசேஷ திட்டம் முதன் முதலில் எலஹராவில் ஆரம்பிக்கப்பட்டது. விவசாய விஸ்தரிப்புத் திட்டங்களை ஒருமுகப்படுத்தவும், அவை சம்பந்தமான அலுவல்களை விசேஷ திட்ட முகாமையாளர் ஒருவரின் நிர்வாகத்தின் கீழ் ஒன்றிணைத்து நடத்தவும் என்றே பிரஸ்தாப விசேஷ குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வழிமுறையும் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க முடியவில்லை. அதாவது எதிர்பார்த்த பலன் கிடைக்காததால் விசேஷ குடியேற்றத் திட்டங்களை மேலும் ஆரம்பிப்பதைக் காணி அபிவிருத்தித் திணைக்களம் நிறுத்திக்கொண்டுவிட்டதாகத் தோன்றுகிறது.

நீர்ப்பாசனத் திட்டங்களில் உயர்ந்த குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். அந்தத் திட்டத்தின்மூலம் 132,000 ஏக்கர் நிலத்தில் இரு போகங்கள் பயிர் செய்யவும், புதிதாகத் திருத்தப்படவுள்ள 70,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறவும் ஏதுவாக இருக்கும். புதிய நிலம் முழுவதிலும் பயிர் செய்யத் தொடங்கியதும் ஏக்கருக்கு 50 புசல் என்ற வீதத்தில் ஒரு போகத்தில் 35 லட்சம் புசல் நெல் உற்பத்தியாக வேண்டும். அரைவாசிக் காணியில் மறுபோகம் செய்தால் (மிகுதி அரைவாசியில் வேறு பயிர்கள் செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது) மேலும் 15 லட்சம் புசல் நெல் கிடைக்க வேண்டும். எனவே வருடத்தில் மொத்தம் 50 லட்சம் புசல் கிடைக்கும்.

### காணிச் சொத்து விஸ்தீரணப் பிரச்சினை

இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன— (1) சிறு துண்டுக் காணிகள் (2) பங்குச் சொந்தக் காணி.

நெல் பெரும்பாலும் சிறு நிலச் சொந்தக்காரரின் பயிராகவே இருந்து வருகிறது. நெற்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்தக் காணிகளில் 94 சதவீதம், 5 ஏக்கருக்குக் குறைந்தளவு விஸ்தீரணமுடையவையாகும். எனவே 1972இல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் நெற்காணித் துறையில் ஏற்பட்ட தாக்கம் அவ்வளவு பெரிதாக இருக்கவில்லை எனலாம்.

### எதிர்காலம்

இந்நாட்டின் விவசாயம் இனி வரும் எதிர்காலத்தில் தாண்டிச் செல்லவிருக்கும் பாதை கடினமானது என்பதை முன் பக்கங்களிலிருக்கும் பகுப்பாய்வு காட்டுகின்றது. 1950க்களில் திட்டங்களுக்கும் உண்மையில் அடையப்பட்ட இலக்குகளுக்குமிடையே பாரிய இடைவெளியொன்றிருந்து வந்திருப்பதை நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். எம் விவசாய அபிவிருத்தி இலட்சியங்களில் நாம் வெற்றிபெற வேண்டுமாயின் அர்த்தமுள்ள வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை நாட்டின் கடந்த கால அனுபவம் எடுத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் காட்டுகின்றது. அரிசியில் தன்னிறைவடையும் பொருட்டு கடந்த முப்பது வருடங்களாக ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசுகள் பல்வகைப்பட்ட திட்டங்களை வகுத்து அமுல் நடத்தி வந்துள்ளன. ஆயினும் ஏறத்தாழ மூன்று தசாப்த காலமாக எம்மை ஏமாற்றிச் சென்ற இவ்விலட்சியம் அடுத்து வரும் சில வருடங்களில் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் தென்படுகின்றன. கடந்த வருடத்தில் மிகச் சிறந்த அறுவடை கிடைக்கப்பெற்றது; இவ்வருடத்திய அறுவடை இன்னும் கூடுதலாக இருக்குமெனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு சிறந்த அறுவடையின் பின்னரும் கிராமிய அபிவிருத்தியை மறந்துவிடும் விபரீதப் போக்கொன்று பல அரிசி உற்பத்தி நாடுகளில் நிலவி வருகின்றது. இதனை நாம் ஒரு பாடமாக எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தன்னிறைவு மட்டும் குறிக்கோளாக இருத்தல் கூடாது. தன்னிறைவடைவதில் ஏற்படும் செலவுகளையும், அதன் நலன்களையும் நுணுக்கமாக விசாரணை செய்தல் அவசியம். தற்பொழுது நடைமுறையிலிருக்கும் உள்ளீடுகள், வெளியீடுகள் தொடர்பான பெருந்தொகை மானியங்களினால் சிக்கனமற்ற (கூடிய செலவு) பல உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். தன்னிறைவுக் குறிக்கோள் எய்தப்படும் பட்சத்தில் இத்தகைய ஊக்குவிப்புக்களை அகற்றிவிடுதல் குறித்து பொருத்தமான திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட சில பயிர்களில் மட்டும் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வந்திருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இறுதி இலட்சியம் உழவனின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாக இருப்பின் தாழ்நிலம், மேட்டு நிலம், கால்நடை வளர்ப்புத் துறை போன்ற காரணிகளைக் கருத்திலெடுத்து பொருத்தமான அபிவிருத்திக் கொள்கைகளை வடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயத் திணைக்களம் நாட்டில் 24 விவசாயப் பிராந்தியங்களை இனங்கண்டுள்ளது. இப்பிராந்தியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான

(22-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுச் செய்தித் தொகுப்பு

# வர்த்தகப் பண்டங்கள் குறித்த உங்டாடின் திருப்தியற்ற முன்னேற்றம்

1977 டிசம்பரில் இரண்டாவது முறையாக கூட்டப்பட்ட உங்டாடின் பொது நிதிய மாநாடு மீண்டும் குறுகிய முன்னேற்றத்தையே அடைந்துள்ளது. சர்வதேச நுகர்வுப் பொருள் ஒழுங்குகளை நிதிப்படுத்துவதற்கான நான்கு வார மாநாடு 1977 மார்ச்சில் முடிவுற்றது. இம்மாநாட்டின் தோல்வியை பல வளர்முக நாடுகள் உணர்ந்துள்ளன. வளர்ச்சிபெற்ற நாடுகளும் வளர்முக நாடுகளும் பொது நிதி ஒன்றின் அவசியத்தைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனவாயினும், இந்நிதி எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிக் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. வளர்முக நாடுகள் புதிய ஒரு நாணய நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொண்டன. தனித்தனி நுகர்வுப் பொருள் ஒப்பந்தங்களை ஏற்படுத்த மட்டுமன்றி, பல்வேறுபட்ட முதலீடுகள் மூலம் நுகர்வுப் பொருள் வருமானங்களை உயர்த்துவதற்கும் இந்நிதி பயன்பட வேண்டுமென அந்நாடுகள் விரும்புகின்றன.

மறுபுறத்தில் பிரதான நுகர்வோராயுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகள் இத்தகைய புதிய நிறுவனமொன்றை வரவேற்கவில்லை. ஏனெனில் இது வெகு தீவிரமாக உலக மூலப்பொருட் சந்தையில் குறுக்கிடும் என்றும் இவற்றில் தாம் அதிக கட்டுப்பாட்டினை வைத்திருக்க முடியாதென்றும் அவை கருதின. ஒவ்வொரு தனித்தனி நுகர்ச்சிப் பொருள் ஒப்பந்தமும் கைச்சாத்திட்டு முடிந்த பின்னரே சிறிய அளவிலான நிதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பது இந்நாடுகளின் கருத்தாகும்.

பொது நிதியப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறு சகல தனித் தனிப் பண்டங்கள் மீதும் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும். முக்கியமாக இந்நிதியிலிருந்து அதிகமாகப் பணமெடுக்கவல்ல செம்பில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். இது குறித்த உடன்பாடொன்று சாத்தியமாகாத பட்சத்தில் உலக மூலப்பொருள், நுகர்வுப் பொருள் உற்பத்தி வர்த்தகம் ஆகியவற்றின் இயக்கத்தில் குழப்பமான போக்கொன்று தோன்ற முடியும். பொது நிதியத்தின் மீதான பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து உங்டாடின் தனித்தனிப் பதினெட்டுப் பண்டங்கள் மீதான ஒருங்கிணைக்கப்பட்ட ஜெனீவா திட்டத்தின் மீது கவனம் திரும்பியது. இக் கூட்டத்தின் மதிப்பீடும், பொது நிதிய மாநாட்டின் மதிப்பீடும் 1977 டிசம்பர் 12ம் திகதி முதல் 16ம் திகதி வரை இடம்பெற்ற உங்டாடின் அமர்வுகளின் பிரதான விடயங்களாக இருந்தன. இவ்வமர்வுகளுக்கு செயலாளர் நாயகம் கலாநிதி காமனி கொறியாவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்று பரிசீலனைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட பண்டங்கள் தொடர்பாக சிறியளவு முன்னேற்றம் காணப்பட்டிருக்கின்றதெனக் கூறுகின்றது. முக்கியமாக செம்புமீதான ஆரம்ப வேலைகளைப் பொறுத்தளவில் இது உண்மையாயுள்ளது. சீனியைப் பொறுத்தளவில் சர்வதேச உடன்படிக்கையொன்று சாத்தியமாகியுள்ளது. ஆயினும் பொது நிலைமை திருப்தி தருவதாயில்லை. இறப்பரைப் பொறுத்தளவில் அதன் விலையை ஸ்திரப்படுத்துதற்கான சர்வதேச உடன்படிக்கையை ஏற்படுத்துதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கங்கள் தீர்மானிக்கக் கூடிய நல்ல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இச்சிறிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், பேச்சுவார்த்தை நிலைக்கு இட்டுச் செல்லக் கூடிய எந்த வித முறைமை சார்ந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. இறப்பரைத் தவிர ஏனைய எந்தவொரு தனி நுகர்ச்சிப் பொருளுக்கும் எப்போது இந்த நிலை அடையப்படும் என்ற அடையாளமும் காணப்படவில்லை.

1977 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற உங்டாட் கூட்டத்தின் இறுதியில் செயலாளர் நாயகம் கலாநிதி காமனி கொரியா “இந்நிதிக்குப் பல அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆதரவுண்டு. அதே நேரத்தில் இக்குழுவில் உள்ள ஏனைய நாடுகள் புதியவையும் அதிக சாத்தியப்பாடு வாய்ந்தவையுமான நாட்டங்களை குறிப்பாக காட்டியுள்ளன. இவையெல்லாவற்றையும் ஆக்கபூர்வமான தீர்மானங்களாக்க மார்ச்சு மாதத்தில் காலம் கனிந்து வரவில்லையெனில் இவ்வருடத்தின் பிற்பகுதியில் மாநாடு அமர்வுகள் இடம் பெறும்போது இதற்கான வாய்ப்புண்டாகலாம். ஆனால் இக்கைங்கரியம் அவ்வளவு சுலபமானதல்ல” என்று குறிப்பிட்டுள்ளார்.

மீள நடத்தப்பட்ட அமர்வுகளின் விளைவுகள் இக்கைங்கரியம் எளிதானதல்ல என்று நிரூபித்துள்ளன. எனவே உங்டாட் இதற்காக வேறொரு வாய்ப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

1977 ஏப்ரல் ‘பொருளியல் நோக்கு’ மார்ச்சு பொது நிதியக் கூட்டம் பற்றிய கருத்துரையில் கீழ்க்கண்டவாறு முடிவுரைத்துள்ளது. “ஜெனிவாவின் மிக அண்மைக் காலத்தைய செய்தி மிகத் தெளிவாய் உள்ளது. ஜெனீவாவில் அடையப்பட்ட ஒரே உடன்பாடு ‘மாநாடு மீளக் கூடவேண்டும்...’ என்பதாய் தெரிகிறது.”

இதே கருத்துரை டிசம்பர் அமர்வுகளுக்கும் பொருந்துவதாய் உள்ளது.

பொருளியல் நோக்கு, ஜனவரி 1978

# கட்டுக்கதைகளும் முகாமையும் – தனியார் துறையும் அரச துறையும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உலகெங்கும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாயுள்ள முகாமை முறைகளைப்பற்றி அநேக கட்டுக் கதைகள் நிலவுகின்றன. இத்தகைய முறைகள் — சமூகச் சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபடும் ஏற்றுக்கொள்ளத்தக்க முகாமை முறைககள் — எங்கும் இல்லை. வழக்கமாக நவீன முகாமை எனப்படுவது, பெரும்பாலும் கிட்டத்தட்ட கடந்த அரை நூற்றுண்டுக்கு மேல் அமெரிக்காவில் வளர்ந்துள்ளவையும், வணிகப் பள்ளிகளாலும் பல்கலைக்கழகங்களாலும் பரப்பப்பட்டுள்ளவையுமான தொழில் நுட்ப முறைகளையும் செய்முறைகளையும் அப்படியே ஒப்புக் கொள்வதாகும். இத்தொழில் நுட்ப முறைகளில் சில ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் சமூகச் சம்பந்தத்திலிருந்து விடுபட்டுள்ளன; உதாரணமாக, நிரலாக்க உபாயங்கள், மது நிலைய அட்டவணைகள், நுணுக்கமான வழிப் பகுப்புகள் முதலியன. எனினும், நேரடியானவையும் வேலை ஆராய்வை அடிப்படையாகக் கொண்டவையும் பெறுபெறுகளுக்கேற்ப அமைபவையுமான கொடுப்பனவு முறைகள் போன்ற மற்றுஞ் சில, ஜப்பானிய சூழ்நிலை போன்ற மேற்குலகல்லாத சூழ்நிலைகளில் மேற்கொள்வதற்குக் கஷ்டமாயிருந்துள்ளன. (அதே சமயத்தில், உதாரணமாக, இம்முறைகள் குறிப்பாக முப்பதுகளின் பிந்திய பகுதியில் சோவியத் யூனியனில் பேராவலுடன் மேற்கொள்ளப்பட்டன.)

இலங்கையில் அநேக முகாமை முறைகளை இனங்காண முடியும். முதலாவதாக, நிலமானிய முறைக் காலத்திலிருந்து வந்துள்ளவை சிறிய அளவிலான உற்பத்தியிலும் சேவைகளிலும் செயற்படுகின்றன. இம்முறைகள் கிராமப் பகுதிகளில் ஒப்பியல் ரீதியாகப் பணக்காரர்களாயுள்ள விவசாயிகளாலும் நாட்டில் உள்ள பெரும்பாலான சிற்றுண்டிச்சாலைகளிலும் உபயோகிக்கப்படுகின்றன. இரண்டாவதாக, காலனி ஆதிக்க காலத்திலிருந்து வந்த முறைகள் தோட்டத் தொழில் துறையிலிருந்த முகவர் நிலையங்களில் செயற்பட்டன. சமகால மேற்கத்திய தரங்களைக் கொண்டு நோக்குமிடத்து, குறிப்பாக மனித முகாமைத் துறையில் இவை பரிபக்குவமற்ற 19 ஆம் நூற்றுண்டு இயல்பு நோக்கைக் கொண்டிருந்தன. மூன்ருவதாக, கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் தனியார் துறையில் இறக்குமதிப் பொருள்களுக்கு மாற்றுக்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளும் கைத்தொழில் மயமாக்கும் முயற்சிகளும் நடைபெற்றபோது உருவாக்கப்பட்ட முகாமை முறைகளாகும். இவை அநேக சமயங்களில், அடக்கு முறைகளைக் கையாண்ட முகாமையாளருடனும் (அஃதாவது, உண்மையில் கொடுமையைக் கையாண்ட உரிமையாளர்களைக் குறிக்கும்) ஒப்பியல் ரீதியாக, பயமுறுத்தப்பட்ட, குறைந்த வேதனம் வழங்கப்பட்ட தொழிலாளர் படையுடனும் தொடர்புள்ளவையாகும். நான்காவதாக, கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் அரசாங்கத் துறையில் வளர்ந்துள்ள கூட்டுத்தாபனங்களாகும். இவை திறமையற்ற வகையில் இயங்குகின்றனவென்று "பொது மக்களில்" சில பிரிவினர் சில சமயங்களில் கருதுகிருர்கள்.

இந்தப் பல்வேறு ஏற்பாடுகளின் திறமையை ஒருவர் எவ்வாறு நிதானித்தறிவது? நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, அதிகாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணிவரை உழைக்கும் தொழிலாளர்களை வைத்துக்கொண்டு ஒரு சிறிய சிற்றுண்டிச்சாலையை நடத்திப் பெருத்த இலாபமீட்டும் சிறு முதலாளி, விலை அதிகரிப்புகள், அரசியல், குறைந்தபட்ச சம்பள விகிதங்கள் ஆகிய கட்டுப்பாடுகளால் அடைக்கப்பட்டு, நஷ்டத்திலியங்கும் ஒப்பியல் ரீதியாகப் பெரிய அரசாங்கக் கூட்டுத்தாபனங்களைவிட (உதாரணமாகப் பால் சபை அல்லது இலங்கை மின்சார சபை) மிகத் திறமையாகச் செயலாற்றுபவரா? அல்லது ஒப்பியல் ரீதியாக விளக்கமான உள்ளகக் கொடுப்பனவு முறைகளையும் தொழிலாளர் சேமநலனையும் நல்ல இலாபங்களையும் கொண்டு நுகர்வோர் கைத்தொழிலில் கிட்டத்தட்ட ஏகபோக உரிமையுடன் ஈடுபட்டுள்ள புதிய பல்தேசியக் கம்பெனி, தேயிலைத் தோட்டத் தொழில் துறையிலிருந்த பழைய பல்தேசியக் கம்பெனியைப் போலவே அவ்வளவு திறமையாக நடத்தப்படுகின்றதா? பழைய பல்தேசியக் கம்பெனியும் நல்ல இலாபங்களைக் காட்டிவந்தது; ஆனுல், இக்கம்பெனி உலகெங்கும் பார்க்கப்படும் ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சியில் தனது தொழிலாளர் படை விசேஷமாகக் காட்டப்படுவதற்கு வழிசெய்கின்றது; இந்த நிகழ்ச்சி தேயிலைத் தொழிலாளியைக் கிட்டத்தட்ட அடிமை போன்ற நிலைமைகளில் வாழும் ஒருவராகப் (பிழையின்றிச் சரியாக)ச் சித்திரிக்கின்றது. எது திறமையாகச் செயலாற்றுகின்றது எது திறமையாகச் செயலாற்றவில்லை என்பதை நிதானித்தறிவது கடினமாகும். ஏனென்ருல் திறமையை அளவிட வித்தியாசமான அளவுகோல்கள் இருந்து வருகின்றன. சந்தையை அடிப்படையாகக் கொண்ட இலாப அளவுகோல்களைச் சுட்டும் திருத்தமற்ற தனித்த காட்டிகள் முதலாளித்துவத்தில் மிக ஆழமாக ஊறிப்போன நாடுகளிலிருந்துகூட மறைந்துவிட்டன. மேலும், திறமையான செயற்பாட்டைத் திருத்தமற்றமுறையில் எடுத்துக் காட்டும் ஒன்ருக இலாபத்தைக் கொண்டால் கூட, இலாபம் என்பது குறித்த தொழில் முயற்சி — அது தனியார் துறையிலிருந்தாலென்ன அரசாங்கத்துறையில் இருந்தாலென்ன — ஏகபோக உரிமையை அனுபவிக்கும் ஒரு நிலையிலுள்ளதா அல்லது அப்படியில்லையா என்பதனுல் வரையறுக்கப்படுவதாகும். ஏகபோக உரிமையை அனுபவிக்கும் ஒரு தொழில் முயற்சியில் மூலவளங்களின் உபயோகம் போன்ற திறமையான செயற்பாட்டை எடுத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்காட்டும் மற்றும் அளவுகோல்கள் உயர்ந்தபட்சமாக இல்லாவிட்டால்கூட, அத்தகைய தொழில் முயற்சி பெருமளவுக்கு உயர்ந்த இலாபங்களை ஈட்டமுடியும்.

திறமையான செயற்பாட்டைப் பொறுத்த பிரச்சினைகளும் அளவுகோல்களும் வெறும் தத்துவார்த்த சிரத்தைக்குரியன மட்டுமல்ல. இலங்கையின் பொருளாதாரம் போன்ற ஒரு பொருளாதாரத்தில் அவை ஜீவாதார முக்கியத்துவம் உடையனவாகும். பொது மக்களின் கண்களில் திரும்பத் திரும்பத் தோன்றும் பிரச்சினைகளில் ஒன்றுயாதெனில், அரசாங்கத் தொழில் முயற்சிகளின் "துர் நிர்வாகம்" என்பதாகும். தனியார் துறையில் காணப்படும் உயர்தர முகாமைத் திறமையுடன் இது அடிக்கடி ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. இது எவ்வளவுதூரம் உண்மை?

முதலாவதாக, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு சிறிய பகுதியாக அமைந்திருந்த போதிலும், அவை பொது மக்களின் கண்களுக்கு வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றன. இப்படித் தெரிவதற்கு ஒரு காரணம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் — எப்படியாகிலும் அவற்றின் நியமனங்களில் சில — அதிகாரத்திலுள்ள குறித்த அரசாங்கத்தின் (எந்த அரசாங்கத்தினதும்) — அரசியல் ரீதியானவையாக அமைவதாகும். இதன் விளைவாக, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அதிகாரத்தில் உள்ள குறித்த அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்குரிய முக்கியமான களஞ்சியங்களாகவும், முன்பு அதிகாரம் வகித்தவர்களின் செயல்களால் ஊழல் கிடங்குகளாகவும் தொடரும் அரசாங்கங்களால் கருதப்படுகின்றன. அத்துடன், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் பொதுவாகப் பொருளாதாரத்தின் மிக முக்கியமான, அத்தியாவசியத் துறைகளிலிருப்பதால், அவை பொதுவாகப் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கின்றன.

மறு கோணத்தில், தனியார் துறையின் வேலைகள் பெருமளவுக்கு இரகசியமாக நடைபெறுகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, மிகக் கண்டிப்பான சோதனை முறைகளும் கட்டுப்பாடுகளுமுள்ள அரசாங்கத் துறையைவிட தனியார் துறையில் ஊழல்கள் அதிக அளவில் இருக்கக்கூடுமெனினும், அவை வெளிப்பார்வைக்குக் கொண்டுவரப்படுவது அபூர்வமாகும். தரகுகள் பெறுவது போன்ற செயல்கள் அரசாங்கத் துறையில் ஊழல் என (முற்றிலும் சரியாகக)க் கருதப்படும்போது தனியார் துறையில் அது வழமையான வணிக முறை எனக் கருதப்படுவது இதற்கு ஒரு காரணமாகும். மேலும், வித்தியாசமான அரசாங்கங்கள் அதிகாரத்துக்கு வரும்போது, அரசாங்கத் துறையில் போலன்றித் தனியார் துறையிலே உயர்தர உத்தியோகத்தர்கள் தொடர்ந்து பதவி வகித்து வருவதில் எவ்வித முறிவும் ஏற்படுவதில்லை. ஆனல், அரசாங்கத் துறையில் இப்படி அடிக்கடி நேர்கின்றது. திட்டமான கோணத்திலிருந்து நோக்குமிடத்து, இதனல் முழுச் சுத்திகரிப்பு நிறைவேற்றப்பட்டுவிடுகிறது; எனினும், எதிர்மறைக் கோணத்திலிருந்து நோக்குமிடத்து, இதன் விளைவாக, ஸ்தாபன ரீதியான உறுதியும் தொடர்ச்சியும் நம்பிக்கையும் இழக்கப்பட்டுவிடுகின்றன.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் துர்நிர்வாகம் நடைபெறுவதாகப் புலப்படுவதற்கு, தனியார் துறையிலும் அரசாங்கத் துறையிலும் நடைபெறும் காரியங்கள் வெளிப் பார்வைக்குப் புலப்படுவதிலுள்ள இவ்விரு வித்தியாசமான நிலைமைகள் ஓரளவுக்கு ஒரு காரணமாகும். இந்தப் புலப்பாடுகள் ஒருபுறமிருக்க, தனியார் துறை அரசாங்கத் துறை ஆகிய இவ்விரு துறைகளையும் உண்மையில் எவ்வாறு ஒப்பிட்டுப்பார்ப்பது? அவற்றின் முககாமையாளர்களும் ஊழியர்களும் எவ்வளவு தூரம் பயிற்சி பெற்றவர்களாக, படித்தவர்களாக இருக்கிருர்கள்? உதாரணமாக, அவை நவீன முகாமை முறைகளை எவ்வளவு சிறப்பாகக் கையாளுகின்றன? இலங்கை முகாமை பற்றி வித்தான, மின்ஸீஸ் ஆகியோர் அண்மையில் நடத்திய பரிசீலனையொன்று இதுபற்றிய சில தரவுகளைத் தருவதாயுள்ளது.

அரசாங்கத் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் கம்பெனிகளிலுமுள்ள நிர்வாகிகளின் கல்வியை ஒப்பிடுவதில், அவர்களுடைய பரிசீலனை சில அர்த்தபுஷ்டியுள்ள முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளது. கம்பெனிகளில் ஆகக் குறைந்த தகைமையுள்ள உத்தியோகத்தர்களே உள்ளனர் (அஃதாவது தொழில் ரீதியான / தொழில் நுட்ப ரீதியான தகைமைகளில் பட்டம் பெருதவர்கள்); அவற்றின் முகாமையாளர்களில் 64.6 சத விகிதத்தினர் தகைமையற்றவர்கள் என இவ்வாய்வு குறிப்பிடுகின்றது. இதற்கு எதிரிடையாக, மறு கோணத்திலிருந்து நோக்குமிடத்து, 19.2 சத விகிதத்தினர் மட்டுமே தகைமையற்றவர்களாயுள்ளனர். மேலும், இந்தத் தனியார் துறைக் கம்பெனிகளில் உள்ள முகாமையாளர்களில் 25 சதவிகிதத்தினர் மட்டுமே நவீன முகாமைப் பயிற்சி பெற்றிருக்கையில், அரசாங்கத் திணைக்களங்களிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலுமுள்ள சிரேஷ்ட முகாமையாளர்களில் ஏறக்குறைய 50 சத விகிதத்தினர் இப்பயிற்சி பெற்றவர்களாயுள்ளனர்.

தனியார் துறை முகாமைக்குள் மிகத் துரிதமாகப் புகவேண்டுமாயின், ஒருவேளை சரியான இரத்த உறவையும் பாடசாலைப் பந்தங்களையும், அத்துடன் கிரிக்கெட் மைதானத்திலோ அல்லது றகர் மைதானத்திலோ அனுபவத்தையும் அல்லது இரண்டையும் ஒருமிக்கக் கொண்டிருக்க வேண்டும்; ஆனல், புத்திக் கூர்மையோ அல்லது முகாமைத் தொழில் நுட்ப அறிவோ அவசியமில்லை என்று பொதுமக்களிடையே நிலவும் ஐயத்தை இப் பரிசீலனை ஊர்ஜிதம் செய்கின்றது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் கூடிய படிப்புப் பயிற்சியும் (அதிக விவேகமும்) உள்ள முகாமையாளர்களையும் ஊழியர்களையும் கொண்டிருக்குமாயின், அவற்றில் சில சிறந்த முறையில் செயலாற்றவியலாத நிலையில் உள்ளதேன்? இதற்கு அநேகக் காரணங்கள் உண்டு. ஆனல், தனியார் கம்பெனி ஒன்றின் முகாமையாளர் அந்தக் கம்பெனியுடன் சம்பந்தமுள்ள காரணிகளைப்பற்றி மட்டுமே முடிவு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகையில், அரசாங்கத் தொழில் முயற்சியின் முகாமையாளர் அந்தத் தொழில் முயற்சியை நிர்வகிப்பதுடன் மட்டுமன்றி அத்தொழில் முயற்சியின் சூழலிலிருந்து எழும் பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டியிருப்பது ஒருவேளை பிரதான காரணமாயிருக்கலாம். குறுகிய சுயநலக் கொள்கைகள், உறவினர்கள், மதம், சாதி, மற்றும்

வெளியம்சங்கள் ஆகியவற்றிலிருந்து எழும் தன்னலங் கருதிய நிர்ப்பந்தங்கள் பிந்திய வகையைச் சேர்ந்தனவாகும். இவ்வகையான அரசாங்கத் தொழில் முயற்சியின் முகாமையிலுள்ள நூதன இயல்புகள் பற்றி அநேக பரிசீலனைகள் நடத்தப்பட்டுள்ளன. தற்செயலாக இந்நூதன இயல்புகள் தென் ஆசியாவின் மற்றும் பகுதிகளிலும் இருந்து வருகின்றன. இந்தக் காரணிகள் எந்த அளவுக்கு முக்கிய பங்கெடுக்கின்றன என்பது சம்பந்தமாக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிடையே வித்தியாசம் காணப்படுகிறது. இவ்விதமாக இ. போ. சபை, கூ. மொ. வி. நிலையம், தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் வெளியம்சங்கள் குறிப்பிடத்தக்க பங்கெடுக்கின்றன. இதே சமயத்தில் சிமெந்துக் கூட்டுத்தாபனம், கடதாசிக் கூட்டுத்தாபனம் போன்ற குறைந்தளவு அரசியலே இடம்பெற்றுள்ள கூட்டுத்தாபனங்களில் இந்த வெளியம்சங்கள் பரம்பரையாகக் குறைந்தளவு பங்கே எடுத்துள்ளன. இந்தப் புதுமையைத் திருஷ்டாந்தப்படுத்த தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் போன்ற ஓர் உண்மையான தொழில் முயற்சியின் நிலைமையை ஆராய்வது முக்கியமாகும்.

தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் ஒரு முன்னைய ஆளணி முகாமையாளரான எஸ். ஈ. ஜீ. பெரேரா 1969 ஆம் ஆண்டில் சர்வதேச தொழில் நோக்கு (இன்டர்நேஷனல் லேபர் றிவியூ) என்னும் சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில், புடவைத் தொழிற்சாலையின் முகாமைப் பிரச்சினைகளுக்கு மோசமான திட்டத் தயாரிப்பே காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார். புதிய ஆளணி முகாமைமுறைகள் புகுத்தப்பட்டுவருவதோடு, ஆரம்ப காலத்தில் காணப்பட்ட உறுதியற்ற நிலைமைகள் மறைந்துவிடுவது திண்ணம் என அவர் சுட்டிக் காட்டினார். எனினும், வரலாறு வேறுவிதமாக நிரூபித்துள்ளது. தேசிய புடவைக் கூட்டுத்தாபனம்—குறிப்பாக அதன் பிரமாண்டமான துல்ஹிரியா தொழிற்சாலை — முகாமை ஆராய்ச்சி மாணவர்களுக்குத் தொடர்ந்து ஒரு மிகச் சுவாரஸ்யமான ஆராய்ச்சிக்குரிய விஷயமாக இருந்துவருகிறது. அது ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு, அதன் உற்பத்தி தொடர்ந்தும் கட்டுப்பாடற்ற வகையில் பெருகுவதும் குறைவதுமாயிருந்துவந்துள்ளது. அதன் தொழிலாளர் படை உயர் கல்வி பெற்ற வாலிபர்களைக் கொண்டது. சாதாரண நிலைமைகள் நிலவும்போது உற்பத்தி பெருகுவதைக் கவனிக்குமிடத்து, அவர்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பேருற்சாகத்தோடு உழைப்பதாகத் தோன்றுகிறது. அதன் நடுத்தர அதிகாரிகளும் முகாமைத் தரத்திலுள்ள அதிகாரிகளுமாக எல்லோரும் நவீன தொழில் நுட்ப முறைகளில் கிரமமான பயிற்சி பெற்றவர்களாவர்; அத்துடன், அநேக நாடுகளின் அனுபவங்களையும் கிரகித்துக் கொண்டவர்கள். எனினும், உயர்தர முகாமைப் பதவிகள் (பணிப்பாளர் மட்டம்) சம்பந்தமாக அதன் தெரிவு சில சமயங்களில் சீரற்றதாக இருந்துவந்துள்ளது. அதன் படுமோசமான செயற்பாட்டின்போது, போதாத அனுபவமுள்ளவர்களே உயர்தர பதவிகளில் இருந்தனர். இந்த ஸ்தாபனத்தின் தொழிற்பாடு பிரமாண்டமான பிரச்சினைகளை எதிர்நோக்கியதற்கு இத்தகுதியற்ற முகாமையே பெரும்பாலும் காரணமாகும். வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட காடையர்களால் தொழிலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், அருகில் உள்ள கடைகள் தீக்கொளுத்தப்பட்ட செயல்கள் போன்ற பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்றதற்கு ஆவண ரீதியான ஆதாரங்கள் உள்ளன. உயர் பீடத்திலிருந்து அறிந்தும், அறியாமலும் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகளுக்கேற்பத் தொழிற்சாலையின் உற்பத்தி அநேக சமயங்களில் சரியான அளவைக் காட்டியுள்ளது. தொழிலாளரிடையே கட்டுப்பாட்டுறுதியும் ஒழுங்கு முறையும் குறைவாயிருந்தபோது தொழிற்சாலையின் நிர்ணயமான உற்பத்திச் சக்தி ஏறக்குறைய 20 சத விகிதமாகவும், இக் கட்டுப்பாட்டுறுதியும் ஒழுங்கு முறையும் உயர்வாயிருந்தபோது தொழிற்சாலையின் நிர்ணயமான உற்பத்திச் சக்தி 90 சத விகிதமாகவும் வித்தியாசப்பட்டுள்ளது. பேசுந் திறன் படைத்த, படித்த, பயிற்சி பெற்ற, வாலிபர்களைக் கொண்ட ஒரு தொழிலாளர் படையின் விஷயத்தில் இவை இயற்கையான விளைவுகளாகும். பணிப்பாளர் சபை மட்ட முகாமைக்குத் தொழிலாளர்கள் மட்டுமன்றி ஸ்தாபனம் முழுவதுமே செவிசாய்த்துள்ளது. பணிப்பாளர் சபை மட்ட முகாமைப் பொறுப்புள்ளதாக இயங்கியபோது தொழிலாளர்களும் ஸ்தாபனமும் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொண்டுள்ளனர்; முகாமை பொறுப்பற்ற முறையில் நடப்பதாகத் தோன்றியபோது, தொழிலாளர்களும் ஸ்தாபனமும் தங்கள் உற்பத்தியைக் குறைத்துவிட்டனர். இச் சூழ்நிலையில்வைத்துத்தான், சென்றவருடம் ஆகஸ்ட் மாதத்துக்கும் நவம்பர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்திலிருந்து உருவான மிகத் தெளிவான அறிகுறிகளை ஒருவர் நோக்க வேண்டும். அப்பொழுது ஒரு புதிய முகாமைப் பணிப்பாளர் தொழிற்சாலையின் உற்பத்தியை உயர்த்துவதில் வெற்றி பெற்றார். முகாமைப் பணிப்பாளரின் கையெழுத்துடன் பத்திரிகைகளில் வெளிவந்த மிகத் திட்டமான, நியாயமாகப் பெருமைப்படத்தக்க விளம்பரங்கள், எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திச் சக்தியுடன் செயலாற்றும் ஒரு ஸ்தாபனத்தின் இயற்கையான வெளிப்பாடேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான், முகாமைச் சபைக்கும் நேரடியான தொழிற்சாலை முகாமைக்குமிடையே தனியார் துறை முகாமை நிபுணத்துவத்தைப் புகுத்த எடுத்த தீர்மானம் சுவாரஸ்யமான சிக்கல்களைத் தோற்றுவித்தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, கடந்த சில மாதங்களுக்கு மேல் கூட்டுத்தாபனத்தில் கட்டுப்பாட்டையும் ஒழுங்குமுறையையும் அதிகரிப்பதற்கும் அதற்கேற்ப உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பொறுப்பாயிருந்த முகாமைப் பணிப்பாளர் அகற்றப்பட்டுள்ளார் என்பது தெளிவு. இதன் எதிரொலியாக, தனியார் துறையின் நவீன முகாமை எனப்படுவதின் படையெடுப்புக்கு எதிராக, தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருமளவு குறைத்துவிட்டனர். இத்தகைய ஒரு செய்கை எதிர்பார்க்கப்பட்டதே.

கிடைக்கக்கூடியதாயுள்ள சாட்சியங்களிலிருந்து இடைநடுவில் புகுத்தப்படவுள்ள புதிய முகாமை தோட்டத் தொழில் துறையுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களிலிருந்து எடுக்கப்படவுள்ளதாகத்

(32-ம் பக்கம் பார்க்க)

**வியாபாரப் பொருள்கள்**

# வாசனைத்திரவியங்களின் எதிர்காலம்

அடுத்து வரும் சில வருடங்களில் காராம்பு, ஏலக்காய் போன்ற திரவியங்களின் ஏற்றுமதிச் சந்தை சாதகமானதாயிருக்கும் அதே வேளையில் ஸ்ரீலங்காவின் பிரதான வாசனைத்திரவிய ஏற்றுமதிப் பண்டமான கறுவாவின் வர்த்தகத்தில் வீழ்ச்சிப் போக்கு தென்படும். ஜெனிவாவிலுள்ள சர்வதேச வர்த்தக நிலையம் வாசனைத் திரவியங்களுக்கான உலகச்சந்தை நிலைமைகள் பற்றி மேற்கொண்ட ஆய்வின் முடிவே இது. 29 நாடுகளைச் சார்ந்த சகல பாரிய சந்தைகளுக்கும் சர்வதேச வர்த்தக நிலைய நிபுணர்கள் விஜயம் செய்தனர். உலக வாசனைத் திரவிய இறக்குமதியில் 85 சத வீதத்தை இச்சந்தைகள் பெறுகின்றன. 500 பக்கங்களுக்கு மேல் செல்லும் இவ்வாய்வு விவரங்களிலிருந்து ஸ்ரீலங்காவுடன் தொடர்பான வாசனைத் திரவியங்கள் பற்றிய குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### கறுவாப்பட்டை:

உலக வர்த்தகத்தில் கறுவாப் பட்டை தரக்குறைவான பட்டைகள் போன்றன 1975ம் ஆண்டில் வீழ்ச்சிப் போக்கைக் காட்டின. இலங்கை கறுவாப்பட்டை உயர் விலை மட்டத்தைக் கொண்டிருப்பதாலும் சீஷெல்ஸ்சிலிருந்து விநியோகம் ஸ்திரமாகக் காணப்படாமையாலும் மிகச் சமீப காலத்தில் கறுவா வர்த்தகம் மேலும் வீழ்ச்சியடையும். மேலும் கசியா எனும் தரக்குறைவான கறுவாப்பட்டைகள் சீனாவிலிருந்து அதிகரித்தளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றின் பாவனையும் தற்போதைய மட்டத்தில் நிலவும்.

### ஏலக்காய்:

ஏலக்காய் வர்த்தகத்தின் எதிர்காலம் மிகச் சிறப்பானதாகவிருக்கும். சந்தைகள் மேலும் விரிவடைந்து செல்ல வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

### மிளகு:

1974, 1975ம் ஆண்டுக் காலப் பகுதிகளில் மிளகுக்கான கிராக்கி மந்தமாகிக் காணப்பட்ட போதிலும் அடுத்த சில வருடங்களில் உலக மிளகு இறக்குமதிகள் அதிகரித்துவரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

### காராம்பு:

அடுத்த சில வருடங்களில் காராம்பிற்கான இறக்குமதிக் கிராக்கி வலுவாகக் காணப்படும். இந்தோனேஷியா உள்ளூர் உற்பத்திகள் மூலம் அதன் சிகாற் கைத்தொழிலுக்கான பெரும்பாலான தேவைகளைச் சமாளிக்கும் வரை கிராக்கி அதிகமானதாக இருக்கும்.

### இஞ்சி:

பல்வேறு நாடுகளின் சந்தை நிலவரங்களை நோக்கும் பொழுது சுக்கிற்கான எதிர்காலம் சிறப்பாகவுள்ளது. அடுத்த சில வருடங்களில் சுக்கு இறக்குமதி வீதம் 3 சத வீதமாக பிரதி வருடமும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சாதிக்காய்:

அறிக்கையில் சாதிக்காய் பற்றிய குறிப்புகள் தெளிவானதாக இல்லை. உணவு பதனிடும் கைத்தொழில்களின் தேவைகளைப் பொறுத்தும் விலை மட்டத்தைப் பொறுத்தும் இதன் எதிர்காலம் அமையும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★

## தேங்காய்

தேங்காய் எண்ணெயும், தேங்காய்த் துருவலும் 1977ம் ஆண்டு உற்பத்தியில் பெருமளவிற்கு வீழ்ச்சியைக் காட்டி நின்றன. 1976ம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து தேங்காய் எண்ணெய் உற்பத்தி 100 சத வீதத்திற்கும் மேலாக வீழ்ச்சியடைந்துள்ளது. தேங்காய்த் துருவலும் ஏறக்குறைய 80 சத வீழ்ச்சியைக் கண்டுள்ளது. மெட்றிக் தொன்களில் உற்பத்தி பின்வருமாறு:

| | ஜனவரி—நவம்பர் 1976 | ஜனவரி—நவம்பர் 1977 |
|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | 94,696 | 41,306 |
| தேய்காய்த் துருவல் | 43,433 | 27,049 |

ஏற்றுமதி செய்யப்பட்ட தெங்குப் பொருட்களின் விலைகளும் பல்வேறு மட்டங்களில் தளம்பியுள்ளன. 1976 நவம்பரில் ஒரு மெட்றிக் தொன் தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிப் பெறுமானம் ரூபா 12,963 ஆகும். இதற்கு மாறாக 1977 அக்டோபரில் அதன் விலை ரூபா 9,632 ஆகவும், ஏப்ரில்—ஜூன் மாதங்களில் ரூபா 8,633 ஆகவுமிருந்தது. நவம்பரில் தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிப் பெறுமானத்திலேற்பட்ட உயர்வான போக்கு, நாணயப் பெறுமதியிறக்கத்தின் விளைவாகும். தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியைப் பொறுத்த வரைக்கும் இந்நிலைமை இதனைவிடச் சிறப்பானதாக அமைந்தது. 1977 ஜனவரி—மார்ச் மாதங்களில் ஒரு மெட்றிக் தொன்னின் ஏற்றுமதிப் பெறுமானம் ரூபா 4,866 ஆகவும், 1977, ஏப்ரில்—ஜூனில் அது ரூபா 6,205 ஆகவும் 1977 நவம்பரில் அது ரூபா 17,257 ஆகவும் உயர்ந்தது. சர்வதேச விலைகளும் முன்னைய சில மாதங்களை விடவும் உயர்வான போக்கினைக் காட்டி நின்றன. உள்ளூர்ச் சந்தையில் உற்பத்தியாளர்கள் நவம்பர் விலைச் செழிப்பின் மூலம் பயனடையவில்லை. 1977 நவம்பரில் ஒரு மெட்றிக் தொன் தேங்காய் எண்ணெயின் உள்ளூர்ச் சந்தை விலை ரூபா 5,242 ஆகும். இது முன்னைய மாதகால விலைகளை விடக் குறைவானதாகும். தேங்காய்த் துருவலைப் பொறுத்த வரைக்கும் ஒரு கிலோ கிராம் ரூபா 6-01 ஆகவிருந்தது. இது முன்னைய மாத விலைகளை விட சில சதங்கள் அதிகமாகும்.

1977ல் உயர் விலைகள் கிடைத்த பொழுதிலும், முன்னைய வருடத்துடன் ஒப்பிடுமிடத்து ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் ஏற்றுமதியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியாகும். குறிப்பாக தேங்காய் எண்ணெய் 1976ல் 57,000 தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட அதே வேளை, 1977ல் 2,000 மெட்ரிக் தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. தேங்காய்த் துருவலை நோக்குமிடத்து 1976ல் ஏறக்குறைய 42,000 தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட அதேவேளை 1977ல் 28,000 தொன்களே ஏற்றுமதி செய்யப்பட்டன.

இன்னும் தேங்காய்த் துருவல் மொத்த வருமான அதிகரிப்பினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி நிற்கின்றது. கடந்த இரு வருட கால ஏற்றுமதி அமைப்பிலிருந்து பெறக்கூடிய இன்னுமொரு முக்கிய போக்கு என்னவெனில் ஏற்றுமதி வருமானத்தில் இவற்றின் பங்களிப்பாகும். தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி வருமானத்தில் 38 சதவீத பங்கினைக் கொண்டிருந்த தேங்காய் எண்ணெய் தற்பொழுது 3 சதவீதத்தினை மாத்திரமே கொண்டுள்ளது. 1976ல் 38 சதவீதத்தினைக் கொண்டிருந்த தேங்காய்த் துருவல், 1977ல் 63 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. 1977ல் உள்ளீட்டுப் பொருட்களின் வருமானம் 21.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதே வேளை, துணைப் பொருளுற்பத்திகளின் மூலமான வருமானம் 39.5 சதவீதமாக அதிகரித்தது. எவ்வாறுயினும் 1977ம் ஆண்டிற்கான மொத்த ஏற்றுமதிப் பெறுமான வீழ்ச்சி 7.5 சதவீதமாகும்.

## தேயிலை

வரவு செலவுத் திட்டத்தில் நாணயமாற்று விகிதாசாரம், ஏற்றுமதித் தீர்வை, வரி, பெறுமான விற்பனை வரி விகிதம் என்பன தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களினால், நவம்பர் மாதத்தில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமைகளுக்கேற்ப தேயிலை உற்பத்தியாளர்கள், தரகர்கள், ஏற்றுமதியாளர்கள் என்போர் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதனைக் காண முடிகின்றது. நாணயமாற்று விகிதாசாரம் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னைய விகிதாசாரத்தை விடவும் பெருமளவிற்கு இருமடங்கு அதிகமானதாகும். ஆகையால் நவம்பர் 16 முதல் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்வோர் கூடிய பணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. 1 கிலோ பேரளவு தேயிலைக்கான புதிய ஏற்றுமதித் தீர்வை ரூபா 15.50 ஆகவும், பெட்டிகளில் அடைக்கப்பட்ட தேயிலைக்கும், தேயிலைப் பைகளிற்கும் ரூபா 13.50 ஆகவும், 1 கிலோவிற்கான வரி 70 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், நாணய மாற்று விகிதாசார மாற்றங்களின் விளைவு காரணமாக கூடியளவு ரூபாய் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் வர்த்தகம் சிக்கலான நிலைமைகளுக்குள்ளானது. ஏலத்தில் ஈராக் பங்குபற்றாமை, குறிப்பிடத் தக்களவு புதிய கொள்வனவுக் கட்டளைகள் கிடைக்காமை, வரவு செலவுத் திட்ட மாற்றங்களின் பின்னர் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாக சந்தையில் "வர்த்தகக் கொள்வனவின்" எல்லைப்படுத்தப்பட்ட தாக்கம், வரவு செலவுத் திட்ட மாற்றங்கள் காரணமாக உள்நாட்டு கப்பல் உரிமையாளர்கள் எதிர்நோக்கிய மோசமான நிதி நிலைமை என்பன, தேயிலையின் கேள்வியில் மூறுனை பாதிப்பினையும், விலையில் வீழ்ச்சியையும் ஏற்படுத்தின.

கேள்வி, நிரம்பலின் ஏனைய எல்லாக் காரணிகளும் சமமாகவிருந்திருப்பின், கில்லோவிற்கு ஏறக்குறைய ரூபா 15 பெறுகின்ற தேயிலை கொள்கை ரீதியில் கூடிய விலையையும், கில்லோ ரூபா 15ற்குக் கீழான தேயிலை விலை விகிதாசார ரீதியில் குறைந்தும் இருந்திருத்தல் வேண்டுமென, வரவு செலவுத் திட்ட மாற்றத்தின் முன்னரும், பின்னரும் தேயிலையின் ரூபா விலைகளுக்கிடையிலான நேரடித் தொடர்பு பற்றிய ஒரு நுண்ணாய்வு காட்டியது. புதிய ஏற்றுமதித் தீர்வையும், வரியும் காரணமாக குறைந்த ரகத் தேயிலை மீதான தீர்வை 60 பென்ஸ் அல்லது 1 அமெரிக்க டொலராக அமையலாமாகையால், நவம்பர் 15ம் திகதிய மாற்றங்களின் முன்னர் உள்நாட்டுக் கொள்வனவாளர் ஏலத் தேயிலை விலையில் எல்லைத் தொகையொன்றினைச் செலுத்த வேண்டியிருந்திருக்குமென தரகர்கள் குறைந்த ரகத் தேயிலை மீதான பாதிப்பினைச் சுட்டிக் காட்டினர்.

அதிகரிக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வை, வரி என்பன காரணமாக நவம்பர் 21ம் திகதி சந்தையில், முன்னர் ரூபா 13 இலிருந்து ரூபா 14 விலைக்கு விற்கப்பட்ட தேயிலை பெருமளவு தள்ளுபடி செய்யப்பட்டது. இதில் பெரும் பகுதி திரும்பப் பெறப்பட்டது. எவ்வாறுயினும், சிறந்த ரகத் தேயிலை உயர் விலையை அனுபவிக்கலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. சென்ற கிழமைகளில் உலகத் தேயிலை ஏல நிலையங்களில் விலை வீழ்ச்சி கண்டமையைத் தொடர்ந்து, நவம்பர் இறுதியில் நீர்மய நிலைத் தேயிலையும், உயர் நிலைத் தேயிலையும் கொழும்பு ஏலத்தில் குறைந்த விலைகளைப் பெற்றன. அடுத்த டிசம்பர் சிறு விற்பனைகளில் உயர்ந்த விலையும், உறுதியான நிலைமைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. நவம்பர், டிசம்பர் மாத முதல் ஏலங்களிலிருந்து தவிர்ந்துகொண்ட ஈராக், டிசம்பர் இரண்டாவது கிழமை விற்பனவில், கொள்வனவினை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இறப்பர்

தீர்வை விகிதாசார மாற்றங்களும், நவம்பர் மாத நடுப் பகுதி வரியும் கொழும்புச் சந்தையில் எல்லா ரக இறப்பரினதும் விலையதிகரிப்பிற்குக் காரணமாயமைந்தது. வரவு செல்வுத் திட்டத்தில் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, நவம்பர் 16 இலிருந்து 20 வரைக்குமான காலத்தில், ஒரு கிலோ கிராமிற்கான ஏற்றுமதித் தீர்வை முன்னைய அளவான ரூ. 2.25 இலிருந்து ரூபா 6.81 ஆக அதிகரிக்கப்பட்டது. நவம்பர் மாதம் 20ம் திகதியின் பின்னர் இறக்குமதித் தீர்வை திருத்தப்பட்ட வழுக்கியளவுத் திட்டப்படி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நவம்பர் மாதம் 16ம் திகதியிலிருந்து 1 கில்லோ கிராமிற்கான வரி ரூபா 10.70 இலிருந்து ரூபா 33.05 ஆக அதிகரித்தது.

நவம்பர் மாத முற்பகுதியில் ஆர். எஸ். எஸ். இல. 1 ஒரு கிலோ கிராமிற்கு ரூபா 4.72½ ஆக ஆரம்பித்து, நவம்பர் 16ம் திகதியன்று சந்தையில் ஒரு கிலோ கிராமிற்கான கேட்கப்பட்ட விலை ரூபா 6.14½ ஆகவிருந்து, பின்னர் ரூபா 6.21 ஆக அதிகரித்தது. இது திருப்திகரமான வெளிநாட்டு ஆலோசனையின்பாற்பட்டதாகும். நவம்பர் முற்பாகத்தில் ரூபா 4.59—ரூபா 4-70ற்குக் கேட்கப்பட்ட லெடக்ஸ் கிறேப் றப்பர், நாணயச் சீரமைப்பு நடவடிக்கைகளுடனும், சிறந்த குறுங்கால கேள்வியுடனும் சேர்ந்து ரூபா 6-05—ரூபா 6-31 ஆக அதிகரித்தது. ஸ்க்றேப் கிறேப் றப்பர் கில்லோ கிராம் ரூபா 4-29—ரூபா 4-30 இலிருந்து கில்லோ கிராம் ரூபா 4-71—ரூபா 5-15ஐ அடைந்தது. இதேவேளை ரூபா 3-60—ரூபா 3-80 ஆகவிருந்த நுரை றப்பரும், வெட்டுத் துண்டுகளும் மாத இறுதியில் ரூபா 4-69ஐ அடைந்தது.

## சிறப்புக் கட்டுரைகள்

# மணிலா—காலி அறைகளும் கூடிச்செல்லும் கடன்களும்

ஆசிய சுற்றுலாத்துறை பற்றியும், குறிப்பாக பிலிப்பைன்ஸ் நாட்டு நிலைமைகள் குறித்தும் பரிசீலனை ஒன்றை மேற்கொண்ட "இன்சைட்" இதழ் இப்படி எழுதுகின்றது. "தொடர்ந்தும் குறைந்து கொண்டு செல்லும் இயற்கை மூலவளங்களில் மென்மேலும் தங்கியிருத்தலைத் தவிர்க்க விரும்பும் ஆசியாவின் வளர்முக நாடுகள் சுற்றுலாத் துறையில் கூடிய கவனஞ் செலுத்தி வருகின்றன. இன்றைய உலகில் மிகத்துரிதமாக வளர்ச்சி பெற்றுவரும் தொழில் இதுவாகும். மிகக் கூடியளவில் வேலையின்மை காணப்படும் நாடுகளில் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத தொழிலாளர்களுக்குக் கூடிய வேலை வாய்ப்புக்களை வழங்கக்கூடிய ஒரு துறையாகவும் இது இருக்கின்றது."

இத்தகைய பொருளாதார அனுகூலங்களுக்கு மத்தியிலும் சுற்றுலாத்துறை பற்றிய சந்தேக விசாரணைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

சுற்றுலாத் துறையின் பொருளாதார நலன்கள் பட்டினியாலும், போஷாக்குக் குறைவாலும் வாடும் ஆசியாவின் லட்சக்கணக்கான மக்களைச் சென்றடையவில்லை. வரியிறுப்போரிடமிருந்து திரட்டப்படும் குறிப்பிட்ட தொகைப்பணம் கூட சுற்றுலாத் துறையின் வளர்ச்சி கருதிய சமூகப் பொது முதலீடுகளில் செலவழிக்கப்படுகின்றது. இந் நடவடிக்கைகள் யாவும் கைத்தொழில்மய நாடுகளில் வாழும் செல்வந்தர்கள் "குறைந்த செலவில் விடுமுறைகளைக் கழிப்பதற்காக வளர்முக நாடுகளில் வாழும் வறியோர் மானியமளிப்பவையாகுமென" சிலர் வாதிட்டு வருகின்றனர்.

கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாது திண்டாடும் மாணவிகள் வீதியோர யுவதிகளாக மாறிவரும் விபரீதப் போக்கு மணிலாவில் தென்படுகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டின் சுற்றுலாத்துறை வளர்ச்சியின் பிரதான உந்து சக்தியாக இவ்விளம் பெண்கள் இருந்து வருகின்றனர். இது ஒரு மகத்தான பொருளாதாரச் சீரழிவு இல்லையா?

பிலிப்பைன்சைப் போன்றே வேறும் சில வளர்முக நாடுகள் தேசிய சுற்றுலாத்துறைக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளன. கடந்த மூன்று வருட காலத்தில் மணிலாவில் பல லட்சம் ரூபா பெறுமதியான ஹோட்டல்களும், ஏனைய வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அளவுக்கதிகமான பெரிய கட்டிடங்கள், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிற் குறைவு என்பன போன்ற பல காரணிகளால் இவ்வழகிய ஹோட்டல்கள் கட்டப்பட்ட ஒரு வருட காலத்துள்ளாகவே பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய இக்கட்டான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளன.

இது, கண்மூடித்தனமாக சுற்றுலாத்துறையில் முதலீடுகளை மேற்கொண்டு வரும் ஏனைய வளர்முக, நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கின்றது. 'இன்சைட்' கட்டுரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.

இந்த இதழில் ஸ்ரீலங்காவின் ஹோட்டல் துறையின் பரிமாணம், அறைவசதி, பயன்படுத்துமளவு போன்றன பற்றிய விரிவான தரவுகளை உள்ளடக்கிய கட்டுரையொன்றும் வெளியிடப்படுகின்றது.

**இயன் வெஷேயர்**

ஒரு மகாநாட்டு மண்டபத்தை அமைப்பது பற்றி, 1970-ல் நிதியமைச்சர் சீசர் விரிட்டா மகஜரொன்றைத் தயார் செய்தபோது, பழைய தலைமுறை அரசியல் வாதிகளிடையே, ஒருவகை ஆர்வம் எழத்தான் செய்தது. புதிய சர்வதேசிய வாதிகளின் கவனத்தை வளர்முக நாடான கென்யா கவர்ந்துகொண்டிருந்தது; சர்வதேச சந்திப்புகட்கும், மகாநாடுகட்கும் மிகப் பொருத்தமான இடம் என்ற பெயரை நைரோபி தொடர்ந்து பெற்றுக்கொண்டு வந்தமையே இதற்குக் காரணமாகும். மாபெரும் சர்வதேச மகாநாடுகள் எல்லாம் நைரோபியில் நடைபெற்றதாக பத்திரிகைகளும், வானொலிகளும் தெரிவித்தன. இவற்றினால் பெரிதும் கவரப்பட்ட பிலிப்பைன்ஸ் மக்கள் தம் நாட்டிலும் இது போன்ற மாநாட்டு மண்டபங்கள் உருவாக வேண்டுமென்று விரும்பலாயினர்.

1972 செப்டம்பரில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட போது, உத்தேச மகாநாட்டு மண்டபம் பற்றிய எண்ணக்கரு வேரூன்றத் தொடங்கிவிட்டது. சகல அதிகாரங்களும் ஜனாதிபதியின் கையில் இருந்தமையால் இதனைச் செயற்படுத்துவதில் சிரமங்கள் இருக்கவில்லை. தென்கிழக்காசியாவில் சர்வதேச மகாநாடுகளையும், சந்திப்புக்களையும் நடத்தக் கூடிய ஒரே இடம் மணிலா என்று கருதப்பட்டது. மகாநாடுகள் நடைபெறாத காலத்தில் பெருமளவு வெளிநாட்டு நாணயங்களுடன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வருவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் நாட்டின் சட்டம் ஒழுங்கு என்பனவும், "பிலிப்பைன்ஸ் மக்களின் இயற்கையான நட்பு மனப்பான்மை"யும், அந்நாட்டின் இயற்கை எழிலும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்க வல்லன என்று சுட்டிக் காட்டப்பட்டது.

1976 செப்டம்பரின் உலக வங்கிக் கூட்டத்தின்போது, இம் மாபெரும் சுற்றுலாத் திட்டத்தில் பிலிப்பைன்ஸ் 170 கோடி பிலிப்பைன்ஸ் டொலரை (7.5 பிலிப்பைன் டொலர் — 1 அமெரிக்க டொலர்) முதலீடு செய்திருந்தது. வளர்முக உலகம் இதுவரை கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரும் சூதாட்டம் என இதனை உலகின் சில முன்னணி வங்கியாளர்கள் வர்ணித்தனர். 75 கோடி பிலிப்பைன்ஸ் டொலரில் கட்டப்பட்ட பிலிப்பைன்ஸ் சர்வதேச மகாநாட்டு மத்திய நிலையம் (PICC) அரசியல்வாதிகளது எதிர்ப்புகளுக்கும், விமர்சனங்களுக்குமிடையே கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது. உதவி வழங்கும் நாடுகள், இத்தகைய "விநோதமான முயற்சிகளை" கடுமையாக விமர்சனம் செய்த போதிலும் வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த பலர் சர்வதேச நாணய நிதிப் பிரதிநிதிகள் இவ்விஷயத்திற் திருப்திகண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் கூட்டு மொத்தமாக 14 புத்தம் புதிய ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டன; இவை அனைத்தும் 6,395 அறைகளைக் கொண்டிருந்தன. வெளி நாடுகளின் இலட்சாதிபதிகளின் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையிலேயே இந்த ஹோட்டல்களின் ஒவ்வொரு அம்சங்களும் காணப்பட்டன. சர்வதேசரீதியில் நாட்டின் புகழைப் பரப்புவதையும், நிலை தளம்பிக் காணப்பட்ட நாட்டின் அந்நியச் செலாவணி நிலைமையைச் சீர் செய்வதையும் இவை நோக்கமாகக் கொண்டிருந்தன.

இந்த ஹோட்டல் அபிவிருத்தித் திட்டத்தின் அறிமுகத்துக்கு முன்னர், மணிலாவில் சர்வதேசத் தரம் வாய்ந்த மூன்று ஹோட்டல்கள் இருந்தன. இன்டர் கொண்டினன்டல் (420 அறைகள்), ஹில்ட்டன் (424 அறைகள்), ஹையற் (263 அறைகள்) என்பனவே அவையாகும். இவற்றுள், நகரின் முக்கிய வர்த்தக மையத்துக்கு அருகே அமைந்திருந்த, இன்டர் கொண்டினன்டல் மாத்திரமே வெற்றிகரமாக இயங்கி வந்தது. அமெரிக்க நிர்வாகம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர். ஏனைய இரு ஹோட்டல்களும் வருமான அதிகரிப்பையும், அதன் மூலம் இலாபத்தையும் கூட்டத் தொடங்கின.

இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பெருந் தொகையான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வரத் தொடங்கினர். மலிவான விலைகள், அழகிய யுவதிகள், உறுதியான அரசாங்கம் முதலியன தொடர்பான பத்திரிகை அறிக்கைகள் இதற்கு முக்கிய காரணமாகவிருந்தன. இதனைத் தொடர்ந்து ஹில்ட்டன், ஹையற் ஹோட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளது எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது. 1970ல் ஹையற் ஹோட்டலில் தங்குவோர் வீதம் 50% மாகக் காணப்பட்டது; இது 1972ல், 65% ஆகவும், 1973ல் 80% ஆகவும், 1974ல் 93% ஆகவும், 1976 செப்டம்பர் வரையான முதல் 9 மாத காலத்துள் 96% ஆகவும் அதிகரித்தது. இதே போன்ற அதிகரிப்பு மணிலா ஹில்ட்டன் ஹோட்டலிலும் காணப்பட்டது. 1974ல் இங்கு தங்குவோர் வீதம் 89% ஆகக் காணப்பட்டது. 1975ம் 1976ம் ஆண்டுகளில் இது முறையே 86%, 83% ஆகக் காணப்பட்டது. இதே வேளை, வழமைபோன்று இன்டர் கொண்டினன்டல் ஹோட்டல் அதிகமான தங்குவோர் வீதத்தைக் கொண்டு காணப்பட்டது. வர்த்தக மையத்துக்கு அண்மையிற் காணப்பட்டமை முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று, இதற்கு முக்கிய ஒரு அனுகூலமாயிருந்தது.

உலகின் நாணய விவகாரங்களை மறு சீரமைத்து புதிய ஒரு பொருளாதார ஒழுங்கொன்றை உருவாக்குவது பற்றிக் கலந்துரையாடவென, 1976 செப்டம்பர் மாதம் உலக வங்கியின் பிரதிநிதிகள் வருகை தந்தபோது மணிலாவின் இம் மூன்று ஹோட்டல்களும் வெற்றிகரமாக இயங்கி வளமான வர்த்தகத்திலீடுபட்டிருந்தன. இருந்த போதிலும், மணிலா மாநகரப் பிராந்தியத்தில் மேன்மேலும் ஹோட்டல்களை நிறுவவென, சுற்றுலாப் பயணத்துறையும் அரச வங்கிகளும் பரிந்துரைகள் வழங்கியிருந்தமை இம்மூன்று அமெரிக்க ஹோட்டல் நிறுவனங்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியிருந்தன. சுற்றுலாத்துறையினால் பரிசீலனை செய்யப்பட்டுப் பதிவு செய்யப்பட்டவையும், பிலிப்பைன்ஸ் வாசிகள் பெரும்பான்மைப் பங்குகளைக் கொண்டவையுமான ஹோட்டல் திட்டங்களுக்கு அரசாங்க நிதி வழங்கப்படுமென 535-ம் இலக்க ஜனாதிபதிப் பிரகடனம் தெரிவித்தது.

பண ஊக்கிகள்:—

இத் திட்டங்களுக்கான பண உதவிகள், அரசாங்க சேவைக் காப்புறுதி அமைப்பு, பிலிப்பைன்ஸ் அபிவிருத்தி வங்கி ஆகிய இரு முக்கிய நிறுவனங்களினூடாகவே வழங்கப்பட்டன. 12 வருடத் தவணையில் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இக்கடன்களின் 80 சதவீதத்துக்கு மத்திய வங்கி உத்தரவாதமளித்தது. ஜனாதிபதி பிரகடனத்தைத் தொடர்ந்து ஏராளமான விண்ணப்பங்கள் சுற்றுலாப்பயணத்துறையை வந்தடைந்தன. சிறிது காலத்துள்ளாகவே 14 முதற்தர ஹோட்டல் திட்டங்களுக்கும், பல சிறிய திட்டங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இவ்வளவு திட்டங்கள் இத்துணை விரைவாக ஏன் தோன்றின? சுதந்திரத் தொழில் முயற்சிக் கொள்கை. விண்ணப்பித்த அனைவருக்கும் கடன் வழங்கப்பட்டமை என்பன இதற்குக் காரணமெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் அபிவிருத்தி வங்கி உயர் அதிகாரி ஒருவரது கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது: "இவ்வங்கீகார விஷயத்தில், சுற்றுலாத்துறை தேசிய பொருளாதார அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் அவர்களது எதிர்கால இலக்குகள், சந்தை பற்றிய மதிப்பீடுகள் என்பன எமக்கு வழிகாட்டியாக இருந்தன."

1977 ஜூலை—ஜூன் காலப் பகுதியுள் பிலிப்பைன்ஸ் அபிவிருத்தி வங்கி, மொத்தமாக 112 கோடி 90 இலட்சம் பிலிப்பைன்ஸ் டொலரை 10 முதற்தர ஹோட்டல்களின் நிர்மாணத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட கடனாக வழங்கியிருந்தது. இதே வேளை, அரசாங்க சேவை காப்புறுதி அமைப்பு, 73 கோடி 46 இலட்சம் பிலிப்பைன்ஸ் டொலரைக் கடனாக வழங்கியது. புதிய ஹோட்டல்களைக் கட்டவும், ஏற்கனவே இருந்த ஹோட்டல்களின் விஸ்தரிப்புக்குமென இப்பணம் வழங்கப்பட்டது. 1,824 அறைகளைக் கொண்ட 4 திட்டங்களை இது உள்ளடக்கிற்று. 500 அறைகளைக் கொண்ட மணிலா றீஜன்ட் ஒரு பெரிய திட்டமாகும். இதற்கு வெளிநாடுகளிலிருந்து பெருமளவு முதலீடு கிட்டியது. (12 கோடி 90 இலட்சம் பிலிப்பைன்ஸ் டொலர்). இவ்வதிகரிப்புத் தொடங்க முன்னர், மணிலா மாநகரப் பகுதியில் மொத்தமாக 4,341 அறைகளைக் கொண்ட ஹோட்டல்கள் காணப்பட்டன; 1976 செப்டம்பர் தொட்டு ஆரம்பிக்கப்பட்ட 6,745 அறைகளுடன் இன்று சுமார் 11,086 ஆடம்பர, முதற்தர

அல்லது இரண்டாம் தர ஹோட்டல் அறைகள் அங்குள்ளன. இது 150% அதிகரிப்பைக் காட்டுகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

ஹோட்டல் அறைகளின் உபயோகத்தை அவதானித்தே இப்புதிய திட்டங்கள் எத்துணை தூரம் பலன் அளித்துள்ளன என்பதைக் கணக்கிடலாம். 1976 செப்டம்பரில் நடைபெற்ற உலக வங்கி மகாநாட்டுக்கு முன்னர், ஏற்கனவே குறிப்பிட்டபடி, மேற்படி மூன்று முக்கிய ஹோட்டல்களினதும் தங்கு மிட வசதியில் 80%—90% பயன்படுத்தப்பட்டன. இம் மகாநாடு முடிந்த ஒரு மாத காலத்துக்குள் இந்த மூன்று ஹோட்டல்களும் உட்பட, புதிதாக மணிலா மாநகரப் பகுதியிற் கட்டப்பட்ட சகல ஹோட்டல்களினதும் (மொத்தம் 13 முதல் தர ஹோட்டல்கள்) உபயோகம் பெரு வீழ்ச்சியடைந்தது. இவற்றின் அறைகள் கூட்டு மொத்தமாக 42.2 %மே உபயோகிக்கப்பட்டதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன; 1976 டிசம்பர் அளவில் இந்நிலை மேலும் மோசமாகிற்று; இக்காலத்தில் மொத்த உபயோகம் 38.6 % ஆக—நட்டத்திற்—காணப்பட்டது. பின்னர் இது படிப்படியாக 59.8 %க்கு உயர்ந்தாலும் இது ஒரு தற்காலிக அதிகரிப்பாகவே காணப்பட்டது. சீனப் புது வருடத்தைத் தொடர்ந்து ஹொங்கொங்கிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளே இச் சிறு அதிகரிப்புக்குக் காரணமாயிருந்தனர். நிலைமை மேலும் மோசமடைந்து செல்கின்றதென்றே ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"இத்தகைய ஒரு நிலைமை உருவாக்கும் எந்த ஒரு அரசாங்கத்திடமும் பணம்தானுண்டு. ஆனால், மூளை இல்லையென்றே சொல்ல வேண்டும்; சூழ்நிலை நிலைமைகளைக் கருத்திற்கொள்ளாது, இங்ஙனம் கண்ட மாதிரிக் கட்டிடங்களைக் கட்டித் தள்ளுதல் முட்டாள்தனமாகுகும்" என்கிறார் ஒரு ஹோட்டல் முகாமையாளர்.

இந்நிலையில் வருமானத்தை ஒரு ஸ்திர நிலையில் வைத்துக் கொள்ளுதற்கென, சகல ஹோட்டல்களும் இணைந்து உடன்பாடொன்றைச் செய்து கொள்ளும் யோசனையொன்று முன் வைக்கப்பட்டது. சகல ரக ஹோட்டல்களும் வேறுபாடுகள் எவையுமின்றி, வருமான அதிகரிப்பை நோக்கமாகக் ணங்களை" விதிக்க வேண்டுமென்பதே அதுவாகும். பழைய மூன்று ஹோட்டல் உரிமையாளர்களால் முன் வைக்கப்பட்ட இந்த யோசனை, சுற்றுலாப்பயணத் துறை இலாகாவால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. வருமானத்தை அதிகரிக்கவென, சுற்றுலாப்பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியாவிட்டாலும், வரும் சில பயணிகளிடமிருந்தாவது கூடிய வருமானத்தைப் பெற இது உதவும் எனக் கூறப்பட்டது. இவ்வுடன்பாடு சாத்தியமாகியதுடன், இது சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை மேற்பார்வை செய்யவென, சுற்றுலாப் பயணத்துறை இலாகா ஒரு தனிப் பிரிவையும் ஸ்தாபித்தது.

ஆனால், இது சரிவரப் பின்பற்றப்படவில்லை. ஜூன் மாதமளவில் சில ஹோட்டல்கள்—"செஞ்சுரி பார்க் ஷெரேட்டன்," "ரீஜண்ட்," "பிலிப்பைன் பிளாஸா" என்பன இவ்வுடன்பாட்டை மீறி, மிகக் குறைந்த கட்டண வீதங்களில் அறைகளை வாடகைக்கு விடத் தொடங்கின. உண்மையில் 35 டொலர்—45 டொலர் கட்டணம் அறவிட வேண்டிய அறைகள் 10 முதல் 12 டொலர் வாடகைக்கு விடப்பட்டன. இவ்வகையில் இவை நட்டத்திலேயே இயங்கின.

கடந்த சில வாரங்களில் நிலைமை மோசமாகவே, சில ஹோட்டல்கள், பணியாளர்களுக்கான சம்பளத்தை கொண்டு, "ஆகக் குறைந்த கட்ட வழங்காது நிறுத்தி வைக்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அத்துடன், அவை மேலதிக கடன்களையும் வங்கிகளிடமிருந்து கோரியுள்ளன. ஆனால், வங்கிகளின் பதில் உற்சாகம் தரத்தக்கதாக இல்லை.

ஹோட்டல் அபிவிருத்தி பற்றிய அரசாங்கத்தின் கொள்கை விமர்சனத்தை அமைச்சர் விராட்டா ஏற்றுக்கொள்ளினும், கடன் பிரச்சினையைத் தீர்க்கலாமென அவர் நம்புகிறார்; "இத்தகைய விஷயங்களில் முதல் மூன்று வருடங்களும் கடினமானவையே" எனக் கூறும் அவர் அதேவேளை, தமது 1978-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், சுற்றுலாப் பயண இலாகாவுக்கு முன்னைவிட அதிக நிதி ஒதுக்கீடுகள் எதனையும் செய்யவில்லையென்பதையும் தெரிவித்துள்ளார். எனவே, நாட்டின் உல்லாசப் பயண ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் எதுவித மாற்றமும் இராது.

இதே வேளை, கடன் தொகையையும், வட்டிக் கொடுப்பனவுகளையும் குறைத்துக் கொள்ளும் நோக்குடன், ஹோட்டல்களில் தற்காலிகமாகப் பங்குதாரராகச் சேருமாறு வங்கிகளை, ஹோட்டல் உரிமையாளர்கள் கோரி வருகின்றனர். ஆனால், இக்கோரிக்கையை ஏற்கப் பிலிப்பைன்ஸ் அபிவிருத்தி வங்கி விரும்பவில்லை. ஏனெனில், பலர் இக்கடன்களைச் சரியான முறையிற் பயன்படுத்தவில்லை. இதனால், வங்கிகள் இலகுவாக விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை.

தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய ஹோட்டல்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதற்காக மட்டும் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் பெருமையடையலாம்.

---

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிர்களை உற்பத்தி செய்யும் தன்மைகளைக் கொண்டுள்ளன; மேலும் அவை ஒவ்வொன்றினதும் தனிச் சிறப்பியல்புகளுக்கேற்ப பயிர்ச்செய்கை முறைகளும், முகாமை மாதிரிகளும் வேறுபடுகின்றன. இவ்வடிப்படையில் எம் விவசாயத்தைப் பன்முகப்படுத்துவதன் மூலம் நீண்ட கால ரீதியில் மூலவளங்களின் உச்சப்பயன்பாட்டினை அடைய முடியும்.

விவசாய உற்பத்தியில் நீர் வளங்களின் பயன்பாடு, அவற்றின் முகாமை போன்றவற்றின் முக்கியத்துவம் அண்மைக் காலங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது குறித்த சில ஆரம்ப மூலதனங்கள் அவசியமானவையாகும். மேலும் தற்பொழுது பாரம்பரிய சேனைப் பயிர்ச்சியின் கீழ் இருக்கும் அபிவிருத்தியடைந்த நிலங்களில் விஞ்ஞான ரீதியான முறையில் மழைநீர் விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டும். உள்ளீடுகள் வழங்கல், விஸ்தரிப்பு நடவடிக்கைகள், ஆய்வு வேலைகள் போன்றன குறித்த நிறுவன அமைப்புக்களில் பொருத்தமான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். போக்குவரத்து வசதிகள், களஞ்சியங்கள், இலகுவில் உள்ளீடுகளைப் பெறுதல் விஸ்தரிப்புச் சேவைகள் போன்ற அனுகூலங்களை மிகக் குறைவாகப் பெற்றிருக்கும் பிராந்தியங்களில் கூடிய கவனஞ் செலுத்துதல் முக்கியமானதாகும்.

(26-ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீ லங்காவின் ஹோட்டல் துறை

## அதன் பரிமாணமும், பயன்படுத்தும் அளவும் அறைத் தேவையும்

**—ஜீ. எம். பீ. டி. சில்வா**

1967—1975ஆம் ஆண்டு காலப் பகுதியில், இலங்கையில் ஹோட்டல் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்தது. உல்லாசப் பயணத்துறை 1967ஆம் ஆண்டிலேயே உரிய அமைப்பு முறையுடன் ஆரம்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் இந்தத் துறைக்கு இடப்பட்ட மூலதனத்தின் அளவு,புதிதாக ஏற்படுத்தப்பட்ட பரிமாணம் என்பனவற்றில் காணப்பட்ட முன்னேற்றமும், வளர்ச்சியும் இலங்கைப் பொருளாதாரத்தின் வேறெந்தத் துறையிலும் இல்லாத அளவுக்கு மிகத் துரிதமானவையாக இருந்தன. உதாரணமாக, 1967ஆம் ஆண்டில் உல்லாசப் பயணச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தங்குமிட அறைகளின் மொத்த எண்ணிக்கை 770 ஆகும்.

ஆனால் 1975ஆம் ஆண்டு இறுதியில், சர்வதேச உல்லாசப் பயணத்துறை வர்த்தகத்திற்குப் பயன்படுத்தக்கூடிய அந்தஸ்தும் வசதியுமுள்ள 76 ஹோட்டல்கள் இருந்தன. அவற்றின் அறைவசதி 3,673 ஆக இருந்தது. இவற்றில் 1,100 அறைகள் கொழும்பு நகரில் இருந்தன; 1,689 அறை வசதி கடற்கரைகளில் அமைந்துள்ள ஹோட்டல்களிலும், சரித்திரப் பிரசித்தி பெற்ற பண்டைய நகரங்களிலும் கண்டி மற்றும் மலைநாட்டுப் பிரதேசங்களிலும் மொத்தம் 826 அறை வசதியும், வட பிராந்தியத்தில் 58 அறை வசதியும் இருந்தது. குறிப்பிட்ட காலப்பகுதியில் அறை வசதியில் ஏற்பட்ட வருடாந்த சராசரி வளர்ச்சி 25வீதமாக இருந்தது. இத்துறையில் இடப்பட்ட மூலதனத்தின் அளவை அடிப்படையாக வைத்துப் பரிசீலனை செய்தால், ஹோட்டல் துறையின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது என்றே சொல்லவேண்டும். 1ஆவது அட்டவணையில், 1968—75 காலப் பகுதியில் ஹோட்டல் துறையில் இடப்பட்ட மூலதனம் பற்றிய விவரத்தைக் காணலாம். ஹோட்டல் துறை அமைப்புத் திட்டத்திற்கென அரசு செலவிட்ட பணத்தைத் தவிர்த்து, அத்துறைக்கு 3,205 லட்சம் ரூபா மூலதனமிடப்பட்டது. அதாவது வருடாந்தம் சராசரி சுமார் 400 லட்சம் ரூபா முதலீடு செய்யப்பட்டது. மொத்த மூலதனத்தில் 850 லட்சம் ரூபா வெளிநாட்டுப் பங்காகும்.

ஹோட்டல் தொழில்துறைக்குக் கிடைத்த மூலதனத்தில் மிகப் பெருமளவு தொகை உள்நாட்டிலிருந்தே கிடைத்தது. வெளிநாட்டிலிருந்து கிடைத்த விகிதாசாரம் மிகக் குறைவாகும். தொடர்ந்து மேலும் பல வருடங்களுக்கு இத்துறையில் தங்கு தடையின்றி மூலதனமிடப்படும் என்பதற்கான அறிகுறிகளும் உண்டு. 1976ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றின்படி, அப்போது 1,535 அறை வசதிகொண்ட 33 புதிய ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டு வந்தன. ஹோட்டல்களை நிர்மாணிக்கும் திட்டமானது மேலும் பெருந்தொகை மூலதனத்தைக் கவரக்கூடிய சாத்தியம் உண்டு. ஹோட்டல் நிர்மாண வேலைகளுக்கு மட்டும் 45 கோடி ரூபா மொத்தமாகச் செலவாகி இருக்கும் என மதிப்பிடலாம்.

உல்லாசப் பயணத்துறை வளர்ச்சிக்கான அமைப்புத் திட்டத்துக்கென அரசு செலவிட்ட தொகை பற்றிய சரியான முழுக் கணக்கு விவரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை. கிடைத்த தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விவரங்கள் 1ஆவது அட்டவணையில் தரப்பட்டுள்ளன. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தமை, ரயில்பாதை வீதிகளைச் சீர் செய்தமை, ஹோட்டல் தொழில் துறைக்கு வேண்டிய ஆளணியினரைப் பயிற்றுவதற்கான பயிற்சி நிலையங்களைத் தோற்றுவித்தமை என்பனவற்றுக்குச் செலவிடப்பட்ட தொகையும், மொத்தத்தில் ஹோட்டல் தொழில்துறையைக் கட்டுப்படுத்தி, நிர்வகிக்கும் ஸ்தாபனமாக செயற்படுவதற்கான செலவுத் தொகையும் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்களில் அடங்கும். எனினும் இந்த அமைப்பு முறை அபிவிருத்திகள் எல்லாமே உல்லாசப்பயணத்துறையின் விசேஷ தேவைகளுக்காகவே செய்யப்பட்டவை அல்ல என்பது உண்மையே. ஆனால், அவற்றுக்கான செலவில் பெரும்பகுதி உல்லாசப்பயணத் துறைக்கும் பயன்பட்டது என்பதை மறைக்க முடியாது. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, உல்லாசப் பயணத்துறை அமைப்புமுறை அபிவிருத்திக்கு அரசின் மூலதனம் சுமார் 60 கோடி ரூபாவாகவே இருக்கும்.

ஹோட்டல் துறையின் இந்தத் திறமையான வளர்ச்சி, நாட்டின் பொருளாதாரத்தில் வேறு எந்தத் துறையிலும் அண்மைக் காலத்தில் கண்டிராத அளவுக்கதிகமான வளர்ச்சி என்ற சிறப்புடைத்துமாகும். 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் கைத்தொழில்துறை மிக வேகமாக வளர்ச்சி அடைந்தது எனினும் அந்தக் காலத்தில் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் விலைகளில் உயர்வு ஏற்பட்டதால், அது வளர்ச்சி வேகத்தைக் குறைத்துக் காட்டியது. 1959 முதல் 1972 வரையான காலப்பகுதியில் உற்பத்தித் துறையின் வளர்ச்சி விகிதம் வருடாந்தம் சராசரி 5.7 சதவிகிதமாக இருந்தது. ஆனால் உல்லாசப் பயணத்துறையின் வளர்ச்சி விகிதம் 32.9 சதவிகிதமாக இருந்தது. உல்லாசப்பணத்துறை தேசிய நிகர உற்பத்திக்கு 1970ஆம் ஆண்டில் 63 லட்சம் ரூபாவைப் பங்களித்தது; 1975ஆம் ஆண்டில் அந்தத் தொகை 263 லட்சம் ரூபாவாக உயர்ந்தது.

ஆனால், 1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஹோட்டல் தொழில்துறை தொடர்ந்தும் துரித வளர்ச்சி அடையுமா என்பதில் சந்தேகமுண்டு. ஏனெனில் உல்லாசப் பிரயாணிகள் வருகையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு இன்னமும் அடையப்படவில்லை. நாட்டுக்கு வருகை தரக்கூடிய உல்லாசப் பிரயாணிகள் சம்பந்தமாக மூலாதாரமாக இடப்பட்ட உத்தேசத்தின் அடிப்படையிலேயே ஹோட்டல்களை நிர்மாணிப்பது, அவற்றில் வேண்டிய வசதிகளைச் செய்வது போன்றவற்றுக்கு முதலீடு செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது. இதன் காரணமாக ஹோட்டல் துறையில் மேலதிகப் பரிமாணப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே, இத்துறையில் மேலும் முதலீடு செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துமளவுக்கு உல்லாசப் பிரயாணிகள் வருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.

ஹோட்டல் தொழிலில் முதலீடு.

| வருடம் | பூர்த்தியான அறைகளின் எண்ணிக்கை. | ஹோட்டல்களுக்கு இடப்பட்ட மூலதனச் செலவு ரூபா | வெளிநாடு | மொத்தம் | ஹோட்டல் துறை அமைப்பு முறை அபிவிருத்திகளுக்கு உல்லாசப் பயணச் சபை செலவிட்ட தொகை. |
|---|---|---|---|---|---|
| | | | 0.4 | | — |
| 1968 | 145 | 4.6 | 1.2 | 5.0 | 1.8 |
| 1969 | 120 | 2.1 | 13.8 | 3.3 | 2.4 |
| 1970 | 498 | 22.2 | 0.3 | 36.0 | 1.3 |
| 1971 | 137 | 6.1 | 0.5 | 6.4 | 2.9 |
| 1972 | 75 | 4.0 | 26.1 | 4.5 | 1.9 |
| 1973 | 591 | 34.8 | 3.3 | 60.9 | 3.7 |
| 1974 | 471 | 40.3 | 38.7* | 43.6 | கிடைக்கவில்லை |
| 1975 | 811 | 122.1* | 84.3 | 160.8* | 14.0 |

* உறுதி செய்யப்படாதது.

ஆதாரம்: இலங்கை உல்லாசப் பயணச் சபை

அதிகரிக்கும் வரை, ஹோட்டல் துறையின் முதலீட்டு வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியாக வேண்டி உள்ளது.

### மேலதிகப் பரிமாணப் பிரச்சினை

ஹோட்டல் துறையில், அடுத்து வரும் சில வருடங்களில் மேலதிகப் பரிமாணப் பிரச்சினை தலைதூக்கியே ஆகும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. உல்லாசப் பிரயாணிகள் வருகை எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிக அளவில் இருந்தாலன்றி மேதிகப் பரிமாணப்பிரச்சினை மேலும் மோசமாகலாம். 1977 ஆம் ஆண்டில், அறை வசதி மிகக் கூடுதலாக இருந்தது. அதாவது உல்லாசப் பிரயாணிகள் வருகை ஆகக் கூடிய அளவுக்கு உயர்ந்தாலும் கூட அதற்குத் தேவையானதை விட மேலதிக அறை வசதி இருந்தது. உல்லாசப் பிரயாணிகள் வருகையானது பருவ காலத்தைப் பொறுத்த ஒன்று. எனவே ஆகக் கூடிய அளவு மட்டத்தில் வைத்து அதற்கேற்ற அறை வசதிகளைச் செய்ய முயற்சிப்பது விரும்பத்தக்கது அல்ல. ஹோட்டல் துறையில் இடப்படும் மூலதனத்துக்கு உரிய வருமானத்தைத் தருமளவுக்கு வகை செய்யக்கூடிய அறை வசதிகளைச் செய்வதே புத்திசாலித்தனமும், நடைமுறைச் சாத்தியமுமானதாகும். ஹோட்டல் தொழில் துறை வளர்ச்சி பெற்ற நிலைக்கு வந்த பின்னர் பழைய ஹோட்டல் என்று கணிக்கக்கூடியவற்றின் விகிதாசாரம் அதிகரிக்கும். அவற்றைத் திருத்தவும், பராமரிக்கவும் ஆகும் செலவு அதிகரிக்கும் என்பது மட்டு ஹோட்டல் உரிமையாளர் ஒருவர், தாம் உத்தேசித்த வருமானத்தில் 40 சதவீதத்துக்குக் குறையப் பெற்றாரானால், அவரால் தொடர்ந்து அந்தத் தொழிலைச் செய்ய முடியாது போய்விடும். 1980ஆம் ஆண்டளவில் ஹோட்டல் தொழில் உருப்படியாக இயங்க வேண்டுமானால் அத்துறையின் வருமானக்குறியீட்டில் 60 சதவீதமாவது எய்தப்பட்டாக வேண்டும்.

ஹோட்டல்துறைப் பரிமாணத்தின் பல்வேறு மட்டங்களையும் அடைவதற்கு உல்லாசப் பிரயாணிகளின் வருகை எந்தளவு இருக்க வேண்டும் என்பதை மதிப்பிட்டுக் கொள்ளலாம். பின்வரும் சூத்திரத்தின் உதவியுடன் அந்த மதிப்பீட்டைச் செய்யலாம்:—

உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை:

அறைகளின் எண்ணிக்கை: 365.
பாவிக்கப்படும் அறைகளின் விகிதம்.

பாவிக்கப்படும் படுக்கை/அறை விகிதாசாரம்.
தங்கி நிற்கும் காலத்தின் சராசரி.

நாட்டுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் எல்லோரும் சர்வதேசத் தரமுடைய ஹோட்டல்களில் தங்குவதில்லை. எனவே மேற்கண்ட சூத்திரத்தின் மூலம் பெறப்படும் உல்லாசப்பிரயாணிகள் எண்ணிக்கையைவிட அதிகமானோர் நாட்டுக்கு வருவர் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். 1973—75ஆம் ஆண்டு காலப் பகுதியில், நாட்டுக்கு வரும் ஒவ்வொரு நான்கு உல்லாசப் பிரயாணிகளில் ஒருவர், உல்லாசப்பயணத்துறையில் சர்வதேசத் தரமில்லாதவையாகக் கருதப்படும் இடங்களில் தங்கியிருந்ததாகக் காணப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சூத்திரத்தின் மூலம் பெறப்படும் உல்லாசப் பிரயாணிகள் எண்ணிக்கையை, தரமுள்ள ஹோட்டல்களில் தங்கியிருப்போரின் விகிதாசாரத்தின் தசம பின்னத்தினால் பெருக்கி, அதனைச் சரிப்படுத்த வேண்டும். அவ்வாறான எடுகோள்களையும் அவற்றின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகளையும் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்:—

1. உல்லாசப் பிரயாணி ஒருவர் தங்கி நிற்கும் சராசரிக் காலம் அண்மைக் காலத்தில் வெகுவாகக் குறைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. 1967இல் 11.0 ஆக இருந்த சராசரிக் காலம் 1973இல் 10.3 ஆகக் குறைந்தது. பிரஸ்தாப சராசரிக் காலம் 1974இல் 10.2ஆகவும் 1975இல் 9.8 ஆகவும் மேலும் மேலும் வீழ்ச்சி அடைந்தது.

### பெறுபேறுகள்

1975இல் நாட்டுக்கு வந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையைவிட இரண்டு மடங்குக்கு மேலானோர் 1977இல் இங்கு வந்திருக்க வேண்டும் என்பதைப் பெறுபேறுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இந்தத் துறையைப் பொறுத்த மட்டில், மேற்சொன்ன சாதனையை நிலைநாட்டுவது என்பது பெரும் வித்தையாகவே இருக்கும். ஏனெனில், சர்வதேச ரீதியிலான உல்லாசப் பிரயாணிகள் வருகை அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொருளாதார மீட்சியை வெகுவிரைவில் பிரதிபலிப்பதாக இல்லை. எனவே அடுத்து வரும் சில வருடங்களில், ஹோட்டல் துறையில் அளவுக்கதிகமான பரிமாணப் பிரச்சினை பெரும் கஷ்டங்களை ஏற்படுத்த இடமுண்டு. அதன்மூலம் இத்துறைக்கு இடப்பட்ட மூலதனத்துக்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தின் அளவிலும் (முழுதார்ந்த விகிதாசாரத்திலும்) பெரும் வீழ்ச்சி காணப்படும். ஹோட்டல் துறையின் பரிமாணத்தை விஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுகோள்கள்:—

பயன்படுத்தக்கூடிய அறைகளின் எண்ணிக்கை — 4980.

| | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 |
|---|---|---|---|---|---|---|
| பாவிக்கப்படும் அறைகளின் வீதம் | 52 | 54 | 56 | 58 | 60 | 60 |
| | 1.7 | 1.7 | 1.7 | 1.7 | 1.7 | 1.7 |
| பாவிக்கப்படும் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| படுக்கை/அறை விகிதாசாரம் | 0.75 | 0.75 | 0.75 | 0.75 | 0.75 | 0.75 |

தரிப்பதனைக் கட்டுப்படுத்திக் கொண்டால், 1980ஆம் ஆண்டின் பின்னராவது பிரச்சினையை ஓரளவாவது தவிர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு தவிர்த்துக்கொள்வதற்கு இந்தப் பிரச்சினையின் அடிப்படையை உணர்ந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். நாட்டுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை, உயர்ந்து செல்லாது நிலையானதாக இருந்தாலும்கூட, அவர்கள் இங்கு தங்கி நிற்கும் சராசரிக் காலம், அங்கிகரிக்கப்பட்ட தரமுள்ள இடங்களில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை ஆகிய இரண்டும் படிப்படியாக உயரும்பட்சத்தில் அதிகளவு பரிமாணத்தை அடைய முடியும்.

1975ஆம் ஆண்டளவில் நாட்டின் சில பிரதேசங்கள் உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய விதத்தில் சிறப்பாக அபிவிருத்தி அடைந்திருந்தன. எனினும் அந்த வேளையில் கிழக்குக் கரைப் பிரதேசம் உல்லாசப் பயணத்துறைக்குப் பயன் படுத்தப்படவில்லை. இப்போதுதான் அந்தப் பிரதேசத்தையும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடமாக மாற்றுவதில் அக்கறை காட்டப்பட்டு வருகிறது. மேற்காணப்பட்ட திட்டங்கள் (அட்டவணைகள்) தேவைப்படக்கூடிய அறைகளை சற்றுக் குறைவாகவே காட்டியபோதிலும் கிழக்குக் கரையோரப் பகுதியிலே மிகக் கூடியளவு அறைகளைப் பயன் படுத்துமளவுக்கு அந்தப் பிரதேசத்துக்குச் சாதகமான முன்றயில் உல்லாசப் பிரயாணிகளின் உள்நாட்டிற்குள்ளான நடமாட்டத்தில் மாற்றம் ஏற்படக் கூடும். வடபிராந்தியத்திலும் இதே நிலைமை ஏற்படக் கூடுமென நினைக்க இடமுண்டு.

முடிவுரை

இந்த ஆய்வானது உல்லாசப் பயணத்துறையின் கொள்கைகள் சம்பந்தமாக மிக முக்கியமான பல விஷயங்களைத் தொட்டுக் காட்டியுள்ளது எனலாம். ஹோட்டல் துறை ஏனைய துறைகளைவிட வெகு துரிதமாக வளர்ச்சி கண்டமைக்கு இரண்டு முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். மிகமிகத் தாராளமான முறையில் வரிச் சலுகைகளும், ஊக்குவிப்புகளும் அளிக்கப்பட்டமை ஒன்று. கைத்தொழில் துறையில் முதலீடு செய்யும்போது தொழில் நுட்ப விவகாரம் தலையெடுக்கும் நிலை இருந்த அதே வேளையில் ஹோட்டல் துறையில் முதலீடு செய்வதற்கு அவ்வாறான விவகாரம் எதுவுமின்றி, இலகுவில் தொழில் தொடங்க முடியும் என்பது மற்றையது. அதுமட்டுமன்றி ஹோட்டல் துறையின் ஆரம்ப கட்டத்தில், நாட்டுக்குப் பெருந் தொகையான உல்லாசப் பிரயாணிகள் வருவார்கள் என்ற சாதகமான எதிர்பார்ப்புடனேயே திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவை யாவும் சேர்ந்தமையினாலேயே— அவற்றின் விளைவாகவே இந்தத் துறையில் அளவுக்கதிகமான பரிமாணப் பிரச்சினை ஏற்படலாயிற்று. எனவே, நாட்டின் நலனைக் கருதியும், ஹோட்டல் துறையில் முதலீடு செய்துள்ளவர்களின் தனிப்பட்ட நலனைக் கருதியும், இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள பரிமாணத்தை உரிய முறையில், தக்க விதத்தில் பயன்படுத்தும் நிலை ஏற்படும்வரை மேலும் மேலும் ஹோட்டல்களை நிர்மாணிப்பதை — ஹோட்டல் துறையில் புதிதாக முதலீடு செய்வதை வெகுவாகக் குறைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஹோட்டல் துறையில் அளவுக்கதிகமான பரிமாணம் ஏற்பட்டுள்ளதால், ஹோட்டல் கட்டணங்களைக் குறைக்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதற்குப் போதியளவு சான்றுகள் உள்ளன. நாட்டுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்து இழுப்பதில் ஹோட்டல்களுக்கிடையே பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது. அதனால் பல ஹோட்டல்கள், தமது கட்டண விவரப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களை விட மிகக் குறைந்த கட்டணங்களை அறவிட வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. தேசிய பொருளாதார நோக்கில், இது பெரும் விசனத்துக்குரிய ஒன்றாகும்.

உல்லாசப் பிரயாணி ஒருவர் மூலம் கிடைக்கும் வருமானம், உல்லாசப் பிரயாணி ஒருவர் ஹோட்டலில் ஓர் இரவுக்குத் தங்குவதால் கிடைக்கும் வருமானம் என்பன தொடர்ச்சியாக உயர்ந்து வந்திருப்பது தேசிய நலன் நோக்கில் மிக முக்கியமானதாகும். உல்லாசப் பிரயாணிகளின் வருகை, ஹோட்டலில் இரவில் தங்குவோர் தொகை என்பன குறைந்தாலும் கூட மொத்த வருமானம் அதிகரித்து வரப் பொதுவாக இடமுண்டு. ஆனால் அளவுக்கதிகமான பரிமாணப் பிரச்சினை இருக்குமானால் தனி உல்லாசப் பிரயாணி மூலம் கிடைக்கும் வருமானம் இரவில் தங்குவதால் கிடைக்கும் வருமானம் என்பனவற்றின் வளர்ச்சியை நிச்சயம் குறைத்துவிடும். நெருக்கடியான சூழ்நிலைகளில் மொத்த வருமானத்திலேயே வீழ்ச்சியை ஏற்படுத்திவிடும். எமது நாட்டைப் பொறுத்த மட்டில், ஹோட்டல் துறை இன்னமும் தனது குழந்தைப் பிராயத்திலேயே இருப்பதால், இதுவரை ஏற்பட்ட வளர்ச்சியிலிருந்து மேல்நோக்கி எழுவதற்கு வேண்டிய வளங்கள் தேவையான மட்டும் உள்ளன.

உல்லாசப் பயணத்துறையின் கொள்கை வகுப்போர், இன்னொரு முக்கிய விஷயத்தைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அதாவது

| வருடம் (1) | பாவிக்கக் கூடிய அறைகளின் அளவு (2) | நாட்டுக்குள் வர வேண்டிய உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை (3) | இலங்கை உல்லாசப் பயணச் சபையின் புதுக்கிய மதிப்பீடு. (4) | (4) சக (3) x100 (5) |
|---|---|---|---|---|
| 1977 | 52 | 2,14,246 | | 63.5% |
| 1978 | 54 | 2,22,486 | 1,36,000 | 75.5% |
| 1979 | 56 | 2,30,727 | 1,68,000 | 91.0% |
| 1980 | 58 | 2,38,967 | 2,10,000 | 96.2% |
| 1981 | 60 | 2,47,207 | 2,30,000 | — |
| 1982 | 60 | 2,47,207 | — | — |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவான இடங்களில் தங்கி நிற்கும் உல்லாசப் பயணிகள், நண்பர்கள், நண்பர்களின் உறவினர்கள் என்பவர்களோடு தங்கி நிற்கும் உல்லாசப் பிரயாணிகள் ஆகியோரது எண்ணிக்கை வரவர அதிகரித்துச் செல்கிறது என்பதே அதுவாகும். உல்லாசப்பயணத்துறை நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணி தேடித் தரும் முக்கிய துறைகளில் ஒன்ருக விளங்குகிறது. அதற்கான செலவினத்தில் பெரும் பகுதி இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குச் செலவிடப்படுவதாலும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதி கள்ளச்சந்தைக்குச் சென்றுவிடுவதாலும் உல்லாசப்பயணத்துறை மீது ஏற்கனவே சந்தேகக்கண் விழுந்துள்ளது. உல்லாசப் பயண ஹோட்டல்களில் தங்கியிருக்காத சாரரில், நண்பர்கள்- உறவினர்களுடன் தங்கியிருப்போர் எண்ணிக்கை குறிப்பிடக்கூடிய அளவு வந்துவிடுமாஞல், உல்லாசப் பயணத்துறைக்கு இடப்பட்ட மூலதனத்துக்கு ஏற்ற வருமானம் கிடைக்காது போய் விடும். இலங்கை வருபவர்கள் எமது நாட்டு விருந்தோம்பலில் எவ்வளவுக்கு எவ்வளவு ஈடுபாடு காட்டுகிருர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு எங்களது வளம் சிதைந்து போகும். மலிவான இடங்களில் தங்கியிருக்க விரும்பும் உல்லாசப் பிரயாணிகளாலும் மிகக் குறைந்தளவு நன்மையே கிடைக்கும் சாத்தியம் உண்டு. இந்த வகையைச் சார்ந்த உல்லாசப் பிரயாணிகள், அநேகமாகத் தங்குமிடச் செலவை மட்டுமே நிச்சயம் பிடிப்பார்கள் என்றும், உணவு, பானம் ஆகியவற்றுக்காக அவர்கள் செலவிடும் பணம் தரமுள்ள ஹோட்டல்களில் தங்கியிருப்போர் செலவிடும் பணத்துக்குச் சமமாகவே இருக்கும் என்றும் கருதுவது நியாயமானதே. மலிவான இடங்களில் தங்கியிருக்கும் உல்லாசப் பிரயாணிகள் தங்குமிடக் கட்டணம், தனியாள் உபசரிப்புச் சேவைக் கட்டணம் என்பவற்றிலேயே மிச்சம் பிடிக்கிருர்கள் என்பதே அதன் கருத்தாகும். எனவே மலிவான இடங்களில் தங்கியிருக்கும் உல்லாசப் பிரயாணிகளுக்கு, உள்நாட்டுப் பொருள் செலவினத்தைவிட இறக்குமதிப் பொருட் செலவினமே அதிகமாகச் செலவாகும். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் உல்லாசப் பிரயாணிகள் தங்குவதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்யப்பட வேண்டும்.

---

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி வளர்ச்சியும், துரிதமான சமூக, அரசியல் மாற்றங்களும் தோற்றுவித்திருக்கும் அபிலாஷைகளுடன் ஒத்துப்போகும் வகையில் உழவனின் வாழ்க்கைத்தரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய ஸ்திரமானதும் பொருத்தமானதுமான புதிய உள்நாட்டு விவசாய அமைப்பொன்று உருவாக்கப்படுதல் வேண்டும். துரித வேகத்தில் அதிகரித்து வரும் உழைக்கக்கூடிய மக்கள் தொகையினரில் பெரும்பான்மையோருக்கு எதிர்காலத்தில் தொழில் தொழில் வாய்ப்புக்களை வழங்கவல்ல பிரதான மூலமாக கிராமியத் துறையே அமையும். இவ்வாய்ப்புக்களை வழங்குவதில் விவசாயத்துறை வெற்றி பெற வேண்டுமாயின் இதுகாறும் இல்லாதிருந்த புதிய விவசாய ஒழுங்கொன்று எழுச்சியடைதல் அவசியமானதாயிருக்கும்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படுவதில்லை. இது விளைச்சலைப் பெரிதும் பாதிக்கிறது. உயர் விளைச்சல் தரும் நெல் இனங்கள் பொருத்தமற்ற இடங்களில் விதைக்கப்படுவதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் உரப்பாவனை மூலமான நன்மைகளை நமது விவசாயிகள் பெருமளவில் அனுபவித்து வந்தார்களாயினும், உலகில் எண்ணெய் விலை உயர்ந்தமையின் காரணமாக, உர வகைகளின் விலையும் வெகுவாக அதிகரித்தமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. உரவகைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் நோக்குடன், அரசாங்கம் உரத்துக்கு மிக நீண்ட காலமாக மானியம் வழங்கி வந்துள்ளது. உர உபயோகம் 1973ல் உச்சக் கட்டத்தை அடைந்தது; அதனைத் தொடர்ந்து, உயர் விலைகளும், சாதகமற்ற கால நிலைகளும் அதன் பாவனையைக் குறைத்தன. இது மொத்த உற்பத்தியிலும் பாதிப்பைக் கொணர்ந்தது.

நாற்று நடுதல் இலங்கையில் மிகச் சிறிய அளவிலேதான் மேற்கொள்ளப்படுகிறது. 1973/74 பெரும் போகத்தின் போது 18% ஆன விவசாயிகளே நாற்று நடுதலை மேற்கொண்டனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தொழிலாளர் அதிகம் தேவைப்படுவதன் காரணமாக இந் நடவடிக்கை விவசாயிகள் மேற்கொள்வதில்லை. நாற்று நடுதல் மேற்கொள்ளப்படாததானது, களைகளை அகற்றுவதையும் சிறப்பான வகையில் மேற்கொள்ளுவதில் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. தொழில் நுட்ப முன்னேற்றங்களின் அபிவிருத்திகள் மூலமான நன்மைகள் எதிர்காலத்தில் தான் அதிகம் கிடைக்குமென்ருலும், இதன் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்பதை மறுக்க முடியாது; நெல் விளைச்சலில் இது பெரு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனுவின் பசுமைப்புரட்சி

## கலாநிதி நோர்மன் போர்லாங்குடன் ஒரு பேட்டி

"தன் நாட்டு மக்களுக்கு உணவளிப்பதற்கான சீனுவின் தீர்மானம் உலகம் கண்ட மகத்தான விவசாயச் சீரமைப்பொன்றினைத் தோற்றுவித்துள்ளது." மத்திய கோட்டுப் பகுதிக்குரிய குள்ளமான கோதுமை இனத்தைக் கண்டறிந்து அதனைத் தென்னுசியாவில் பரவலாக்கிய கலாநிதி நோர்மன் போர்லாங் இவ்வாறு கூறுகின்றுர். இப்பணிக்காக இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. சீனுவின் இந்த வெற்றிக்கான பிரதான காரணிகளிலொன்று, உற்பத்தியதிகரிப்பிற்காக வழங்கப்படும் ஊக்குவிப்புக்களாகும். விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலைகள் கூடிச் சென்றுள்ள போதிலும், பசளை மற்றும் உள்வீடுகள் தொடர்பான செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

நாடெங்கணும் பரந்து காணப்படும் வயல் நிலங்களில் நவீன பண்ணை நுணுக்கங்களைப் பிரயோகித்து அறுவடையை இரட்டிப்பாகவும், மும்மடங்காகவும் பெற்று வரும் சீனு, இத்துறையில் ஏனைய வளர்முக நாடுகளுக்கு வழிகாட்டி நிற்கின்றது என ஐக்கிய அமெரிக்க 'கிரிஸ்டியன் ஸயன்ஸ் மொனிடர்' சஞ்சிகையின் 1977 டிசம்பர் இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் கலாநிதி போர்லாங் குறிப்பிடுகின்றுர்.

மெக்ஸிக்கோவில் எல் படான் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் சர்வதேச சோளம், கோதுமை விருத்தி நிலையத்தில் கோதுமை தொடர்பான திட்டங்களை நெறிப்படுத்தும் கலாநிதி போர்லாங், 1977 ஜூன்—ஜூலை மாதங்களில் மேற்கொண்ட தன் இரண்டாவது சீன விஜயத்தின் பின்னர் நிலையத்தில் உரையாற்றும் போது, தன் மக்களுக்கு உணவளிக்க சீனு எடுத்து வரும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டினுர்.

அரிசி, கோதுமை, சோளம் போன்றவை தொடர்பான சீனுவின் சாதனைகளை அவர் சிலாகித்துப் பேசினுர். பல வருடங்களாக மெக்ஸிக்கோவில் விருத்தி செய்யப்பட்டுள்ள இனக் கோதுமையை சீனு நிதானமாகப் பரீட்சித்துப் பார்த்து வந்த போதிலும் சீனுவின் பசுமைப் புரட்சி 1971ல் ஆரம்பித்து விட்டது என அவர் கூறுகின்றுர்.

1971ல் 1,000 இருத்தல் பரீட்சார்த்த விதைகளை பாகிஸ்தான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து சீனு இறக்குமதி செய்தது. பின் 1973லும் 1974லும் 15,000 தொன் மெக்சிகன் விதைகளைக் கொள்வனவு செய்ததுடன் அங்கு பசுமைப்புரட்சி மலரத் தொடங்கிற்று. 1975ம் வருடம் சீனு 41 மில்லியன் தொன் கோதுமையை உற்பத்தி செய்து உலகில் மூன்றுவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதே ஆண்டில் சோவியத் யூனியன் 65 மில்லியன் தொன்களையும், ஐக்கிய அமெரிக்கா 58 மில்லியன் தொன்னையும் உற்பத்தி செய்தன.

ஆராய்ச்சி, உற்பத்தி, பங்கீடு ஆகிய எல்லா வகையிலும் சீனு விவசாயத்திற்கு முதலிடமளிக்கின்றது. உணவு சமமான முறையில் எல்லோரையும் சென்றடைகின்றது. பசித்திருக்கும் எந்த மனிதனையும் சீனுவில் தான் காணவில்லையென்று அவர் கூறுகின்றுர்.

சீனுவின் விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் விருந்தாளியாக, நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பிரயாணம் செய்த கலாநிதி போர்லொக் நாடு மூன்று விவசாயப் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினுர்.

1963ம் ஆண்டிலிருந்து சீனு விவசாய உள்வீடுகளில் பாரிய முதலீடுகளைச் செய்து வருவதாக அவர் குறிப்பிடுகின்றுர். "உதாரணமாக: 1960ல் சீனுவில் இரசாயனப் பசளை முழுமையாகவே பாவிக்கப்படவில்லை. மிருக, மனிதக் கழிவுகளைக் கலப்பதன் மூலம் அவர்கள் மண்ணின் வளத்தைப் பாதுகாத்தனர். சீனுவில் நிலக்கரிச் சுரங்கங்களை அபிவிருத்தி செய்து, அதனைச் சமையல் எரிபொருளாகப் பாவித்தனர்; மாறுக, இந்தியாவில் நிலக்கரி பெருமளவில் காணப்பட்டபோதிலும் இவ்வளம் விருத்தி செய்யப்படவில்லை. பசுவின் சாணம் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டமையால் மண் வளமும் குன்றியது."

"1960ல் சீனு சில இரசாயனப் பசளை உற்பத்தி நிலையங்களை நிறுவ ஆரம்பித்தது. 1974ல் நான் அங்கு விஜயம் செய்த பொழுது 1200 அல்லது அதனைவிடக் கூடுதலான சிறு தொழிற்சாலைகள் நாட்டில் பரவலாகக் காணப்பட்டன. 1974ம் ஆண்டில் சீனு உலகின் மிகப் பெரிய நைட்ரஜன் பசளை இறக்குமதி செய்யும் நாடாகவுமிருந்தது. இதன் பெரும் பகுதி ஜப்பானிலிருந்து பெறப்பட்டது. எண்ணெய் விலையதிகரிப்பின் பின்னர் ஜப்பானின் பெற்ருேலிய இறக்குமதி வீழ்ச்சியடைந்தது. ஜப்பான் பிரதானமாக தனது விவசாயிகளுக்கு அளிக்கு முகமாக, திடீரென பசளை உற்பத்தியைக் குறைத்தது.

ஆறு வாரங்களுக்குள் சீனு ஒரு நாளைக்கு 1000 தொன் உற்பத்திச் சக்தி கொண்ட, பத்து அமோனியா உலைகளை நிர்மாணிக்கத் தீர்மானித்து, அதனை நிர்மாணிப்பதற்கு இத்துறையில் திறமைவாய்ந்த அமெரிக்கர், பிரான்சியர், டச்சுக்காரர், ஜப்பானியர் ஆகியோர் வேலைக்கமர்த்தப்பட்டனர். தற்பொழுது அவர்கள் மேலும் இரண்டு உலைகளை நிர்மாணித்ததன் மூலம் எண்ணிக்கையைப் பன்னிரண்டாக உயர்த்திக் கொண்டனர்."

பொருள் நன்மைகளை நாடாது தார்மீக ஒழுக்கத்துடன் உழைக்கும் மாஓவின் கோட்பாட்டு ரீதியான மனிதன் தொடர்ந்தும் அவ்வாறு வாழ்வானு எனவும், பொது

நன்மைக்காகத் தியாகங்களை மேற்கொண்ட பாட்டாளிகள், விவசாயிகள், இராணுவத்தினர் ஆகியோர் அவரில்லாத காலத்தில் உழைப்பின் பயனில் பெரும்பாகத்தைக் கோர மாட்டார்களா என்றும் அவரிடம் ஒரு வினா விடுக்கப்பட்டது.

“சீன வரலாற்றில், தொடர்ந்தும் பணித்துறையாட்சி மேட்டுக் குடியினரின் கை ஓங்கியிருந்தது. ‘பாட்டாளிகளின் மகத்தான கலாசாரப் புரட்சி,அபிவிருத்தியை நிலைகுலையச் செய்யும் பணித்துறையின் எழுச்சியைத் தடுப்பதனையே நோக்கமாகக் கொண்டிருந்தது. புரட்சியை நீடித்து நிலைக்கச் செய்யக்கூடிய ஒரு வழியைக் காணாவிடில், சீனாவின் வரலாற்று ரீதியான போக்கு தொடர்ந்தும் நிலவும் என்று மாவோ அஞ்சினார் என அவர் பதிலளித்தார்.

ஐ ஓ வா வில், கிரொஸ்கோவிற்கு அண்மையிலுள்ள பண்ணையொன்றில் குழந்தையாக வளர்ந்த கலாநிதி போர்லொக், தாழ்ந்த, வறிய கிராமிய மக்களுடன் வாழ்வதற்கு புத்திஜீவிகளை கிராமங்களுக்கு அனுப்பும் மாஓவின் நடவடிக்கையை பெருமளவிற்குப் பாராட்டுகின்றார்.நான்கு சதவீதமான அமெரிக்கர்கள் மட்டுமே தற்பொழுது பண்ணை நிலங்களில் வாழ்வதாகக் குறிப்பிடும் அவர், பண்ணை அனுபவத்துடன் கூடிய தாவர வளர்ப்பாளர்கள் குறைவாக இருப்பது இன்றைய அமெரிக்காவின் முக்கிய பிரச்சினையாகும் என்கிறார்.

பசுமைப் புரட்சியின் வெற்றிகளை முறையாக வரிசைப் படுத்துமாறு கேட்கப்பட்டபோது சீனா, இந்தியா, ஆர்ஜந்தீனா, எகிப்து, பாகிஸ்தான் என்று அவர் விடையளித்தார். “இந்தியா இன்னும் பங்கீட்டுப் பிரச்சினையால் அவதிப்படுகின்றது; இந்தியாவின் தற்போதைய இருப்பு 20 மில்லியன் தொன்கள்; எனினும் மிக வறிய மக்கள் இன்னும் பசியால் வாடுகின்றனர்.”

பாகிஸ்தானும், ஆர்ஜந்தீனாவும் தனது பாரிய விவசாய வளத்தை உணர்ந்து கொள்ளாமைக்கு, அமைதியற்ற நகர்ப்புற மக்களுக்கு மலிவான விலையில் உணவினை வழங்கும் பொருட்டு பண்ணை விலைகளை குறைந்த மட்டத்தில் வைக்க முயலும் அரசியல் தலைமைத்துவம் காரணமாகவிருக்கலாமென அவர் கருதுகின்றார்.

சீனாவின் நோக்கம் உற்பத்தியை ஊக்குவிப்பதாகவேயிருந்தது. விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட விலைகள் அதிகரித்த பொழுதிலும், பசளை மற்றும் உள்ளீடுகளுக்கான விலைகள் குறைந்த மட்டத்திலேயே வைக்கப்பட்டுள்ளன.

சீனத்தலைவர்களை அடுத்து, விவசாய அபிவிருத்திக் கொள்கைகளுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கியவர்களாக அயூப்கான், இந்திரா காந்தி போன்றவர்களின் பெயர்களை அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியா பசுமைப் புரட்சிக்குரிய திட்டங்களை ஆரம்பித்து செயல்படுத்தாவிடில், அந்நாட்டிற்கான 10 மில்லியன் அவசரகால கோதுமை உதவியை நிறுத்தப் போவதாக ஜனாதிபதி ஜோன்ஸன் பயமுறுத்தியமை பற்றித் தான் அறிந்திருக்கவில்லையென கலாநிதி போர்லொக் குறிப்பிட்டார். அப்போதைய ஐக்கிய அமெரிக்க விவசாயக் காரியதரிசி ஓர்வில் பிரீமனுக்கும், (இவர் பல வருடங்களாக இதனைப் பகிரங்கப்படுத்தவில்லை) இந்திய விவசாய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்திற்கு மிடையே ரோமில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் பொழுது இரகசியமான முறையில் விவாதித்துத் தீர்க்கப்பட்ட இவ்வம்சம் பிற்காலத்தில் திருமதி இந்திரா காந்திக்கும், திரு. ஜோன்ஸனிற்குமிடையில் வாஷிங்டனில் நடைபெற்ற பிரத்தியேக பேச்சுவார்த்தைகளின் பொழுது உறுதிப்படுத்தப்பட்டது. எதிர்காலம் பற்றித்தான் இரு வகைகளில் கவலைப்படுவதாக அவர் கூறுகின்றார்.

வட அமெரிக்காவின் தற்போதைய அமோக விளைச்சல் காரணமாக ஏற்படுகின்ற மேலதிக கோதுமைக் குவியல், உதவியாக அல்லது சலுகையான விலைகளில் வறிய நாடுகளை அடையின் அந்நாடுகள் மீண்டும் விவசாயத்தைப் புறக்கணிக்கத் தூண்டுதலளிக்கும். இன்றைய உலகத் தலைவர்கள் தமது நகரங்களுக்கு மலிவான உணவைப் பெறுவதில் கூடிய அக்கறையுடன் இருக்கின்றனர். சில வருடங்களுக்கு வட அமெரிக்க கோதுமை விளைச்சல் பாதிப்புறின், எதிர்காலப் பிரச்சினைகளை மேலும் வியாபிக்கும்.

உலகின் 300 கோடி விவசாயிகளுள் இதுவரை 10—15 சதவீதமானோரே, 1960களில் ஆரம்பிக்கப்பட்ட, அமெரிக்க பண்ணைத் தொழில்நுட்ப இடப்பெயர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலானோர் வரட்சிப் பிரதேச நீர்ப்பாசன விவசாய நடவடிக்கையிலேயே ஈடுபட்டுள்ளனர்.

உழைப்பூதிய அடிப்படையில் மக்களுக்கு உணவளிக்கும், ஈர நெல்விளை பிரதேசங்களையும், மழையை நம்பிய உலர் நிலங்களையும் இவை இன்னும் சென்றடைய வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் விலைக்கட்டுப்பாட்டுக் கொள்கை, பயிற்றப்பட்ட விஸ்தரிப்பு ஊழியர்களின் குறைபாடு, விவசாயத்திலான முதலீட்டுக் குறைபாடு, திறமையற்ற அரசியல் தலைமைத்துவத்தினால் விவசாயத்திற்கு வழங்கப்படுகின்ற குறைவான கவனம் என்பன இதற்குப் பெருமளவு காரணமாகவுள்ளது.

---

லண்டன் ‘எகனமிஸ்ட்’ சஞ்சிகையின் சமீபத்திய இதழொன்றில் சீனாவின் விவசாய வளர்ச்சி பற்றிய செய்தியறிக்கையொன்றை எழுதியுள்ள அதன் பிரதி ஆசிரியர் பின்வருமாறு எழுதுகின்றார்.

“லாவோஸிலிருந்து தென் வியட்னாம் வரையிலிருக்கும் தென் கிழக்காசியாவின் பல நாடுகளின் ஏக்கருக்கான நெல் விளைச்சல் $1\frac{1}{2}$—$2\frac{1}{2}$ தொன்னாக இருக்கின்றது; ஆனால் ‘இவ்விலக்கு கி. பி. 900ல் ஜப்பானால் எய்தப்பட்டது.”

“இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பான் அடைந்த இலக்கை (ஏக்கருக்கு $3\frac{1}{2}$—$5\frac{1}{4}$ தொன்கள்) சீனா, தாய்வான், கொரியா ஆகிய நாடுகள் இப்பொழுது எய்தியுள்ளன. சீனாவின் சில பிரதேசங்களில் ஏக்கருக்கான விளைச்சல், ‘ஜப்பானின் தற்போதைய அளவைவிடவும் (சராசரி 6 தொன்கள்) கூடுதலாக இருக்கின்றது.”

“ஹுனான் மாநிலத்தில் வருடத்துக்கு இரு முறை பயிரிடும் நிலத்தின் அளவு கடந்த பதினொரு வருட காலத்தில் 25% இலிருந்து 95%ஆக அதிகரித்துள்ளது. இந்த 95%ல் ஏறத்தாழ கால் பகுதியில் இப்பொழுது வருடம் மும்முறை பயிர்ச்செய்கை நடைபெறுகின்றது.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணித்துறை ஆட்சியே பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்!

பொருளாதார நெருக்கடிச் சபையொன்று நிறுவப்பட வேண்டியதன் அவசியம் பற்றிய ஒரு பரிந்துரை

எம். ஏ. ஹுஸைன் மாலிக்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## மாற்றங்கள் உடன் தேவை

பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதிலுள்ள இக்குறைபாடுகள், உடனடிச் சீர் திருத்தங்களை வேண்டி நிற்கின்றன. இது ஒரு இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை; கடந்த காலங்களில் அதிகாரிகள் வகித்து வந்த செல்வாக்கின் அடிப்படையிற் பார்க்கையில், அவர்கள் இச் சீர் திருத்தங்களை நிச்சயம் எதிர்த்தே தீருவார்கள்; கடந்த காலங்களில் அவர்கள் இதனை வெற்றிகரமாகச் செய்துள்ளனர். எனினும், பூட்டோ நிர்வாகத்தின் கீழ், பணித்துறையாட்சி அதிகாரிகளது நிலை சிறிது பலவீனப்படுத்தப்பட்ட படியாலும், நாட்டின் பொருளாதாரத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வந்துள்ள பெரும் நெருக்கடிகளாலும் தீவிர சீர்திருத்தங்களை எதிர்த்து நிற்கக் கூடிய வல்லமை இன்று அவர்களுக்கு அவ்வளவுதூரம் இல்லையென்றே கூறவேண்டும். எனவே, பொருளாதாரத் திட்டமிடல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் விஷயத்திலுள்ள பலவீனங்களை அகற்றும் தருணம் இப்போது வந்துவிட்டது. இவ்விஷயம் தொடர்பான சிபார்சுகளை முன்வைக்க முன்னர், கடந்த காலத்தில், பணித்துறையாட்சி அமைப்பின் திறனை விருத்தி செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைச் சிறிது ஆராய்வோம்.

## ஆணைக்குழு விட்ட தவறு

பணித்துறையாட்சி அமைப்பைப் புனரமைக்க வென நியமனம் செய்யப்பட்ட பல்வேறு ஆணைக் குழுக்களும் பல்வேறு சிபார்சுகளைச் செய்துள்ளன. எனினும், துரதிர்ஷ்டவசமாக இவற்றுள் எவையும் பிரச்சினையின் உட்கருவை அதாவது பொருளாதாரத் தீர்மானங்கள் மேற்கொள்ளும் விஷயத்தைப் பற்றி ஆராயவில்லை. பணித்துறையாட்சி அமைப்புத் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்ட சீர் திருத்தங்களும், ஆணைக்குழுக்கள் செய்த சிபார்சுகளும், ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றன தொடர்பானதாகவே இருந்தன. இது, அதிகாரிகள் தங்கள் நாளாந்தக் கடமைகளைச் செய்யும் விஷயத்திலும் அவர்களது சம்பளம் போன்ற விஷயங்களிலும் சிறு சீர்திருத்தங்களைக் கொணர்ந்ததன்றி, ஆழமான மாற்றங்கள் எவற்றையும் செய்ய உதவவில்லை; குறிப்பாக அவர்கள் மேற் கொண்டு வந்த பொருளாதாரத் தீர்மானங்கள் மேற்கொள்ளும் விஷயத்தில் எதுவித மாற்றத்தையுமே செய்யவில்லை. ஊழல் அதிகாரிகளைக் கூட்டு மொத்தமாக வேலை நீக்கம் செய்வதென்ற ஐயூப்கான், யஹ்யாகான், பூட்டோ ஆகியோரது திட்டங்கள், உண்மையில் ஊழலுக்கெதிராகத் தோன்றி உருவான திட்டங்களெனக் கூற முடியாது. ஒரு வகையில், அவை ஊழலை அதிகரித்ததுடன், பொருளாதாரத் தீர்மானங்களை மேற் கொள்ளும் பணியின் தரத்தையும் சிறப்பையும் மேலும் குன்றச் செய்தன. இவ்வாறு நிர்வாக ஊழல்களுக்கெதிராகவும், பணித்துறையாட்சிக் குழுவினரின் ஆதிக்கத்துக்கெதிராகவும், அவை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட 12க்கும் மேற்பட்ட ஆணைக் குழுக்கள் செய்த சிபார்சுகள் எவ்வித பலனையும் தரவில்லை. ஒரு வேளை, இடைத்தர அதிகாரிகளது நிலையை அபிவிருத்தி செய்ய இவை உதவிற்றெனினும் கால கதியில் இவ் இடைத்தர அதிகாரிகளும் உயர் சிவில் அதிகாரிகளது வழியையே பின்பற்றத் தொடங்கினர்.

## பொருளாதார நெருக்கடிச் சபை

அரசாங்க நடவடிக்கையில் மாற்றங்களைக் கொணரக்கூடிய உண்மையான திறன் மிக்க முகவராக பணித்துறையாட்சிக் குழு விளங்குமளவு அதனைச் சீர் செய்வது ஒரு மாபெருங் காரியமாகும். இவ்வகையில், பொருளாதாரத் தீர்மானங்களை மேற் கொள்ளுவதுடன் தொடர்பான விஷயங்களை நாம் ஆராயலாம். ஏற்கனவே கூறியது போன்று, இப்பணித் துறையாட்சியினருக்கு, பொருளாதாரத் தீர்மானங்கள் தொடர்பான எவ்வித நிபுணத்துவமோ, உயர் கல்விப் புலமையோ கிடையாது. ஆட்சியாளருக்கும் அரசியல் வாதிகள் கூறுவதை வேதவாக்காகக் கொண்டே அவர்கள் செயற்படுகின்றனர். இதனால், அவர்களது வேலை ஏனோதானோவென்று அமைகின்றதே ஒழிய உணர்வு பூர்வமாக அமைவதில்லை.

இவற்றைக் கருத்திற் கொண்டு, பணித்துறையாட்சிக் குழுவின் தற்போதைய நிர்வாக, கொள்கை விடுத்தற் பணிகளுடன் இயைந்து செல்லக் கூடிய புதிய ஒரு வழியை நாம் சிபார்சு செய்கிறோம்; அமைச்சுக்களினதோ, கூட்டுத்தாபனங்களினதோ பணிகள், கருமங்கள் எவற்றுக்கும் முரணற்ற வகையில் இப் புதிய திட்டம் செயற்படும். தம்மால் தனித்துத் தீர்வு காண முடியாத பிரச்சினைகளுக்கு அவற்றுடன் இணைந்து தீர்வு காண இது உதவும். இந்த ஏஜன்ஸி 'பொருளாதார நெருக்கடிச் சபை' என அழைக்கப்படும் பொருளாதாரத்தின் நாளாந்தப் பிரச்சினைகளை இது ஆராயும். அமைச்சு, கூட்டுத்தாபனம் என்பன போலன்றி, இப்புதிய நிறுவனம், தமது அமைச்சாலோ, கூட்டுத்தாபனத்தாலோ தனியாகத் தீர்வு காண முடியாத பாரிய பிரச்சினைகள், நெருக்கடிகள் என மேற்படி அமைச்சு, கூட்டுத்தாபனம் என்பன கருதும் ஒரு விஷயத்தை அலசி ஆராய்ந்து தீர்வு காண உதவும். இதற்கான சில காரணங்களை, நாம் இங்கே காணலாம்:-

1. ஒரு தனிப்பட்ட அமைச்சு அல்லது கூட்டுத்தாபனம் தனக்கேயுரிய தனிப்பட்ட நலன்களை அபிவிருத்தி செய்திருக்கலாம்; அதனைப் பேணிக்காக்க அது விரும்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிரச்சினை ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சு/கூட்டுத்தாபனம் சார்ந்ததாகவிருக்கலாம். தற்போதுள்ள பணித்துறையாட்சியமைப்பின் கீழ், சரியான நோக்குடன் இப்பிரச்சினையை ஆராய முடியாது போகலாம்.

3. தற்போதுள்ள நிர்வாக அமைப்பால் தீர்வு காண முடியாத தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது நீண்ட காலப் பிரச்சினைகள் தோன்றலாம்.

4. அபிவிருத்தித் துறையின் நீண்ட கால அம்சங்களைக் கவனிக்கவென தொழில் சார் நிபுணர்களை நியமிக்குமாறு அமைச்சுக்களை வற்புறுத்தும் விஷயத்தில், சபை முக்கிய பங்காற்றலாம். இதன் மூலம், காலா காலத்தில் விஞ்ஞான ரீதியற்றதும், தூரதிருஷ்டியற்றனவுமான பொருளாதாரத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல் முற்றாகத் தவிர்க்கப்படலாம்.

அமைச்சர்களின் கட்டளைகளுக்குப் பணிந்து அதன் மூலம், பல சந்தர்ப்பங்களில் பிழையான தீர்மானங்களை எடுத்து, அதன் விளைவாக தேசிய நலனைப் பாதிக்கும் நடவடிக்கைகளை எடுக்க முனையும் பணித்துறை ஆட்சிக் குழுவினரைப் போலன்றி, இச்சபை சுதந்திரமான தலையீடு எதுவுமற்ற, பிரச்சினைகளைச் சரியான நோக்குடன் ஆராயும் ஒன்றாகத் திகழும். அரசாங்கத் தீர்மானங்கள் போன்று இச் சபையின் சிபார்சுகள் அமையா. பிரச்சினையை நோக்கு ரீதியாக ஆராய்ந்து அதனைத் தீர்க்க வழி கூறுவதே அதன் ஒரே நோக்கமாகவிருக்கும். இவ்வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளும் பணி நிச்சயம் முன்னேறும்; அத்துடன் நீண்ட காலத் திட்டமிடலின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் அது தெளிவுபடுத்தும்; இவற்றுக்கும் மேலாக, தனது பாரபட்சமற்றதும், விஞ்ஞான ரீதியானதுமான முடிவுகளால், பெருந்தொகையான தனியாரையும், நிறுவனங்களையும் தேசியப் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஊக்குவித்து உதவும். இதன் மூலம், பொருளாதாரத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஏகபோகம், பணித்துறையாட்சிக்குழுவினர் கையிலிருந்து பறித்தெடுக்கப்பட்டு, விஞ்ஞான ரீதியானதும், தூரதிருஷ்டியுள்ளதுமான தீர்மானங்களை மேற்கொள்ளும் ஒரு பிரிவினரிடத்தில் அதனை ஒப்புவிக்க உதவும். அத்துடன் இரு பிரிவினரது பொருளாதாரத் திட்டமிடல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் பணிகளையும் ஒப்பிட்டு பொருத்தமானது எது என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பும் மக்களுக்குக் கிட்டும். பணித்துறையாட்சி அமைப்பைப் போன்றல்லாது, இச் சபையில் அலுவலர்கள் யாவரும் சம அந்தஸ்திலேயே வைத்துக் கணிக்கப்படுவர். சிரேஷ்ட, கனிஷ்ட போன்ற பிரிவுகள் இங்கு ஏற்படா. அத்துடன், சமூகத்தின் ஒரு பிரிவினரிடத்திலிருந்து மாத்திரமன்றி, கல்விமான்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், தொழில் சார் நிபுணர்கள், அநுபவஸ்தர்கள், தமது தாய் நாட்டை வளமான பொருளாதார அடிப்படையிற் கட்டியெழுப்ப வேண்டுமென்ற வேணவாவுடன் தொழிற்படுபவர்கள் போன்ற பல்வேறு துறையினரிடத்திலிருந்தும் இச் சபை அங்கத்தவர்கள் தெரிந்தெடுக்கப்படுவர். நிரந்தரமாக நியமிக்கப்படுபவர்கள், குறித்த ஒரு பணியை மேற்கொள்ளவெனத் தற்காலிகமாக நியமிக்கப்படுபவர்கள் என இரு வகை அங்கத்தவர்களை சபை கொண்டிருக்கும். அரசாங்க நிறுவனங்களில் அல்லது தனியார் துறையில் ஏற்கனவே வேலை செய்பவர்களே இரண்டாவது கூறப்பட்ட பிரிவினராகும். தேவையான வேலைகளில், உதவிகள், சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறுவனங்களினதும் நபர்களினதும் முழு விவரத் திரட்டுக்களைச் சபை வைத்திருக்கும். அத்துடன், தகவல், புள்ளி விவரத் தரவுகள், தட்டெழுத்து, பிரதி செய்யும் வசதிகள், அங்க சம்பூரணமான நூல் நிலையம் என்பனவற்றையும் இச் சபை கொண்டியங்கும். ஓர் ஆராய்ச்சி நிறுவனம் இயங்கத் தேவையான அத்தனை வசதிகளையும் — அது சுயமாகச் செயற்படத்தக்க வகையில் அதற்கு வழங்கப்பட வேண்டும். அலுவலகக் கடமைகளைக் கவனிக்கவென ஒரு சிறு நிர்வாகப் பிரிவும் அதற்கிருக்கவேண்டும். சபைக்கும் அமைச்சர்களுக்குமிடையே காரியங்கள் சுலபமாக நடைபெறவென இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். சபை சுதந்திரமாக இயங்குதற்கான சட்ட ரீதியாகப் பிரகடனம் செய்யப்படவும் வேண்டும் என்பதுடன் அரசாங்கத்தின் பிரதம நிர்வாகிக்கு மாத்திரம் பதில் சொல்லக்கூடியதாக (பொறுப்புள்ளதாக) இருக்க வேண்டும். சபையின் நிரந்தரப் பதவிகளுக்கு நியமனம் வழங்குகையில், மேலே கூறிய கல்வி, அனுபவம் போன்ற அம்சங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், உண்மையான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவென, தகைமையின் அடிப்படையிலேயே இந் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். நியமனங்கள் செய்யப்படுகையில் இவ் விஷயம் கண்டிப்பாகக் கவனிக்கப்படவில்லையேல், தனித்து இயங்கக் கூடிய இத்தகைய ஒரு சபையை அமைப்பதில் அர்த்தமே இல்லாது போய்விடும். இச்சபையை ஸ்தாபிப்பதற்கு ஏற்படக் கூடிய செலவு ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவே. ஆனால், நாட்டுக்கு அது தரப்போகும் நன்மைகளோ அனந்தம். இவ்வகையில் பணித்துறை ஆட்சியினர், மேலும் செம்மையான வகையில் பிரச்சினைகளைக் கையாண்டு தீர்வு காணக் கூடிய சந்தர்ப்பத்தை இது அளிப்பதுடன், உண்மையில் நாட்டின் நன்மைக்காக, கடினமாகப் பாடுபடும் சிவில் சேவை அதிகாரிகள் யார், ஊழல் மலிந்த நாட்டு நலனைக் கருத்திற் கொள்ளாது தொழிற்படும் அதிகாரிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்கவும் இது உதவும்.

## திட்டமிடல் அலகு

சபை திறமையாகவும், சரியான புள்ளி விவரத் தகவல்களின் அடிப்படையிலும் இயங்கவும் வழி செய்யும் வகையில், ஒவ்வொரு அமைச்சும் அல்லது கூட்டுத்தாபனமும், ஒரு திட்டமிடல் அலகை அமைக்க வேண்டும்; ஒரு சிரேஷ்ட கொள்கை ஆலோசகர் அதற்குப் பொறுப்பாகவிருக்கவேண்டும். இவர், அமைச்சருடன் அல்லது கூட்டுத்தாபனத்தின் பிரதம நிர்வாகியுடன் நேரடித் தொடர்பு கொண்டவராகவிருப்பார். சம்பந்தப்பட்ட அமைச்சு அல்லது கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத் திட்டங்களை ஆராய்ந்து, கொள்கைகளை வகுப்பது அவரது பொறுப்பாகவிருக்கும். அத்துடன், நாளாந்தக் கொள்கைத் தீர்மானங்கள், எதிர்கால அபிவிருத்திகளைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதி செய்யவும் வேண்டும். சிவில் சேவை சம்பந்தமாக பல்ட்ஸன் பிரபுவின் அறிக்கை (1968) யின் சில பகுதிகள் இங்கு சுட்டிக் காட்டத்தக்கவை:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமது அலுவலகங்களைப் போன்று, சிரேஷ்ட கொள்கை ஆலோசகர், சேவையிலிருக்கும் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்) ஏனைய நிபுணர்கள் பற்றியும் அறிந்திருக்கவேண்டும்; அத்துடன் உலகில் ஏற்படும் புதிய சிந்தனைகள் நவீன போக்குகள் பற்றியும் அவர் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்." பொதுத்துறை நிர்வாகிகளுக்கு, ஆராய்ச்சித்துறை நிபுணத்துவம் பற்றிய அறிவை அளிக்கவென, காலா காலம் கருத்தரங்குகள், பயிற்சிக் களங்களை மேற்படி ஆலோசகர் ஏற்பாடு செய்யவேண்டும். சரியான பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கு ஆராய்ச்சி அவசியம்; எனவே, ஆலோசகர் தமது அலுவலகத்தில் பூரணமான புள்ளி விவரத் தரவுகளைத் தயார் செய்து வைத்திருப்பதுடன், மாறுதல்களைக் கவனித்து அவற்றைத் திருத்தி வரவும்வேண்டும். பொருளாதார நெருக்கடிச் சபையின் வெற்றிகரமான இயக்கத்துக்கு, இத்திட்டமிடற் கூறு, சிரேஷ்ட கொள்கை ஆலோசகர் இருவரது பணியும் பெருந் துணை புரியும். பொருளாதாரத் திட்டமிடற் துறையில் நிபுணர்களில் தங்கியிருக்கும் போக்கு அதிகரித்து வரும் இன்றைய நிலையில், இத்தகைய ஒரு திட்டமிடற் கூறு அத்தியாவசியமான ஒன்றாக மாறிவிடுகிறது; அத்துடன், பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பாரிய பணியைப் பணித்துறையாட்சியினரிடமிருந்து படிப்படியாக அகற்றவும் இது உதவும்.

## சிந்தனைக் கருக்கள் — அரசியற்கட்சிகள்

திட்டமிடற் கூறின் ஸ்தாபிதத்துடன், "சிந்தனைக் கருக்கள்" என்ற நிறுவனங்களை அமைத்துக் கொள்வது பற்றி, அரசியற் கட்சிகளை உணரவைக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. ஜனநாயக அரசியல் முறை நிரந்தர அம்சமாகிவிட்ட மேற்கு நாடுகளில் அரசியற் கட்சிகள் யாவும் தமது "சிந்தனைக் கருக்களைக்" (THINK CELLS) கொண்டுள்ளன. ஆளும் கட்சியாயிருந்தாலென்ன எதிர்க் கட்சியாயிருந்தாலென்ன, ஒவ்வொரு கட்சியும் தன்னை எதிர் நோக்கும் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வு காணவென இக்கருக்களை அல்லது ஆராய்ச்சிப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. பாகிஸ்தானிய அரசியற் கட்சிகளுக்கு—ஆட்சியிலிருக்கும் கட்சிக்கேனும்—இத்தகைய கருக்கள் இல்லாமற் போனது துரதிர்ஷ்டமேயாகும். பணித்துறையாட்சியினர் அரசை பிழைவழிச் செலுத்த இது உதவிற்று. எனவே, நாட்டு நன்மை கருதி ஒவ்வொரு அரசியற் கட்சியும் இக் கருவை அமைத்து, நாளாந்தப் பிரச்சினைகள் பற்றியும், நீண்ட காலப் பிரச்சினைகள் பற்றியும் ஆராயவேண்டும். இத்தகைய கருக்கள் அமைக்கப்படும் பட்சத்தில், நாட்டின் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும் விஷயத்தில் உதவக்கூடிய இன்னொரு ஒழுங்கமைப்பாக அவை மிளிரும்.

அரசியற் துறையில் மட்டுமன்றி, ஏனைய பல அம்சங்களிலும் நாடு இன்று முக்கியமான ஒரு காலகட்டத்தை எதிர்நோக்குகிறது. பணித்துறையாட்சிக் குழுவினருக்கு பொது மக்களிடமிருந்தும் ஏனைய தொழில்சார் வகுப்பினரிடமிருந்தும் தோன்றியுள்ள எதிர்ப்பு இவற்றுள் ஒன்று. நாட்டின் பொருளாதாரத் திட்டமிடல் விவகாரங்களில் பணித்துறை ஆட்சிக் குழுவினரது பங்கு பற்றிய பொது மக்கள் பெரு வெறுப்புக் கொண்டுள்ளனர் என்பது யாவருமறிந்ததே. கடந்த சில ஆண்டுகளாகத் திட்டமிடற் துறையிற் காணப்பட்ட வெறுப்பு மிக்க சாதனைகளின் பிரதிபலனே இது. பணவீக்கம், குறைந்த மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம், உயர் வேலையின்மைப் பிரச்சினை முதலாய பிரச்சினைகள் திட்டமிடற் துறையில் பெரும்பாலான பாகிஸ்தானியருக்குள்ள நம்பிக்கையைத் தகர்த்துவிட்டன. முன்னர் கூறியவாறு, இப்பிரச்சினைகள் திட்டமிடல் ஆணைக்குழுவாலோ அல்லது சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்களாலோ தீர்க்க முடியாதவை. ஏனெனில், தற்போதுள்ள நிறுவனங்களால் தீர்வு காண முடியாதபடியினாலேயே இப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இவ்வகையில் நாம் மேலே சொன்ன ஒரு சுதந்திரமான அமைப்பாலன்றி, இவற்றுக்குச் சரியான தீர்வு காணப்பட முடியாது.

1977ம் ஆண்டு செப்டம்பர் 8ம் திகதி சமஷ்டி பொருளாதார அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய ஜெனரல் முஹம்மது ஸியாவுல் ஹக், பின்வரும் மூன்று பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அவர்களது அதாவது பணித்துறை ஆட்சி அதிகாரிகளது உதவியை நாடினார். அவரது கருத்துப்படி, பொருளாதாரத்தைச் செவ்வனே வழி நடத்த இம் மூன்று பிரச்சினைகளும் அத்தியாவசியமாகக் காணப்பட்டன.

1. நிதி முகாமைத்துவத்தை கட்டுப்படுத்தல்,
2. நடைமுறைகளை இலகுபடுத்தல்,
3. நாடு, வெளிநாடுகளிற் தங்கியிருத்தலைக் குறைத்தல்.

இம் மூன்று பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு காண வேண்டிய ஜெனரல் ஹக் அவர்களின் ஆவலை, இக்கட்டுரையாசிரியர் நன்குணர்ந்தாலும், இவ்வேண்டுகோள் பொருத்தமற்றவர்களை நோக்கியே விடுக்கப்பட்டுள்ளதெனக் கருதுகிறார். பணித்துறையாட்சியினரால் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியுமெனில், அவர்கள் அதனை எப்போதோ செய்திருப்பர்; ஆனால், உண்மையில் இப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க அவர்களே காரணர்களாக இருந்துள்ளனர். முன்னைய ஆட்சியாளர்களும் குறிப்பிடத்தக்களவு இவர்களுக்குதவியுள்ளனர். இவ்வாதம் ஏற்றுக்கொள்ளப்படின், மேற்கூறிய பிரச்சினைகளுக்குப் பணித்துறை ஆட்சியினர் தீர்வு காண்பரெனக் கூறுவதில் எவ்வித உண்மையும் இருக்க முடியாது.

பூட்டோ ஆட்சிக் காலத்தில், நாடு வெளி நாட்டு உதவிகளிற் தங்கியிருத்தலைப் பெருமளவு குறைக்க வேண்டுமென கல்விமான்கள் சிலர் சுட்டிக் காட்டியபோது, அரசாங்கம் இதற்கு இணங்கவில்லை; வெளிநாட்டுதவிகளைக் குறைக்கும் பட்சத்தில், பாகிஸ்தானின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைத் தவிர்க்க முடியாததெனப் பணித்துறை ஆட்சியினர் கூறியதைக் கேட்டுக்கொண்டு, பூட்டோ அரசாங்கம் செயற்பட்டது. ஈற்றில், வெளிநாட்டு உதவிகளிற் பாகிஸ்தான் தங்கியிருக்கும் நிலை தங்கு தடையின்றி அதிகரித்துச் சென்றதுடன், உள்ளூர் வளங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம், வெளிநாட்டு உதவிகளில் நாடு தங்கியிருத்தல் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டுமென்ற பாகிஸ்தான் மக்களது ஆசை நிராசையாகியது. ஏற்கனவே கூறியது போன்று, இப்பணித்துறை ஆட்சிக் குழுவினர் பழைய சூழலிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றுவிக்கப்பட்டிருந்த படியாலும், வெளிநாட்டுதவிகள் மூலம் அவர்கள் பெருநன்மை பெற்று வந்தபடியாலும், அவ்வுதவிகளுக்குப் பதிலாக, அவர்கள், உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தும் மாபெரும் கடின பணியை செயற்படுத்த முன்வராமை இயற்கையே. முன்னர் போன்றே, பாகிஸ்தான் வெளிநாட்டுதவிகளிற் தங்கியிருக்கு மாற்றைக் குறைக்க, இவர்கள் ஏதும் பெரிதாக சாதிக்கப் போவதில்லை. பாகிஸ்தானின் இத்திட்டமிடல் பணித்துறையினர், நாட்டின் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தலன்றி, அதன் அழிவிலேயே அதிக நன்மையடைந்தனர் எனக் கூறுதல் சரியாயிருக்கும். வெளி நாட்டுதவிகள் தேடியும், அவை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தவுமென அடிக்கடி குஷியாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட அதிகாரிகளைப் பொறுத்தளவில் இது முழு உண்மையாகக் காணப்பட்டது. நாட்டு அபிவிருத்திக்கு இவ்வழியைக் கையாள்வது உண்மையில் வெட்கக்கேடானதாகும்; சுய சார்பான ஒரு பொருளாதாரத்தை இதன் மூலம் ஒருபோதும் உருவாக்க முடியாது; மாருக, அதனை ஒரு நிரந்தரக் குறை விருத்தி நாடாக வைத்திருக்கவே இது உதவும்.

கடந்த காலச் சம்பவங்களை தற்போதைய ஆட்சியினர் (அல்லது இனி வரப்போகும் எவ் அரசாங்கமும்) ஒரு படிப்பினையாகக் கொள்ளும்பட்சத்தில், இந்நாட்டில் ஒரு சுய சார்புப் பொருளாதாரத்தை ஏற்படுத்தப் பணித்துறை ஆட்சியினர் உதவுவர் என அவர்கள் (தற்போதைய ஆட்சியினர்) கருதுவது கானல் நீர்க் கதையாகவே முடியும்.

சுய சார்புப் பொருளாதாரமொன்றை உருவாக்கத் தேவையான மாற்றங்களைக் கொணர்வதிலும், நாட்டில் தேசிய ரீதியான அபிவிருத்தித் திட்டமொன்றை உருவாக்குவதிலும், பணித்துறை ஆட்சி முற்ருகத் தவறிவிட்டதென்பது யதார்த்தபூர்வமாக—ஐயத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகளிடம் புதிய பொறுப்பை ஒப்படைத்ததினுல் ஏற்பட்ட தீய விளைவுகளை நன்கு அனுபவித்துவிட்டோம். பாகிஸ்தான் ஸ்தாபிக்கப்பட்டவுடன், இப்புதிய பணியை மேற்கொள்ள ஒரு மாற்று அதிகாரிகள் பிரிவு இல்லாமலிருந்தபடியாலேலே இந் நிலை தோன்றியதென்பதை நாம் ஒப்புக்கொள்கிருேம்; ஆனல் இன்று மூப்பது வருடங்கள் கழிந்துவிட்டன; அத்துடன், நாட்டின் அபிவிருத்திக்கு மேற்படி அதிகாரிகள் கையாண்ட வழிவகைகள் முற்ருகப் பிழைத்துவிட்ட நிலையில், பொருத்தமான புதிய வழிவகைகளைக் கையாள வேண்டிய தருணம் வந்துவிட்டது.

மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய வழிவகைகளுள் ஒன்ருக, உத்தேச பொருளாதார நெருக்கடிச்சபை திகழலாம்; அபிவிருத்திப் பிரச்சினைகள் அத்தனையையும் தீர்க்க இது உதவாவிட்டாலும், பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பணியின் தரத்தை உயர்த்த இது மூலகாரணியாகத் திகழும். அத்துடன், பொருளாதாரப் பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் பூரணமாக மதிப்பீடு செய்யும் அதன் பணியின் மூலம், தொழில்சார் நிபுணர்கள், கல்விமான்கள், அனுபவஸ்தர்கள், மற்றும் தேச நலனில் அக்கறை கொண்ட மக்கள் அனைவரும், நமது தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விஷயத்தில் தங்கள் பணியைத் தங்குதடையின்றி ஆற்றச் சந்தர்ப்பம் கிட்டும். இக்குறிக்கோள் நிறைவேறும் பட்சத்தில், தேசியப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் விஷயத்தில் பணித்துறை ஆட்சியினர் கொண்டாடும் தனியுரிமை தன்னலேயே பறிபோய்விடும். ஈற்றில் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பணி "அதிகாரி"களிடமன்றி, தகைமையும், நிபுணத்துவமும், விஞ்ஞான ரீதியாகப் பிரச்சினைகளை அணுகும் திறனும் கொண்ட அனுபவஸ்தர்களின் கையில்—பொருத்தமானவர்கள் கையில்—வந்து சேரும்.

(17ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகின்றது. இது இலங்கைச் சூழ்நிலையொன்றில் கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு முற்றிலும் பொருத்தமற்ற முகாமையனுபவமும், பின்னணியுமாகும். ஆதலால், ஒரு வேளை உயர்தர முகாமைத் தகைமையைக் கெகாண்டிருக்கக்கூடிய பயிற்சிபெற்ற ஆளணி மீது தனியார்துறை முகாமையைத் திணிக்கும் இந்தப் பரீட்சை வெற்றி பெறுமா அல்லது வேறுவிதமாக முடியுமா என்பதை எதிர்வரும் மாதங்களில் உற்றுக் கவனித்துவருவது சுவையாயிருக்கும். இப்பரீட்சையின் பெறுபேறு தெரிய பல மாதங்களோ அல்லது வருடங்களோ ஆகும். இலங்கை ஸ்தாபனங்கள் செயல்படும் விதத்தை அறிந்துணர்ந்துள்ளவர் களிடையே மிகுந்த சந்தேகம் நிலவுகின்றது. இத்தகைய ஒரு பிரமாண்டமான தொழிற்சாலையுடனும், ஒரு பெரிய தொழிலாளர் படையோடும் பெருஞ் செலவேற்படுத்தக்கூடிய இத்தகைய பரிசோதனை நடத்தப்படுவதை முழு நாடும் தாங்குமா வென்ற கேள்வியை அவர்கள் எழுப்புகின்றனர்.

தேசிய புடவைக் கூட்டுத்தாபன உதாரணம் அநேக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் உள்ள ஒரு பிரதான பிரச்சினையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. தொழிலாளர்கள் தொடக்கம் முகாமையாளர்கள்வரை உயர் கல்வியும் பயிற்சியும் பெற்றுள்ள ஊழியர் படையொன்று இருக்கின்றது; ஆனல், எந்நாளும் நிலையாகச் சிறந்த அளவுக்குச் செயலாற்றுவதில்லை. இந்நிலைமைக்கான இன்னெரு காரணமும் அநேக சமயங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அஃதாவது, உயர் பீடத்திலுள்ள முகாமை அதிகாரிகள் (அதாவது சபை அங்கத்தவர்கள்) அடிப்படை முகாமைப் பிரச்சினைகளை உணர்ந்திருக்காததாகும். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, சிக்கலான ஸ்தாபனங்களை நடத்துவதில் அநேகமாக எவ்வித முன்னனுபவமுமில்லாதவர்கள் அநேக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உயர் முகாமை மட்டத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிருர்கள். இவ்விதமாக, அநேக சந்தர்ப்பங்களில் ஏற்ற பின்னணி இல்லாத ஆசிரியர்களோ அல்லது வழக்கறிஞர்களோ நியமிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் நாடு பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்துள்ளது. அவற்றின் திறமையான முகாமை, இத்துறையில் அனுபவமில்லாதவர்களில் தங்கியிருக்கவில்லை; ஆனல், அந்த அனுபவமும் அவற்றை நடத்தும் ஆற்றல்களும் உள்ளவர்களில்தான் தங்கியுள்ளது.




கூடிய விளைச்சல் தரும் நெல்லினங்கள். இப்பரிசோதனை நிலம் ஏக்கருக்கு 80 புசலுக்கும் அதிகமான விளைச்சலைத் தந்துள்ளது.



ஹல்தும்முல்லையில் நடைபெறும் கரும்பு அறுவடை. சமீப காலத்தில் பிரதான ஓர் உள்நாட்டுப் பயிராக இது வளர்ச்சி பெற்றுள்ளது.



மிளகாய் — இறக்குமதித் தடையினால் கடந்த பத்தாண்டு காலத்தில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. விளைச்சலை அதிகரிப்பது பற்றி விஸ்தரிப்பு உத்தியோகத்தர் ஒருவர் உலர்வலய விவசாயிகளுக்கு விளக்கமளிப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

சென்மதி நிலுவைப் பிரச்சினைகளால் உணவு இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டதுடன் உப உணவுப் பயிர்த் துறை துரித வளர்ச்சி பெறலாயிற்று. இதனால் மிளகாய், வெங்காயம் உருளைக் கிழங்கு போன்றவற்றைப் பொறுத்தளவில் நாடு தன்னிறைவடையும் நிலையை எய்தியது. விளைச்சலை அதிகரிப்பதில் இப்பொழுது கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது.



இறுங்கு— உலகின் உலர் வலயங்களில் வாழும் 40 கோடி மக்களின் முக்கியமான இரு பிரதான உணவுப் பொருட்களில் இதுவும் ஒன்றாகும். அண்மைய வருடங்களில் ஸ்ரீலங்காவிலும் அது பயிரிடப்பட்டு வருகின்றது.



நிலக்கடலை சிறு விவசாயிகளின் பிரதான உப-உணவுப் பயிராக இருந்து வருகின்றது.



உலர் வலயத்தில்—சிறப்பாக வட பகுதியில்—வெங்காயச் செய்கை முக்கியத்துவம் பெற்று வருகின்றது. அமோக விளைச்சலொன்று அறுவடை செய்யப்பட்டிருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக பொருளியல் நோக்கை வெளியிடுகின்றது. சுதந்திரமான விசாரணைகளின் மூலமும், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் மூலமும் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எம் குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும் நாடெங்கணும் பரந்து காணப்படும் அதன் 200க்கும் மேற்பட்ட கிளைகளின் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் மக்கள் வங்கி பூரணமான வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்களின் உதவியுடன் வங்கியின் சில பிரதான கிளைகள் சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டு வருகின்றன.

விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஓவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக்ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org